# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

# MITRA TIMES - Tamil & English Monthly


மலர்: XI இதழ்: 4 | அக்டோபர் 2024 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ.20/-

Vol.: XI Issue: 4 | September 2024 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20




கவனிப்பும்! கவன ஈர்ப்பும்!

- ஆசிரியர் கடிதம்

திரும்ப பார்க்க வைக்கும் திருப்பதி லட்டு வரலாறு!

மனைவியை காதலியாக நேசியுங்கள்!

நித்ய கல்யாணிப் பூக்களின் மருத்துவ குணங்கள்!

## மாண்புமிகு தலைமை நீதிபதி வீட்டு நிகழ்ச்சியில் மாண்புமிகு பிரதமர் பங்கேற்கலாமா?

## - ஓய்வு பெற்ற நீதிபதி அரி பரந்தாமன் கேள்வி!

# Gandhiji's ideology!


Gandhi believed that at the core of every religion was truth (satya), non-violence (ahimsa) and the Golden Rule. Despite his belief in Hinduism, Gandhi was also critical of many of the social practices of Hindus and sought to reform the religion.

"Mahatma Gandhi (born October 2, 1869, Porbandar, India—died January 30, 1948, Delhi) was an Indian lawyer, politician, social activist, and writer who became the leader of the Indian Independence Movement against British rule. As such, he came to be considered the father of his country. Gandhi is internationally esteemed for his doctrine of nonviolent protest (satyagraha) to achieve political and social progress."

Truth and Non-violence: They are the twin pillars of Gandhian thoughts.For Mahatma Gandhi, truth translated into words and deeds. For him, the ultimate truth was God and morality. Thus moral laws and code became its basis. As far as Mahatma Gandhi was concerned, non-violence was active love, the direct opposite of violence. Satyagraha: Satyagraha meant the exercise of the purest soul-force against all forms of injustice, oppression and exploitation. The method secures rights by personal suffering and not inflicting injuries Sarvodaya: Sarvodaya is a term meaning 'Universal Uplift' or 'Progress of All'. The term was first coined by Mahatma Gandhi as the title of his translation of John Ruskin's tract on political economy, "Unto This Last". Swaraj: Although the word swaraj means self-rule, Mahatma Gandhi gave it the content of an integral revolution that encompasses all spheres of life. Trusteeship: Trusteeship was a socio-economic philosophy that meant the rich people would be the trusses of trusts and charities set up for the purpose of the common people. Swadeshi:Swadeshi, the adjectival form, means of one's own country, but can be loosely translated in most contexts as self-sufficiency. Swadeshi is the focus on acting within and from one's own community, both politically and economically.

It is the interdependence of community and self-sufficiency. Although it is widely believed that Gandhism is a challenge to pursue in the 21st century; that is not the case. Gandhi's principles can be applied in the following ways:

Concept of Society: The contemporary society is a complex whole which is neither value-oriented nor purely speculative. Tradition and authority which were once revered are now utterly disregarded. The whole of humanity is steered by jealousy, distrust, suspicion and hatred. Violence, poverty and intolerance are on the rise. The outer homogeneity brought by science and civilization doesn't emanate with the inner unity of our souls. So, there is a dire need to reform our minds. He says that adherence to truthfulness should be our only purpose of existence. The ultimate end of the individual is the realization of truth and justice through consistent endeavours, not only for ourselves but for the entire humanity. Economy: While it is generally recognized that socialism can't be established without the use of force, Mahatma Gandhi's idea of socialism involves the use of non-violence. He didn't believe in extremes and neither appreciated complete liberty, as in a capitalist democracy, nor regimentation as in communist dictatorships. His idea was that power is to be as decentralized as possible. Globalization means integration of world economies through cross-country exchange of goods, ideas, information, and many services. Dominant economies with the aid of Multinational Companies and International Organizations are serving their interests to the extent that often the interest of the poor countries is compromised. Education: Mahatma Gandhi thought that humanization of knowledge can lead us to immunization of ideas against communal distrust. He was critical of traditional education and said that being literate doesn't mean being educated. Swaraj: Swaraj meant to be free from external influences and foreign control. Now the country is independent and free from any external control. In today's competitive and fast-paced world, there must be control over our inner conscience. Self-empowerment is the need of the hour. Every person should search for their own identity, and shouldn't try to fit themselves in the moulds created by society. Technology: The Gandhian principles are still relevant and technology can be used to enhance their effectiveness. The main tenet that he propagated was Satya.





Concept by:
S.SHRUTHI LAKSHMI
B.Sc., (psychology)

ஆசிரியர் கடிதம்

# கவனிப்பும்! கவன ஈர்ப்பும்!

**அ**ன்புடையீர் வணக்கம்!

திட்டமிட்டபடி செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி நடக்க இருந்த விருது வழங்கும் விழா சற்று தள்ளி போயிருக்கிறது. விரைவில் அது குறித்த அறிவிப்பை நமது மித்ரா டைம்ஸில் வெளியிடுகிறோம்.

பிறந்தநாளை வெகு விமரிசையாக கொண்டாட திட்டமிட்டு இருந்தாலும் இந்த ஆண்டு எளிமையாக அதை முடித்துக் கொண்டோம்.

ஆனாலும் எளிமையில் இனிமை என்று சொல்லும் அளவுக்கு இந்த பிறந்தநாள் அமைந்துவிட்டது. வழக்கமாக நண்பர்களுடன் கேக் வெட்டி கொண்டாடி மகிழ்ந்தோம். எந்த சூழலிலும் நட்பு என்பது கற்பைப் போல் பாதுகாத்து வர வேண்டும் என்பதை என்னுடைய நண்பர்கள் மூலம் நான் எப்போதும் தெரிந்து கொள்கிறேன்.



அடுத்து என்னுடைய பிறந்த நாளை ஒட்டி சென்னை கொளத்தூர் விநாயகபுரத்தில் அமைந்துள்ள சமர்ப்பணம் என்ற மனநலம் குறைந்த ஆதரவற்ற உள்ளங்களின் ஒளி விளக்கேற்றும் இல்லத்துக்கு சென்று அங்குள்ள அவரோடு கொண்டாடினேன். கொண்டாடினேன் என்று சொல்வதை விட அவர்களோடு நெஞ்சத்தை இணைத்துக் கொண்டேன் என்று சொல்வது தான் சரியாக இருக்கும். ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போது எல்லா உறுப்புகளும் சரியாக அமைவது என்பது பெற்றோர் செய்த புண்ணியம் என்பதும் இறைவன் அளித்த வரம், கொடை என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம்.



அந்த வகையில் இந்த இல்லத்தில் இருந்த பிள்ளைகளோடு நாம் அன்பை வார்த்தைகளால் பரிமாறிக் கொண்டோம். நாம் சொல்வதை அவர்கள் கவனிக்கிறார்களா என்பதை விட அவர்களது கவனத்தை நாம் ஈர்த்தோமா என்பது புரியாமலேயே அங்கிருந்து வந்து விட்டோம்.

கவனிப்பு, கவனித்தல் என்பது ஆங்கிலத்தில் taking care, observation என்று குறிப்பிடப்படும். அதைப்போல கவன ஈர்ப்பு என்பது insight, attraction என்று குறிப்பிடப்படும். தமிழில் எப்படி ஒரு வார்த்தை அல்லது ஒரு எழுத்து மாறினால் பொருள் மாறுபட்டு தவறாக எடுத்துக் கொள்ளப்படுமோ அதைப்போல ஆங்கிலத்திலும் ஒரு வார்த்தை அல்லது உச்சரிப்பு மாறினால் பொருளும் தவறாக எடுத்துக் கொள்ளப்படும்.

வளர்ந்து வரும் தொழில்நுட்பத்துக்கு ஏற்ப இப்போதெல்லாம் யாருக்காவது செய்தி அனுப்ப நினைக்கின்ற நண்பர்கள் அதை வாய்ஸ் டைப்பிங் மூலமாக அனுப்புகிறார்கள் அப்படி அனுப்பும் போது அவர்கள் உச்சரிக்கின்ற வார்த்தைக்கும்

பதிவாகின்ற வார்த்தைக்கும் ஏற்படுகின்ற வித்தியாசத்தால் பொருள் மாறுபடுவது மட்டுமல்ல தவறாகவும் பொருள் கொள்ளப்படும். உதாரணத்துக்கு புலவர் என்று சொல்லும் போது அது கயவர் என்று வருவதற்கு வாய்ப்பு உண்டு. எனவே எந்த செயலை செய்தாலும் அதில் கவனமும் பிறர் கவனத்தில் அது படும்போது தவறாக இல்லாமல் இருந்தால் தான் பொருள் தவறாக எடுத்துக் கொள்ளப்படாது.

அதைப்போல இன்றைக்கு இணையதளத்தில் பிறர் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதற்காக எதை வேண்டுமானாலும் பதிவிடுகிறார்கள் குறிப்பாக எந்த வார்த்தை கெட்ட வார்த்தை என்று நம்மில் பெரும்பாலோர் நம்புகிறோமோ அந்த வார்த்தையை சர்வசாதாரணமாக உபயோகித்து நம்முடைய முகத்தை சுளிக்க வைக்கிறார்கள்.

அதை குடும்பத்தோடு நாம் பார்க்கக் கூடிய சூழல் இல்லாத அளவுக்கு கைபேசியில் ஆபாச படங்களும் நடனங்களும் வார்த்தைகளும் வருகின்றன. இதை கட்டுப்படுத்த சட்டரீதியாக ஏதேனும் வழி உள்ளதா என்று தெரியவில்லை. அரசு உடனடியாக இதில் தலையிட்டு உரிய சட்ட விதிகளை உருவாக்க வேண்டும். அப்போதுதான் பிறர் கவனத்தை இருக்கிறேன் என்கிற பெயரில் பலர் செய்யும் அநியாயங்கள் தடுக்கப்படும். அதை நாம் பார்ப்பதை தவிர்க்கலாமே என்று நினைத்தாலும் செல்பேசியை திறந்தாலே தானாக வந்து விடுகிற அத்தகைய ஆபாசங்களை நாம் நினைத்தாலும் தவிர்க்க முடியவில்லை என்பதுதான் காரணம்.

எனவே இதுகுறித்து அரசு ஒரு முடிவு எடுக்க வேண்டும். இளைஞர்களின் போக்கை மாற்றி அவர்களின் எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டும்.

*- எம்.எஸ்.மூர்த்தி*

# உள்ளே...





**மனித குலத்தின் வெற்றி போர்க்களத்தில் அல்ல, கூட்டு பலத்தில் தான்! – ஐ.நா. சபையில் பிரதமர் மோடி பேச்சு!** 7




**ஆபாச பட பதிவிறக்க வழக்கு: தனி நீதிபதியின் உத்தரவை ரத்து செய்துஉச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு!** 9



**மம்முட்டி வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருப்பது எப்படி!** 22



**இனிமே தப்பு பண்ணுவியா?** 29



**உழைப்பு என்றும் வீணாகக் கூடாது** 41



**வாழ்க்கையில் நம்மை உயர்த்தும் நற்குணங்கள்!** 49




# சுயம்புவாக முன்னேறிய சாதனைப் பெண்மணி ராதா வேம்பு!

**போட்டி** நிறைந்த வர்த்தக உலகில் ஒருவர் வெற்றி பெறுவது என்பது சாதரண காரியம் அல்ல. அதுவும் ஒரு பெண் சுயமாக முன்னேறி தொழிலில் வெற்றி பெறுவது அசாரண செயலாகும். இருப்பினும் பல பெண்கள் பல்வேறு தடைகளை தாண்டி தொழில்முனைவோராக வெற்றி பெற்றுள்ளனர்.

அவர்களில் ஒருவர்தான் தொழில்நுட்ப நிறுவனமான Zoho Corporationன் இணை நிறுவனர்களில் ஒருவரான ராதா வேம்பு. இந்திய பணக்காரர்கள் பட்டியலை பார்த்தாலே இவர் எந்த அளவுக்கு வளர்ந்துள்ளார் என்பதை நாம தெரிந்து கொள்ளலாம்.1972ல் சென்னையில் பிறந்தவர். ராதா வேம்புவின் தந்தை சாம்பமூர்த்தி வேம்பு சென்னை உயர் நீதிமன்றத்தில் ஸ்டெனோகிராபராக இருந்தார். ராதா வேம்பு புகழ்பெற்ற மெட்ராஸ் ஐ.ஐ.டி.யில் தொழில்துறை நிர்வாகத்தில் பட்டம் பெற்றவர். 1997ல் பன்னாட்டு தொழில்நுட்ப நிறுவனமான Zoho Corporation நிறுவனத்தில் சேர்ந்தார். இந்த நிறுவனம், 1996ல் அவரது அண்ணன் ஸ்ரீதர் வேம்பால் தொடங்கப்பட்ட அட்வென்ட்நெட் என்ற நிறுவனம்தான்.

ராதா வேம்பு பல்வேறு கல்வித் திட்டங்கள், உதவித்தொகைகள் மற்றும் இளைஞர்களை மேம்படுத்துவதற்கான கல்வி முயற்சிகளுக்கு ஆதரவளித்து வருகிறார். விவசாய தன்னார்வ தொண்டு நிறுவனமான ஜானகி ஹைடெக் அக்ரோ மற்றும் ரியல் எஸ்டேட் நிறுவனமான ஹைலேண்ட் வேலை என்ற நிறுவனத்தின் இயக்குனராகவும் உள்ளார்.



தொழிலதிபர்கள் என்றால் அது ஆண் வர்க்கத்தை சார்ந்தவர்களை மட்டுமே குறித்து வந்தது என்ற பார்வையை உடைத்து தன்னாலும் முடியும் என்று தன்னை மட்டுமே நம்பி தன்னுடைய உழைப்பை மட்டுமே நம்பி உயர்ந்த சாதனைப் பெண்மணிதான். ராதா வேம்பு.

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 11 அக்டோபர் 2024 டைம்ஸ்- 3

தலைவர் / நிர்வாக இயக்குனர்
**எம்.எஸ். மூர்த்தி**

துணை தலைவர் /இணை இயக்குனர்
**திருமதி சுஜாதா மூர்த்தி**

நிர்வாக சிறப்பு ஆலோசகர்
**கலைமாமணி நடிகர் பூ.விலங்கு மோகன்**

தலைமை செய்தி ஆசிரியர்
**மணவூர்.கி.விடாரண்யம்**

தலைமை நிர்வாக ஆசிரியர்கள்
DR. **ஆ.தமிழ்மாறன்** எம்.ஏ.எம்.பில்
9789016153
DR.**ப.குணசீலன்** எம்.பி.ஏ.,
9962531325

நிர்வாக ஆசிரியர்
**ஆர்.குணசேகரன்**

செய்தியாளர்கள்
**பி.விநோத், வெ.சுரேஷ்**

செய்தி இணை ஆசிரியர்கள்
**துடுப்பதி ரகுநாதன்**
**கவிஞர் பண்ருட்டி சுசுந்தீனா**
**கோவை.பி.முத்துராஜ்**
**சென்னை எம்.ஜி.ரவீந்திரன்**

இணையதள செய்தியாளர்
**ஆர்.கோபிநாத்**

சட்ட ஆலோசகர்
**வி.என்.பிரசாத்** எம்.ஏ.எம்.பில்

வடிவமைப்பு
vidapublications@gmail.com

விளம்பரம் சந்தா தொடர்புக்கு
**சி.இளவரசி** - 044 23743007 /08

**அலுவலகம்:**
**001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ, 9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.**
**தொடர்பு: 044-2374 4661, 23743 007/8**
**6374285644**
mitratimes2015@gmail.com
www.mitratimes.com




வெறும் பணத்தின் மதிப்பு மட்டுமே இவருக்கு உயர்ந்த இடத்தை வழங்கவில்லை அதைவிட அந்த இடத்துக்கு வருவதற்கு அவர் தந்த உழைப்பு, உறுதி இவைதான் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள்.

இவருடைய வாழ்க்கை வரலாற்றை படிக்கின்ற பெண்கள் தாங்களும் அதைப்போல முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குகின்ற அளவுக்கு இவரது உழைப்பு இருந்திருக்கிறது மேலும் மேலும் உயர்ந்து இந்தியாவுக்கு பெருமை சேர்ப்பது மட்டுமல்ல பெண் சமூகத்திற்கு ஒரு முன்னோடியாக விளங்கும் இவர் பெண்களின் எதிர்காலத்துக்கு முன்னுதாரணமாக இருப்பார் என்று மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துகிறோம்.

*- சுஜாதா மூர்த்தி*

# மனித குலத்தின் வெற்றி போர்க்களத்தில் அல்ல, கூட்டு பலத்தில் தான்!

## ஐ.நா. சபையில் பிரதமர் மோடி பேச்சு!



அமெரிக்காவில் நடைபெற்ற குவாட் உச்சி மாநாடு மற்றும் ஐ.நா பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்க 3 நாள் பயணமாக பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்கா சென்றார். பயணத்தின் முதல் நாளில் குவாட் உச்சி மாநாட்டில் பங்கேற்ற அவர், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உள்ளிட்ட தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அதைத் தொடர்ந்து, நியூயார்க்கில் அமெரிக்க வாழ் இந்தியர்களைச் சந்தித்து அவர்களின் மத்தியில் உரையாற்றினார்.

அமெரிக்க பயணத்தின் நிறைவு நாளில் நியூயார்க்கில் ஐக்கிய நாடுகள் சபையின் 79வது பொதுச்சபை கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார். அப்போது பேசிய பிரதமர் மோடி, "மனித குல வரலாற்றில் நடந்த மிகப்பெரிய தேர்தலில், 3வது முறையாக சேவை செய்ய இந்திய மக்கள் எனக்கு வாய்ப்பு வழங்கி உள்ளனர். உலக மக்கள் தொகையில் 6ல் ஒரு பங்கினரின் குரலை எதிரொலிக்க இங்கு வந்துள்ளேன்.

உலகின் எதிர்காலம் குறித்து சர்வதேச நாடுகள் விவாதிக்கும்போது மனிதனை மையமாக கொண்ட அணுகுமுறைக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். மனித குலத்தின் வெற்றி என்பது போர்க்களத்தில் இல்லை. நமது கூட்டு பலத்தில் தான் உள்ளது. நிலையாள வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கும் அதேவேளையில், மனித நலன், உணவு மற்றும் சுகாதார பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும்.

இந்தியாவில் 25 கோடி மக்களை வறுமையிலிருந்து விடுவிப்பதன் மூலம் நிலையாள வளர்ச்சி வெற்றிகரமாக இருக்க முடியும் என்பதை இந்தியா நிரூபித்துள்ளது. இந்தியா தன் வெற்றியின் அனுபவத்தை உலகளாவிய தெற்கிலும் பகிர்ந்து கொள்ள தயாராக உள்ளது. உலகளாவிய அமைதி மற்றும் வளர்ச்சிக்கு சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்கள் செய்வது அவசியம்.

உலக அமைதி மற்றும் பாதுகாப்புக்கு பயங்கரவாதம் மிகப்பெரிய அச்சுறுத்தலாக தொடரும் நிலையில், மறுபுறம், சைபர் பாதுகாப்பு, கடலோர பாதுகாப்பு மற்றும் விண்வெளி ஆகியன புதிய அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. இந்த விவகாரங்களில், உலகத்தின் நோக்கங்களுக்கு ஏற்ப சர்வதேச அளவிலான நடவடிக்கைகள் இருக்க வேண்டும்.

தொழில்நுட்பத்தின் பாதுகாப்பான மற்றும் பொறுப்பான பயன்பாட்டிற்கு சீரான ஒழுங்குமுறை தேவை. டிஜிட்டல் பொது கட்டமைப்பு என்பது ஒரு பாலமாக இருக்க வேண்டும். தடையாக இருக்கக்கூடாது. உலக நலனுக்காக டிஜிட்டல் பொது கட்டமைப்பை பகிர்ந்து கொள்ள இந்தியா தயாராக உள்ளது. இந்தியாவை பொறுத்தவரை ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம் என்பதில் உறுதியாக உள்ளோம். " என்று தெரிவித்தார்.

## ஆபாச பட பதிவிறக்க வழக்கு:

# தனி நீதிபதியின் உத்தரவை ரத்து செய்து

## உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு!



ஆபாசப் படங்களைப் பதிவிறக்கம் செய்து பார்ப்பது குற்றமல்ல, அதை மற்றவர்களுக்குப் பகிர்வதே குற்றம் என்று தீர்ப்பு சொல்லி இளைஞர் ஒருவரை தனி நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் விடுதலை செய்ததை உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது. சென்னை, அம்பத்தூர் காவல் நிலையத்தில் 28 வயது இளைஞர் ஒருவர் குழந்தைகள் தொடர்பான ஆபாச காணொளிகளை பதிவிறக்கம் செய்து பார்த்ததாக, அவர் மீது குழந்தைக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் (போக்சோ) மற்றும் தொழில்நுட்பச் சட்டப் பிரிவுகளின் (ஐ.டி. சட்டம்) கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

கடந்த ஜனவரி மாதம், தன் மீதான வழக்குகளை ரத்து செய்யக்கோரி அந்த இளைஞர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் "ஆபாசப் படங்களைப் பதிவிறக்கம் செய்து பார்ப்பது குற்றமல்ல அதை மற்றவர்களுக்குப் பகிர்வதே குற்றம். எனவே போக்சோ சட்டம் மற்றும் ஐ.டி. சட்டத்தின் கீழ் மனுதாரர் மீது குற்றம் சுமத்த முடியாது," எனக் கூறி, இளைஞர் மீதான வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டிருந்தார்.

மேலும் அந்த உத்தரவில், "போக்சோ சட்டம், 2012 பிரிவு 14 (1)இன் படி, குற்றம்சாட்டப்பட்ட நபர் ஆபாச நோக்கங்களுக்காக குழந்தையைப் பயன்படுத்துவது குற்றம். ஐ.டி.

சட்டம், 2000, பிரிவு 67 (பி)இன் படி, குழந்தைகள் தொடர்பான ஆபாசக் காணொளிகளை உருவாக்குவதோ, பரப்புவதோ, வெளியிடுவதோ குற்றம். மனுதாரர் அதுபோன்ற குற்றச்செயலில் ஈடுபடவில்லை என்பதால் அவர் மீதான வழக்கு ரத்து செய்யப்படுகிறது," என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து 'Just Rights for Children Alliance' என்ற தன்னார்வ அமைப்பு கடந்த மார்ச் மாதம் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.

'சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவு குழந்தைகளின் உரிமைகளுக்கு எதிரானது, சட்டவிரோதமானது' என உச்சநீதிமன்றத்தில் அந்த தன்னார்வ அமைப்பு வாதிட்டது.

அப்போதே உச்சநீதிமன்ற நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் அளித்த தீர்ப்பு குறித்து தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தனர்.

"ஒரு தனி நீதிபதி எவ்வாறு இதுபோல உத்தரவிட முடியும்? இது மிகக் கொடுமையானது," என்று அவர்கள் தெரிவித்திருந்தனர். இந்த மேல்முறையீட்டு வழக்கில் செப்டம்பர் 23ல் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதில் "குழந்தைகள் தொடர்பான ஆபாசப் படங்கள் பார்ப்பது குறித்து சென்னை உயர்நீதிமன்ற தனிநீதிபதி பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது," என உத்தரவிடப்பட்டுள்ளது.குழந்தைகள் தொடர்பான ஆபாசப் படங்களை செல்போனில் வைத்திருப்பதும், அதை தனிப்பட்ட முறையில் பார்ப்பதும் போக்சோ சட்டத்தின் கீழ் குற்றமாகும் எனவும் உச்சநீதிமன்ற அமர்வு தெரிவித்துள்ளது.

மேலும்,"'குழந்தைகள் ஆபாசப்படங்கள்' என்ற வார்த்தை, உயர்நீதிமன்றங்கள் மற்றும் அரசியல் சட்டப் பிரிவுகளிலும், பயன்படுத்தப்படுகிறது. அதற்கு பதிலாக, 'குழந்தைகள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் தொடர்பானவை' (Child Sexual and Exploitative Abuse Material- CSEAM) என்று பயன்படுத்த வேண்டும்," என உச்சநீதிமன்ற அமர்வு அறிவுறுத்தியுள்ளது.

இதற்காக போக்சோ சட்டத்தில் திருத்தம் கொண்டுவர மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.



# மாண்புமிகு தலைமை நீதிபதி வீட்டு நிகழ்ச்சியில் மாண்புமிகு பிரதமர் பங்கேற்கலாமா?

## - ஓய்வு பெற்ற நீதிபதி அரி பரந்தாமன் கேள்வி!

இந்திய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சந்திர சூட் இல்லத்தில் செப்டம்பர் 11 அன்று செய்யப்பட்ட விநாயகர் பூஜை வீடியோவானது மிகப்பெரும் பேசு பொருளாகவும், பெரும் சர்ச்சையாகவும் ஆகி உள்ளது. காரணம் , அதில் கலந்து கொண்டவர் இந்திய நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி மட்டும் தான். அவரைத் தவிர வேறு எவரையும் தலைமை நீதிபதி அழைக்கவில்லை போலும்.

இந்த அணுகுமுறை என்ன மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தும்? அந்த விளைவுகள் ஏற்படுத்தவிருக்கும் பாதிப்புகள் என்ன? நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள அரசுக்கு எதிரான வழக்குகளின் கதி என்னவாகும்..? மக்களின் கடைசி நம்பிக்கையாக இருக்கும் நீதிமன்றங்களின் மாண்பு இனி என்னாகும்?

அந்த வீடியோவில் பிரதமர் தலைமை நீதிபதி, தலைமை நீதிபதியின் மனைவி மற்றும் இருவர் மட்டுமே உள்ளனர். அந்த இருவரும் தலைமை நீதிபதியின் குடும்ப உறுப்பினர்கள் போல உள்ளது. விநாயகர் பூசைக்கு சென்ற பிரதமர் அந்த பூசையில் பூசாரியாக செயல்பட்டுள்ளார்.

தலைமை நீதிபதி அவர்கள் பிரதமர் மட்டுமின்றி எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உட்பட அனைத்து கட்சி தலைவர்களையும் அவரது இல்ல விநாயகர் பூஜைக்கு அழைத்து இருந்தால் கூட, அதுவும் முறையற்றது தான்.

தலைமை நீதிபதி தனது வீட்டில் விநாயகருக்கு பூஜை செய்வது பற்றி எவருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது. அதே போல பிரதமரும் அவரது வீட்டில் விநாயகருக்கு பூஜை செய்து இருப்பினும் அதில் ஏதும் ஆட்சேபனை இருக்க முடியாது. மக்களுக்கு மிகப் பெரிய நம்பிக்கை அளிப்பதாக நீதிமன்றங்கள் அதிலும் குறிப்பாக உச்ச நீதிமன்றமும், உயர்நீதிமன்றங்களும் இருக்கின்றன. காரணம், அவைகள் சுயேச்சையாக அரசின் நிர்பந்தங்கள் ஏதும் இன்றி இயங்குகின்றன என மக்கள் நினைக்கின்றனர்.

தலைமை நீதிபதி பதவியில் இருக்கும் ஒருவர் அவரது வீட்டில் நடக்கும் பூஜைக்கு பிரதமரை அழைப்பது நீதி துறையின் சுதந்திரத்திற்கும் மற்றும் அதன் மாண்பிற்கும் விரோதமானது ஆகும்.



அரசமைப்புச் சட்டத்தின் கூறு 50 , நிர்வாகத் துறையில் இருந்து பிரிந்து தனியாக சுயேச்சையாக நீதித்துறை இயங்க வேண்டும் என்று தெளிவாக கூறுகிறது.

எனவேதான், இதுவரையில் எந்த உச்ச நீதிமன்ற நீதிபதிகளோ அல்லது தலைமை நீதிபதிகளோ எவரும் தங்களது இல்லத்தில் நடைபெறும் தனிப்பட்ட பூசை போன்ற நிகழ்ச்சிகளுக்கு பிரதமரை அழைத்தது இல்லை.

மேலும் மிக முக்கியமாக,அரசாங்கம் தான் மிக அதிக அளவில் வழக்குகளை தினம் தினம் உச்ச நீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றங்களிலும் நடத்தி வருகிறது. எனவே, பிரதமரோ அல்லது மந்திரிகளோ நீதிபதிகளின் வீட்டுக்கு தனிப்பட்ட முறையில் இது போன்ற பூசைகளுக்கு அல்லது நிகழ்வுகளுக்கு செல்வது நீதித்துறைக்கு மிகப்பெரிய களங்கத்தை உண்டாக்கும்.

குறிப்பாக தலைமை நீதிபதிக்கு ஒரு சிறப்பான அதிகாரம் உள்ளது. அவர் தான் நீதிபதிகளின் அமர்வுகளை தீர்மானிப்பவர். அதாவது மூன்று நீதிபதிகள் அமர்வு என்றால் எந்த எந்த மூன்று நீதிபதிகள் அந்த அமர்வில் இருப்பார்கள் என்பதை தீர்மானிப்பவர் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தான். அது மட்டுமின்றி எந்த எந்த அமர்வுகள் எந்த எந்த வழக்குகளை விசாரிக்க வேண்டும் என்பதையும் தீர்மானிப்பவர் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தான்.

ஒன்றுக்கும் மேற்பட்ட முதலமைச்சர்களும், அமைச்சர்களும், கட்சித் தலைவர்களும் ED-யால், மற்றும் சிபிஐ ஆல் பல மாதங்களாக சிறையில் அடைக்கப்பட்டனர்; அடக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பிணை வழங்கும் வழக்குகள் எந்த அமர்வில் வருவது என்பதை தீர்மானிப்பது தலைமை நீதிபதி தான். அல்லது அவரது அமர்விலேயே

கூட அந்த வழக்குகளை விசாரிக்கலாம். தினம் தினம் எண்ணற்ற மிக முக்கிய வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருவதை தினமும் அச்சு ஊடகமும் மற்ற ஊடகங்களும் தெரிவிக்கின்றன. அந்த வழக்குகள் எந்த அமர்வில் விசாரிக்கப்பட வேண்டும் என்பதை தீர்மானிப்பவர் தலைமை நீதிபதி தான்.

அது மட்டுமன்றி, உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரை நியமிக்கும் கொலேஜியத்தின் தலைமை பொறுப்பில் இருப்பவரும் தலைமை நீதிபதி அவர்கள் தான்.எனவேதான் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் நாள் , உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த தீபக் மிஸ்ரா தவிர்த்து அவருக்கு அடுத்த நிலையில் இருந்த நான்கு மூத்த நீதிபதிகள், தலைமை நீதிபதி அமைக்கும் அமர்வுகள் மற்றும் அந்த அமர்வுகளுக்கு ஒதுக்கப்படும் வழக்குகள் ஒன்றிய அரசிற்கு அனுகூலமாக இருப்பதாக ஒரு மிகப்பெரிய குற்றச்சாட்டை பொது வெளியில் சுமத்தினர். அதாவது அவர்கள் ஊடகங்களை சந்தித்து மேற் சொன்ன குற்றச்சாட்டை வெளிப்படையாக சுமத்தினர்.



இப்போதும் கூட சிவ சேனா கட்சி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சய் ராவுத் அவர்கள், சிவசேனா பிளவுண்டது பற்றியும் சிவசேனா சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சித் தாவியது பற்றியும் ஆன வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்று சுட்டிக் காட்டியுள்ளார். எனவே இந்த நேரத்தில் தனிப்பட்ட முறையில் தனியாக பிரதமர் தலைமை நீதிபதியின் இல்லத்திற்கு செல்வது சரியல்ல என்று தனது கருத்தை பதிவு செய்துள்ளார்.

பிரசாந்த் பூஷன், இந்திரா ஜெய்சிங் போன்ற சில மூத்த வழக்கறிஞர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர், தலைமை நீதிபதி அவர்கள் பிரதமரை அவரின் வீட்டிற்கு தனிப்பட்ட முறையில் அழைத்தது கண்டிக்கத்தக்கது என்று அறிக்கைகள் மூலம் தங்கள் கருத்தை பதிவு செய்துள்ளனர். நீதித்துறையின் சுயேச்சை தன்மையை பாதுகாக்கும் பெரும் பொறுப்பு மக்களுக்கும், குறிப்பாக வழக்குரைஞர் சமுதாயத்திற்கும் உண்டு. ஆனால் வழக்குரைஞர் சங்கங்களும் பார் கவுன்சில்களும் நீதித்துறையின் சுதந்திரத்தை காப்பாற்ற தவறிவிட்டனர் என்று என்ன தோன்றுகிறது. ஏனெனில் எந்த வழக்குரைஞர் சங்கமும் பார் கவுன்சிலும் இதனை கண்டித்து பேசாமல் மௌனம் காத்து வருவதே மிகுந்த கவலையை தருகிறது. ஆளும் பிஜேபி தரப்பிலிருந்து ,பிரதமர் அவர்கள் தலைமை நீதிபதியின் வீட்டு விநாயகர் பூசையில் கலந்து கொள்வதில் எந்த தவறும் இல்லை என்று கூறுவது பாசிசத்தின் அறிகுறிகள் ஆகும்.

மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது அப்போதைய தலைமை நீதிபதி , பிரதமர் அளித்த ரம்ஜான் விருந்தில் கலந்து கொண்டார் என்றும், எனவே பிரதமர் மோடி தலைமை நீதிபதியின் வீட்டு பூஜையில் கலந்து கொண்டது சரிதான் என்றும் பிஜேபி தரப்பிலிருந்து கூறப்படுகிறது.

ஒரு தவறு மற்றொரு தவறுக்கு பதிலாகாது. மேலும் பிரதமர் மன்மோகன் சிங் அளித்த ரம்ஜான் விருந்துக்கு பலர் அழைக்கப்பட்டு இருந்தனர். அவர்களில் ஒருவர் அப்போதைய தலைமை நீதிபதி. அந்த நிகழ்ச்சிக்கு கூட தலைமை நீதிபதி செல்லாமல் தவிர்த்து இருந்தால் நன்றாக இருக்கும். காரணம் ,மதம் சம்பந்தப்பட்ட எந்த பொது நிகழ்ச்சியிலும் நீதிபதிகள் கலந்து கொள்வதை தவிர்க்க வேண்டும்.

அரசின் நிகழ்ச்சிகள் மற்றும் தலைமை நீதிபதியின் வீட்டு திருமணம் போன்ற நிகழ்வுகளில் பலர் கலந்து கொள்ளும் போது, அவர்களில் ஒருவராக பிரதமர் இருப்பின் அதில் ஆட்சேபனை செய்வதற்கில்லை.

நீதிபதிகள் வீட்டு திருமண நிகழ்ச்சிகள் போன்றவற்றில் கூட பிரதமரையோ அல்லது மற்ற மந்திரிகளையோ அழைப்பதை தவிர்த்தால் மிகவும் நல்லது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் சத்யதேவ் என்ற ஒரு மாமனிதர் நீதிபதியாக பணியாற்றினார். அவர் நீதிபதியாக இருந்த காலத்தில் நான் வழக்குரைஞராக இருந்தேன். அவரது மகனின் திருமணத்திற்கு அவர் எந்த மந்திரியையும் அழைக்காதது மட்டுமின்றி, உடன் பணி புரியும் உயர் நீதிமன்ற நீதிபதிகளில் கூட அவருடைய வகுப்புத் தோழர்களாக இருந்த மூவரைத்தான் அழைத்தார் என்றும், திருமணம் முடிந்ததும் காலையில் நீதிமன்றத்திற்கு வந்து பணி செய்தார் என்றும் கூறுவர். அது போன்ற செயல் அல்லவா மிகப்பெரிய நம்பிக்கையை மக்களுக்கு நீதிமன்றத்தின் மீது ஊட்டும். மிகச் சமீபத்தில் பங்களாதேசில், அந்த நாட்டின் பிரதமரை நாட்டை விட்டு விரட்டிய மக்களின் போராட்டம் ,அந்த நாட்டின் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியும் அவரது பதவியை விட்டு விலக வேண்டும் என்று கூறி அதில் வெற்றியும் பெற்றது சுட்டி காட்டப்பட வேண்டும்.

அது போன்ற நிகழ்வுகள் இந்தியாவில் நடைபெறாமல் இருக்க இது போன்ற நிகழ்வுகள் தவிர்க்கப்பட வேண்டும். அதுவே ஜனநாயகத்திற்கும் நல்லது. சுதந்திரமான நீதித்துறைக்கும் உத்தரவாதம் அளிக்கும்.



# திரும்ப பார்க்க வைக்கும் திருப்பதி லட்டு வரலாறு!

சமீப காலமாக பத்திரிகையிலும் ஊடகங்களிலும் திருப்பதி லட்டு குறித்த செய்திகள் வந்த வண்ணம் உள்ளன.

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் விநியோகிக்கப்படும் புனித பிரசாதமாக கருதப்படும் லட்டுகளுக்கான தேவை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, திருப்பதி கோயில் லட்டுகள், உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலும் அதிக வரவேற்பு பெற்றுள்ளது. இதையடுத்தே, கள்ளச்சந்தையில் அதிக லட்டுகள் விற்கப்படுவதைத் தடுக்கும் வகையில், சமீபத்தில் திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் புதிய உத்தரவைப் பிறப்பித்திருந்தது.

முன்பெல்லாம் திருப்பதியில் சாமி தரிசனம் செய்தால் மட்டுமே லட்டு வழங்கப்படும். அதன் பிறகு சாமி தரிசனம் செய்யவில்லை என்றாலும் லட்டு பிரசாதமாக வாங்கிக் கொள்ளலாம். இதை பயன்படுத்தி அதிக லட்டுக்களை பெற்றுச் சென்று, கள்ளச்சந்தையில் கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதாக புகார்கள் எழுந்தது. இவற்றை கட்டுப்படுத்தும் நோக்கில், சாமி தரிசனம் செய்யாதவர்கள் லட்டு வாங்க வேண்டுமானால், அவர்களுக்கு ஆதார் அட்டை கட்டாயம் என்ற முறை கொண்டு வரப்பட்டுள்ளது.

பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்டு வரும் இந்த லட்டு, திருப்பதி ஏழுமலையான் கோயிலில் அமைந்திருக்கும் 'பொட்டு' எனும் மடப்பள்ளியில் மிகவும் பாதுகாப்பான முறையில் தயாரிக்கப்பட்டு வருகிறது. திருப்பதி லட்டு தயாரிப்பு, கடந்த 1715ஆம் ஆண்டு முதல் தொடங்கியிருக்கிறது. அதன்படி பார்க்கப்போனால், இதன் காலம் 300 ஆண்டுகளுக்கு முந்தையதாக உள்ளது. இந்த லட்டு, கடந்த 2014ஆம் ஆண்டு புவிசார் குறியீடு பெற்றுள்ளது. எனவே, இந்த தயாரிப்பு முறையைப் பயன்படுத்தி வேறு யாரும் லட்டு தயாரித்து, இந்தப் பெயரில் விற்பனை செய்ய முடியாது.

பொதுவாக, இந்த லட்டுகளைத் தயாரிக்கும் சமையல்காரர்கள் தங்கள் தலையை மொட்டையடித்தும் சுத்தமான ஆடையை அணிந்தும் பாரம்பரிய முறையில் ஈடுபடுகின்றனர். வழங்கப்படுவதற்கு முன்பு சுவாமிக்குப் படைக்கப்படுகிறது. பக்தர் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு லட்டு இலவசமாகவும், கூடுதல் லட்டு ரூ.50க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கொண்டைக்கடலை மாவு, சர்க்கரை, கற்கண்டு, முந்திரி, ஏலக்காய், திராட்சை, அரிசி மாவு, நெய் உள்ளிட்ட பொருள்களை ஒரேசீரான அளவில் கலந்து திருப்பதி லட்டு பல ஆண்டுகாலமாக ஒரே சுவையில் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த லட்டுவின் சிறப்பம்சமே அதில் சேர்க்கப்படும் தரமான பொருள்களும் நெய்யும்தான். இந்த லட்டுகளைத் தயாரிக்க தினமும், 400-500 கிலோ நெய், 750 கிலோ முந்திரி, 500 கிலோ திராட்சை, 200 கிலோ ஏலக்காய் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக, ஆண்டுக்கு சுமார் 5,00,000 கிலோ நெய் தேவைப்படுகிறது.

இவற்றுக்கான கொள்முதல் செயல்முறையானது ஆன்லைன் ஏலத்தை உள்ளடக்கியது. இது, 6 மாதத்திற்கு ஒருமுறை நடைபெறுகிறது. அதிலும் நீண்ட பரிசோதனைக்குப் பின்பே ஒப்பந்தம் வழங்கப்படுகிறது.

கர்நாடக அமைப்பிடமிருந்து திருப்பதி அறக்கட்டளை தற்போது 1 கிலோ நெய் ரூ.475 என்ற விலையில் வாங்குகிறது. கோயிலில் தயாரிக்கப்படும் ஒவ்வொரு லட்டுவின் தரத்தையும் உறுதி செய்வதற்காக திருப்பதி திருமலை தேவஸ்தானம் ஓர் அதிநவீன உணவுப் பரிசோதனை ஆய்வகத்தை பராமரித்து வருகிறது. அந்த வகையில், ஒவ்வொரு லட்டுவும் 175 கிராம் எடையுடனும், அதன் GI நிலையை தக்கவைக்க முந்திரி, சர்க்கரை மற்றும் ஏலக்காய் ஆகியவற்றின் துல்லியமான அளவுடனும்

இருக்க வேண்டும்.

மேலும், திருமலை திருப்பதி தேவஸ்தானம் (TTD) குழு சப்ளையர்களை ஆய்வுசெய்து சுகாதாரம் மற்றும் தரமான தரத்தை உறுதிப்படுத்துகிறது. அனைத்துப் பொருட்களும் சமையலறையில் பயன்படுத்தப்படுவதற்கு முன் கடுமையான தரச் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. மேலும், கூடுதலாக, லட்டு மாதிரிகள் ஹைதராபாத்தில் உள்ள நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் நியூட்ரிஷன்களுக்கு பரிசோதனைக்காக அடிக்கடி அனுப்பப்படுகிறது. லட்டுகள் பக்தர்களுக்கு வழங்கப்படுவதற்கு முன்பு சுவாமிக்குப் படைக்கப்படுகிறது. பக்தர் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு லட்டு இலவசமாகவும், கூடுதல் லட்டு ரூ.50க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த பக்திமனம் நிறைந்த லட்டினை உருவாக்கியதன் பின்னணியில் இருப்பவர் கல்யாணம் ஐயங்கார். அவர்தான் திருப்பதி தேவஸ்தானத்திற்கு என்றே பிரத்தியேகமான ருசி கொண்ட லட்டுவை தயாரித்தார். பின்னாளில் அவரது மகன், சகோதரர்கள் என பாரம்பரியமாக அவரது குடும்பமே இந்த லட்டு தயாரிப்பு பணியில் ஈடுபட்டு வந்தது.

2001 ஆம் ஆண்டில் இருந்து தான் திருப்பதி திருமலை தேவஸ்தான ஊழியர்கள் லட்டு தயாரிப்பில் ஈடுபட தொடங்கினர். லட்டுக்கான டிமாண்ட் அதிகரித்ததே இதற்கு காரணம். அதற்கு முன்பு வரை கல்யாணம் ஐயங்கார் குடும்பம் மட்டுமே இதனை மேற்கொண்டது.

கல்யாணம் ஐயங்கார் என்பவர் ஸ்ரீமான் பூதேரி பத்தங்கி ஸ்ரீனிவாச ராகவன் என பெயர் கொண்டவர். இவர் பூதேரி என்ற கிராமத்தில் பிறந்தவர். பின்னாலில் இவர் திருமலை திருப்பதி தேவஸ்தானத்திலேயே தன் குடும்பத்தினருடன் தங்கி கோயிலுக்கு சேவையாற்ற தொடங்கினார்.

இந்த லட்டுகளைத் தயாரிக்க, சுமார் 600 நிபுணத்துவ சமையல்காரர்கள் தினம் இரண்டு ஷிப்டுகளில் பணிபுரிகிறார்கள். தினமும் 3,50,000 லட்டுகள் வரை தயாரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. சிறப்பு நாட்களில் 4,00,000 லட்டுகள் தயாரிக்கப்படுகின்றன. திருப்பதி லட்டு விற்பனையின் மூலம், ஏழுமலையான் கோயிலுக்கு ஆண்டுக்கு ரூ.500 கோடி வருவாய் கிடைக்கிறது.ஏழுமலையானை தரிசனம் செய்துவிட்டு, வீட்டு திரும்புவதற்கு பல நாட்கள் ஆனது. அவர்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்வதற்கு வசதியாக, எளிதில் கெட்டுப் போகாமல் இருப்பதற்காக லட்டுக்களை பிரசாதமாக தயாரித்து கொடுக்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் பெரிய அளவிலேயே லட்டு பிரசாதம் இலவசமாக பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. ஆரம்ப காலத்தில் கொடுக்கப்பட்டு வந்த பெரிய அளவிலான லட்டும், தற்போது குறைந்த அளவிலேயே தயாரிக்கப்பட்டு வருகிறது.

இதற்கு 'கல்யாண லட்டு' என்று பெயர். திருக்கல்யாண உற்சவத்தில் பங்கேற்கும் பக்தர்களுக்கு இந்த லட்டு, பிரசாதமாக வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், குடியரசுத் தலைவர் மற்றும் பிரதமர் உள்ளிட்ட தலைவர்களுக்கு வழங்கப்படும் லட்டு 750 கிராம் கொண்டதாக இருக்கும்.

லட்டு பிரசாதம் தயாரிப்பதற்கு கிட்டத்தட்ட இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக விறகு அடுப்பு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது. திருப்பதி லட்டின் வடிவம் தற்போது வரை 6 முறை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.



# உச்சத்துக்குச் சென்ற தங்கத்தின் விலை!

## – பொருளாதார நிபுணர் தரும் விளக்கம்!

தங்கம் விலை இப்போது வரலாறு காணாத உச்சத்தைத் தொட்டுள்ளது. சென்னை, மும்பை உட்பட பல நகரங்களில் 22 கேரட் தங்கம் ஒரு கிராம் ரூ. 7000ஐ தாண்டி விற்பனையாகி வருகிறது." இதனால் ஏற்பட போகும் விளைவுகளை

பொருளாதார வல்லுநர் ஆனந்த் சீனிவாசன் விளக்குகிறார்.

"22 கேரட் தங்கம் இந்தியாவில் பல நகரங்களில் ரூ. 7000ஐ தாண்டிவிட்டது. சென்னையிலும் கூட உச்சம் தொட்டுவிட்டது. தங்கத்தை அனைவரும் தைரியமாக வாங்கலாம். நிச்சயம் ஏறப் போகிறது. தங்கம் விலை குறைந்தது 15% அதிகரிக்கப் போகிறது.

சில மாதங்களுக்கு முன்பே தங்கம் விலை ரூ.7000ஐ நெருங்கியது. அப்போது தான் மத்திய அரசு இறக்குமதி வரியை ரத்து செய்தார்கள். இதனால் தங்கம் விலை குறைந்தது. ஆனால், இப்போது மீண்டும் உயர்ந்து அதே நிலைக்கு வந்துவிட்டது. மத்திய அரசு இறக்குமதி வரியைக் குறைத்தது 2 மாதங்கள் கூட தாங்கவில்லை என்பதே உண்மை.

மத்திய அரசு நினைத்தால் இன்னும் 6% வரை இறக்குமதி வரியைக் குறைக்கலாம். அப்படிச் செய்தால் ரூ.100 அல்லது ரூ.200 குறையும். அதுவும் மளமளவென உயர்ந்துவிடும். ஆனால், அதன் பிறகு வரி குறைக்க முடியாது. இப்போது தங்கம் விலை ரூ.7000இல் இருக்கிறது. இத்துடன் நீங்கள் ஜிஎஸ்டி 3% மற்றும் செய்கூலி சேதாரத்தைச் சேர்த்துக் கொள்ளுங்கள். அப்போ தங்கம் விலை எங்கு இருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள். தங்கம் மிக மிக வலுவாக இருக்கிறது. விலை குறைய வாய்ப்பு குறைவு.

இந்தியாவில் முதல்முறையாகத் தங்கம் விலை ரூ.7000ஐ தாண்டி இருக்கிறது.



வரலாறு காணாத அளவுக்குத் தங்கம் உயர்ந்துள்ளது. இறக்குமதி வரி குறைப்பை எல்லாம் மார்கெட்டே சாப்பிட்டுவிட்டது. அந்த இறக்குமதி வரி குறைப்பு இல்லை என்றால் தங்கம் விலை ரூ.7300இல் இருந்து இருக்கும். இதன் பிறகும் தங்கம் விலை நிச்சயம் அதிகரிக்கவே செய்யும். இதனால் இன்னொரு நல்ல விஷயமும் இருக்கிறது. தங்கம் விலை உயர்வதால் தங்க நகைக் கடன் நிறுவனங்கள் அதிக லோனை தர முடியும்" என்றார்.

அமெரிக்க மத்திய வங்கி கடந்த வாரம் அங்கு வட்டி விகிதத்தை 0.5% குறைத்தது. இதுவே தங்கம் விலை உயரக் காரணமாகப் பார்க்கப்படுகிறது. தங்கம் விலை என்பது அமெரிக்க மத்திய வங்கியின் வட்டி விகிதத்தைப் பொறுத்து மாறுபடும். அமெரிக்கா தனது வட்டி விகிதத்தைக் குறைத்துள்ளதால் தங்கம் விலை அதிகரித்துள்ளது. இது தவிர இஸ்ரேல் லெபனான் இடையே தாக்குதல் உச்சம் தொட்டுள்ளது. இந்த சர்வதேச போர் பதற்றமும் தங்கம் விலை உயரக் காரணமாக இருக்கிறது.

# குடும்ப வாழ்வை கொண்டாடுங்கள்!



**வா**ழ்க்கை எத்தனை அழகானது! என்பதைக் குடும்பம் தான் நமக்குக் காட்டுகிறது, இல்லறம் எத்தனை இன்பமானது என்பதைத் தாம்பத்தியம் நமக்கு உணர்த்துகிறது.

முதலில் வாழ்வை ரசிக்கின்ற பண்பு வேண்டும், ஏனெனில் ரசனை தான் நம் வாழ்விற்குச் சுவையூட்டுகிறது.

குடும்பத்தின் மகிழ்ச்சி நம் கையில் தான் இருக்கிறது, இந்த உண்மையைச் சிலர் உணர்வதே இல்லை அற்ப விஷயங்களுக்கெல்லாம் சண்டை போட்டு வீட்டையே சிலர் போர்க்களமாக்கி விடுவார்கள்.

அப்படியே நாளும், பொழுதும் போராடிக் கொண்டிருப்பதில் என்ன மகிழ்ச்சி. தேவையற்ற வாக்குவாதங்களும், விட்டுக் கொடுக்காத பிடிவாதங்களும் வீட்டை நரகமாக்கி விடும் அன்பான வார்த்தைகளே இல்லத்தை சொர்க்கமாக்கும்.

கனிவாகப் பேசும் கணவன் மனைவி இடையே சண்டைகள் வருவதில்லை அவர்களின் வார்த்தைகள் ஒருபோதும் காயப்படுத்துவதில்லை.

ஒருவரை ஒருவர் மதிக்கின்ற குடும்பத்தில் தான் சமத்துவம் இருக்கும், சந்தோஷம் பெருகும் அப்படிப்பட்ட குடும்பங்களில் பிறக்கின்ற பிள்ளைகள் நல்ல பண்புகளுடன் வளர்வார்கள்.

கணவனாக இருந்தாலும் சரி, மனைவியாக இருந்தாலும் சரி இனிமையான வார்த்தைகளையே பேசுங்கள்.

வெளியிடங்களில் மற்றும் அலுவலகத்தில் எல்லாரிடமும் சிரித்துச் சிரித்துப் பேசி விட்டு வீட்டிற்குள் நுழையும் போது முகத்தில் இறுக்கத்தையும் பேச்சில் கடுகடுப்பையும் காட்டாதீர்கள் அது உங்கள் வாழ்விற்கு நீங்களே செய்கின்ற துரோகம்.

குடும்பம் என்றால் சின்னச் சின்ன பிரச்சினைகள் வரத்தான் செய்யும் அப்போது பதற்றம் அடைய வேண்டாம், இருவரும் அமர்ந்து நிதானமாகப் பேசுங்கள் பிரச்சினைகள் காணாமல் போய்விடும்.

அதை விட்டு விட்டு மூன்றாம் நபரிடம் உங்கள் வீட்டுப் பிரச்சினைகளைப் பேசாதீர்கள், உங்களைச் சுற்றி இருப்பவர்கள் தங்கள் காதுகளைத் தீட்டிக் கொண்டு ஆவலாய்க் கேட்பார்கள் உங்கள் குடும்பத்தை இரண்டு துண்டாக்க என்னென்ன யோசனைகள் தர முடியுமோ அதையெல்லாம் தருவார்கள் அப்படி தான் பல குடும்பங்கள் சிக்கிச் சின்னாபின்னமாகி சிதைந்து போகின்றன.

ஜாக்கிரதையாக இருங்கள் உங்கள் குடும்பத்தை அதிகதிகமாக நேசியுங்கள் அது தான் மிகப் பெரிய பலம்.

குடும்பத்தை நேசிக்கின்றவர்களால் தான் உலகத்தை நேசிக்க முடியும். உலகத்தை நேசிப்பவர்களால் தான் நல்ல உறவுகளை உருவாக்க முடியும்.

'குடும்ப நண்பர்கள்' என்று கண்டவர்களையும் சேர்த்துக் கொள்ளாதீர்கள் முன், பின் அறியாதவர்களை வீட்டிற்கு வரவழைக்காதீர்கள். பேசுவதை மட்டுமே வைத்து யாரையும் நல்லவர்கள் என்று நம்பிவிடாதீர்கள் அப்படிப்பட்டவர்களால் கணவன்,மனைவி உறவில் விரிசல் ஏற்பட்டு பல குடும்பங்கள் தரைமட்டமாகிப் போயிருக்கின்றன.

உங்கள் குடும்பத்தின் நிம்மதிக்குக் கேடு விளைவிக்கக்கூடிய எந்த விஷயத்தையும் அனுமதிக்காதீர்கள். குடும்ப வாழ்வைக் கொண்டாடுங்கள் தாம்பத்திய சுகத்தை இணைந்து அனுபவியுங்கள் ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவராய் இருங்கள் உங்கள் இல்லறம் செழிக்கும் வாழ்வில் இன்பங்கள் தழைக்கும்.

குடும்ப வாழ்வை கொண்டாடுங்கள்!



# தவறுகளை திருத்திக் கொள்வதில் தவறில்லை!

**எ**வர் ஒருவர் தன்னால் முடியும் என்று நம்புகிறாரோ, அவர் நிச்சயம் வெற்றி பெறுவார்.

தன்னை பிறர் புரிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிற யாராக இருந்தாலும், பிறரையும் கொஞ்சம் புரிந்து கொள்ளுங்கள்; அவர்கள் உணர்வுகளுக்கும், மதிப்பளியுங்கள்... பிறருடைய அன்பையும், நல்ல மதிப்பையும் பெற்று, அவர்கள் நட்புறவு நீடிக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், அவர்களுடைய ஒரு சில தனிப்பட்ட விஷயங்களில் நுழையாமலும், அவர்கள் சுதந்திரத்திற்கு இடையூறு இல்லாமல் இருந்தாலே போதும்; நீங்கள் துரத்தினாலும், அவர்கள் உங்களை விட்டு போகமாட்டார்கள்.

திறமை இல்லை என்றால் தவறு இல்லை. ஆனால் சோம்பேறித் தனம் உடலையும் மனதையும் பாழாக்க விடக் கூடாது.

வயதாகி விட்டது என்று தினசரி வாழ்க்கையில் எதையும் நிறுத்த வேண்டாம் , அப்படி நிறுத்தினால் நிம்மதி போய் விடும்.

தன்னலம் சிறிதும் இல்லாமல் நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போழுது உலகத்திற்க்கு தேவைப்படுகிறார்கள்.

தன் தோல்விக்கு அடுத்தவர் மீது பழி சொல்பவர்களுக்குமுன்னேறும் வாய்ப்பு நழுவிக் கொண்டே போகும்.

தவறுகளைத் திருத்திக் கொள்வதில் தவறில்லை. தவறுகளைப் பழக்கப்படுத்திக் கொள்வது தான் தவறு.

உங்களைப் பலவீனப்படுத்தும் தேவையற்ற பயத்தை முதலில் உங்களிடமிருந்து விலக்குங்கள்.

ஏனென்றால், பயம் தான் உங்களை தவறான முடிவுகளை எடுக்க வைக்கும்.

உள்ளத்தின் அழகை ஒரு போதும்... முகமும் உடையும் சொல்வதில்லை.

கால் இரண்டு நடக்கும் பாதை ஒன்று... கண் இரண்டு பார்க்கும் பொருள் ஒன்று....

காது இரண்டு கேட்கும் ஒலி ஒன்று.... வாய் ஒன்று தான், பேசும் விதம் பல.

# உனக்காக யாரும் நடக்க முடியாது!

**பொய்**க்கு மரியாதையும் உண்மைக்கு தண்டனையும் கிடைக்க காரணம் அவரவர்களின் சூழ்நிலையே.

பாவத்தை போக்க பாத யாத்திரை செல்கிறான்... இக்கால மனிதன்.

சொர்கம் எங்கென்று கேள்வி கேட்ட மனிதனுக்கு..

பெற்றோரின் காலடியில்.. தான் என்றான் படைத்தவன்.

புண்ணியத்தை மூட்டை கட்டி ஆசிரமம் தள்ளிவிட்டு..


ஆயுள் முழுவதும்.. ஆலயம் தொழுதென்ன பயன்.*

ஓரிடத்தில் மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது பருந்து ஒன்று சட்டென்று வந்து ஒரு மீனைக் கொத்தி எடுத்துச் சென்றது. மீனைக் கண்டதும் நூற்றுக்கணக்கான காகங்கள் பருந்தைத் துரத்தலாயின; கா கா என்று கத்தியவாறு அதைச் சூழ்ந்து கொண்டு அமளிதுமளி செய்தன.

பருந்து எந்தத் திசையில் பறந்தாலும் அந்தத் திசையில் காகங்கள் துரத்தின. பருந்து தெற்கில் பறந்தால் காகங்களும் தெற்கே சென்றன, வடக்கில் பறந்தால் வடக்கே சென்றன. பருந்தும் கிழக்கு, மேற்கு என்று எல்லா திசைகளிலும் பறந்து பார்த்தது. கடைசியில் என்ன செய்வது என்று அறியாமல் திகைத்தபோது அதன் அலகிலிருந்து மீன் கீழே விழுந்தது. அவ்வளவுதான் காகங்கள் மீன் விழுந்த இடத்தை நோக்கிப் பாய்ந்தன; பருந்தை விட்டுவிட்டன.

பருந்து கவலையுற்று ஒருமரக்கிளையில் போய் உட்கார்ந்து கொண்டது. பிறகு தனக்குள், 'இந்த மீன் தான் இவ்வளவு குழப்பத்திற்கும் காரணம். இப்போது மீன் என்னிடம் இல்லை. அதனால் குழப்பங்களும் இல்லை. நான் நிம்மதியாக இருக்கிறேன்!' என்று எண்ணிக் கொண்டது.

எதுவரை நம்மிடம் மீன் இருக்குமோ அதாவது ஆசைகள் இருக்குமோ அதுவரை உலக விவகாரங்கள் இருக்கும்; அவற்றால் உண்டாகக்கூடிய துன்பம், கவலை, அமைதியின்மை ஆகியவையும் கூடவே இருக்கும். ஆசைகளை விட்டால், உடனேயே



துன்பங்கள் நம்மிலிருந்து அகன்று விடுகின்றன, அமைதி கிடைக்கிறது.

கயிறு அறுந்த போது தான் பட்டத்திற்கு தெரிந்தது, உயரம் தனதல்ல என்று தலைக்கனம் தவிர்ப்போம்.

அடுத்தவர் முதுகில் சவாரி செய்யும் சிலர் அறிவதில்லை சொந்தகால்களின் வலிமையை இது உன் பாதை உனக்கே உரித்தான பாதை இந்த பாதையில் உன்னுடன் சிலர் வருவார்கள்

ஆனால்... உனக்காக யாரும் நடக்க முடியாது. உனக்காக யாரும் நடக்க முடியாது!

# நல்ல உறவுகளே குடும்பத்தின் மேன்மை!



உறவுகள் குடும்பம் என்கிற மாளிகையைத் தாங்கிப் பிடிக்கின்ற தூண்கள். ஒவ்வொருவரையும் இணைக்கின்ற சங்கிலிப் பிணைப்புகள்.

சங்கிலியில் ஒரு கண்ணி அறுந்தாலும் அணியவியலாது. அதுபோல குடும்ப வாழ்க்கையில் ஒரு உறவு பிரிந்தாலும் அது மேன்மையாக இருக்காது. உறவு முறைகள் என்போர் அன்பின் அடையாளங்கள். பாசத்தின் பிணைப்புகள். எல்லைகளைக் கடந்து எங்கோ இருக்கும் தன் மகனுக்கு உடல் நலமில்லாவிட்டால் தாய்க்கும், தந்தைக்கும் தடுமாற்றம் ஏற்படுகிறது.

வீட்டில் ஒருவர் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிறார். சுற்றிலும் சுற்றங்கள் சூழ்ந்திருக்க விழிகளைத் திறந்து பார்க்கும் அவருக்கு முகமெல்லாம் மலர்ச்சி...*

மகிழ்ச்சி, காரணம் குருதிசார் உறவுகள் சுற்றி இருக்கையில் இயல்பாகவே மனதில் ஏற்படும் பாதுகாப்பு உணர்வு தான்..

தாத்தாபாட்டி, சித்தி சித்தப்பா, அத்தைமாமா, அண்ணன்தம்பி, அக்காள் தங்கை என்று இவர்களுக்கு மத்தியில் வளரும் குழந்தைகளுக்கு அன்பும் அரவணைப்பும் அதிகமாகக் கிடைக்கின்றது.

அம்மா அடித்தால் பாட்டியிடம் ஓடுகின்றனர். அப்பா அடித்தால் தாத்தாவிடம் தஞ்சமடைகின்றனர்.

அரவணைக்கச் சுற்றிலும் உறவுகள் இருக்கும் பொழுது குழந்தையின் மனதில் தன்னம்பிக்கை உணர்வுகள் தானாகவே துளிர் விடுகின்றன.

சுற்றிலும் உறவுகள் கூடி இருக்கும் போது மனவலிமையும் கூடுகிறது. இதுதான் கூட்டுக் குடும்பத்தின் மேன்மை. உறவுகளின் மேன்மை.

இன்றைய சூழலில் பரபரப்பாகும் பந்தய வாழ்க்கைச் சுழற்சியில் நாட்கள் நகர்கின்றன. வாரங்கள் விரைகின்றன. பழைய நண்பனின் முகம் பார்க்க முடியவில்லை. நேரமில்லை என்ற ஓர் ஒற்றை வார்த்தையில் சொல்லி விடுகிறோம்.

என்ன காரணம்...?

வசதிகளும், வாய்ப்புகளும் பெருகப் பெருக தேடல்கள் எல்லையற்று நீண்டு கொண்டே போகின்றன.

அதனால் சிந்தனைகளும் மாறுபடுகின்றன. வாழ்க்கைக்கான தேவைகள் என்ற நிலைமாறி தேவைகளுக்கான வாழ்க்கை என்ற நிலை உருவாகி வருகிறது.

பிறரைப் பற்றிய சிந்தனையற்ற ஓட்டம் மனிதனைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றது..

தன் நலத் தேடல்களும் இயந்திர வாழ்க்கையின் வேகமும், 'மனிதம்' காணாமல் போய் விடும் அபாயத்தை உணர்த்துகின்றன.

ஆம்., ஒரு மரம் தளிர்க்க நல்ல நிலமும் நீரும் தேவைப்படுவது போல மனித வாழ்வு சிறக்க உறவு முறைகளின் அன்பும் அரவணைப்பும் அவசியம்.

ஆம் தோழர்களே...!

உறவுகள் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

ஒருவருக்காக ஒருவர் உருகித் தவித்து அன்பு செலுத்தும் வீட்டில் தான் ஆனந்தம் அமைதி கொள்கிறது.

அன்பு கொண்ட உள்ளத்தை விட உலகில் உயர்ந்தது வேறென்ன...? அந்த அன்பால் உறவுகளை அணைப்போம். அந்த உறவுகள் தான் வாழ்க்கையை மேன்மையாக்கும்...!

**- ஏ.கே.முருகானந்தம், வானகரம்**

# ஆபத்தை விளைவிக்கும் தரமற்ற மாத்திரைகள்!

## - ஆய்வில் தெரியவரும் அதிர்ச்சி!

**நா**டு முழுவதும் விற்பனை செய்யப்படும் அனைத்து வகையான மாத்திரை, மருந்துகளை மத்திய மற்றும் மாநில மருந்து தரக்கட்டுப்பாட்டு வாரியங்கள் ஆய்வு செய்து வருகின்றன. ஆய்வின்போது போலி மற்றும் தரமற்ற மருந்துகள் கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

நம் நாட்டில் வெளியாகும் மருந்துகளை மத்திய அரசின் சிடிஎஸ்சிஓ எனும் மத்திய மருந்து தர கட்டுப்பாட்டு அமைப்பு (CDSCO or Central Drugs Standards Control Organisation) பரிசோதனைகளை மேற்கொண்டு வருகிறது.

CDSCO Flags 53 Drugs for Quality Failures மத்திய அமைப்பான சிடிஎஸ்சிஓ தனது மாதாந்திர தரச் சோதனை அறிக்கையில் பாராசிட்டமால், பான் டி மற்றும் 51 மருந்துகள் தரமான தரத்தில் இல்லை என அறிவித்துள்ளது.

மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (சிடிஎஸ்சிஓ) அதன் சமீபத்திய மாதாந்திர அறிக்கையில் பாராசிட்டமால், பான் டி மற்றும் கால்சியம் சப்ளிமெண்ட்ஸ் உள்ளிட்ட 53 க்கும் மேற்பட்ட மருந்துகளை தரமானதாக இல்லை என அறிவித்துள்ளது.



மத்திய மருந்துக் கட்டுப்பாட்டாளர் இரண்டு பட்டியல்களை வெளியிட்டார் ஒன்று தரப் பரிசோதனையில் தோல்வியுற்ற 48 மருந்துகள் மற்றும் மற்றொன்று NSG எச்சரிக்கை பிரிவில் 5 மருந்துகள் இந்தியாவின் மருந்துக் கட்டுப்பாட்டாளரான மத்திய மருந்துத் தரக் கட்டுப்பாட்டு அமைப்பு ( சிடிஎஸ்சிஓ), அதன் சமீபத்திய மாதாந்திர அறிக்கையில் 50க்கும் மேற்பட்ட மருந்துகளை " தரமான தரம் இல்லை (NSQ) எச்சரிக்கை" என பட்டியலிட்டுள்ளது .

இந்த பட்டியலில் கால்சியம் மற்றும் வைட்டமின் D3 சப்ளிமெண்ட்ஸ், நீரிழிவு எதிர்ப்பு மாத்திரைகள் மற்றும் உயர் இரத்த அழுத்த மருந்துகள் போன்ற பரவலாகப் பயன்படுத்தப்படும் மருந்துகள் உள்ளன.

ஷெல்கால் வைட்டமின் சி மற்றும் டி3 மாத்திரைகள், பான்டி ஆன்டாசிட், நீரிழிவு நோய்க்கான க்ளிமிபிரைடு மற்றும் உயர் இரத்த அழுத்தத்திற்கான டெல்மிசார்டன் போன்ற 53 மருந்துகள் தரத்திற்குக் குறைவாக இருப்பதாகக் கண்டறியப்பட்ட 53 மருந்துகளில் அடங்கும்

வைட்டமின் சி மற்றும் டி3 மாத்திரைகள், ஷெல்கால், வைட்டமின் பி காம்ப்ளக்ஸ், வைட்டமின் சி சாப்ட்ஜெல்கள், ஆன்ட்டி ஆசிட் பான்டி, பாராசிட்டமால் மாத்திரைகள் (ஐபி 500 I.A.), நீரிழிவு எதிர்ப்பு மருந்து கிளிமிபிரைடு மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஆகியவை தர சோதனையில் தோல்வியடைந்த மருந்துகளாகும். வயிற்று நோய்த்தொற்றுகளுக்கு பொதுவாகப் பயன்படுத்தப்படும் மெட்ரானிடசோல், தர சோதனையிலும் தோல்வியடைந்தது. இதேபோல், பிரபலமான கால்சியம் மற்றும் வைட்டமின் D3 சப்ளிமெண்ட் ஷெல்கால், NSQ எச்சரிக்கை பிரிவில் கொடியிடப்பட்டுள்ளது.

அதேபோல் கிளாவம் 625 மற்றும் பான் டி போன்ற நுண்ணுயிர் எதிர்ப்பிகளை போலியானது என்று கருதியது. குழந்தைகளுக்குப் பயன்படுத்தப்படும் பொதுவான நோய்த்தொற்று மருந்தான Cepodem XP 50 Dry Suspension, அதே ஆய்வகத்தில் சோதனை செய்யப்பட்டது மற்றும் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்ததற்காக CDSCO ஆல் கொடியிடப்பட்டது.




நித்திய கல்யாணி இலை, பூ ஆகியவற்றில் இருந்து புற்றுநோய்க்கான மருந்துகள் தயாரிக்கப்படுகிறது. மார்பக புற்றுநோய்க்கு மருந்தாகிறது. நெறிக்கட்டிகளை கரைக்கும் தன்மை உடையது. நித்திய கல்யாணி பூக்களை பயன்படுத்தி புற்றுநோயாளிக்கான மருந்து தயாரிக்கலாம்.

தேவையான பொருட்கள்: நித்திய கல்யாணி பூக்கள், கருஞ்சீரகம். நித்திய கல்யாணி பூக்கள் 10 வரை எடுக்கவும். இதனுடன் கால் ஸ்பூன் கருஞ்சீரகம் சேர்க்கவும். ஒரு டம்ளர் அளவுக்கு நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடித்துவர சீல் பிடித்த புண்கள், ஆறாத புண்கள் விரைவில் குணமாகும்.

புற்றுநோயாளிகள் இந்த தேனீரை எடுக்கலாம். பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட கருஞ்சீரகம் உடலினுள் இருக்கும் நச்சுக்களை வெளியேற்றும் தன்மை கொண்டது. சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்படும் புண்களை ஆற்றும்.

நித்திய கல்யாணி இலையை பயன்படுத்தி புண்களை ஆற்றும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: தேங்காய் எண்ணெய், நித்திய கல்யாணி இலை.

ஒரு பாத்திரத்தில் 2 பங்கு தேங்காய் எண்ணெய் எடுத்தால், ஒரு பங்கு நித்திய கல்யாணி இலை பசை சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்சவும். இதை ஆறவைத்து வடிகட்டி புண்கள் மேலே பூசுவதால் நல்ல பலன் கிடைக்கும். சீல் பிடித்த, புரையோடிய மற்றும் ரத்தம் கசிகின்ற புண்கள் விரைவில் குணமாகும்.

நித்திய கல்யாணியின் வேரை இருபது கிராம் அளவிற்கு எடுத்து சுத்தப்படுத்தி அரை லிட்டர் நீரில் போட்டு கொதிக்க விட வேண்டும். அந்த குடிநீர் 200 மில்லி லிட்டராக சுண்டும் வரை காய்ச்சி பின் ஆற வைத்து வடிகட்டிக்கொள்ள வேண்டும்.

இதை காலை மாலை இருவேளை 40 மில்லி முதல் 100 மில்லி வரை நோயின் தன்மைக்கேற்ப வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் உங்களது மாதவிடாய் சுழற்சி நேர்த்தியாகிவிடும். நித்யகல்யாணியின் ஐந்தாறு பூக்களை அரை லிட்டர் நீரில் போட்டுக் காய்ச்சி கால் லிட்டராக்கி 1 நாளைக்கு 4 வேளை கொடுக்க அதிக தாகம், அதிக சிறுநீர்போக்கு அதனால் ஏற்படும் உடல் பலவீனம் சரியாகும். அதிக பசி என்றாலும், பசியின்மையும் தீரும்.

சித்த மருத்துவத்தில் நீரிழிவு நோய்க்கு மருந்தாக பயன்படுகிறது. நீரிழிவு நோயாளிகள் இதன் வேர்ச்சூரணத்தை 1 சிட்டிகை எடுத்து வெந்நீரில் கலந்து 2, 3 முறை உட்கொண்டால் சிறுநீர் சர்க்கரை குறைந்து நோய் கட்டுப்படும்.

நீரிழிவுக்கு இதன் வேர்ப்பொடியை தினசரி அரை டீஸ்பூன் வெந்நீரில் சாப்பிட்டு வர வேண்டும். மலரை கஷாயம் போட்டு குடிக்க பசியின்மை, அதிக பசி, அதிக தாகம், அதிமூத்திரம் போன்றவை குணமாகும்."

# நன்றி சொல்லிப் பழகுங்கள்



நன்றி' என்ற வார்த்தை தமிழ் அகராதியிலே மிகவும் வலிமையான வார்த்தை என்றே கூறலாம்.

நாம் ஒருவருக்கு எந்த ஒரு எதிர்பார்ப்பின்றி செய்கிற உதவியாக இருந்தாலும், நமக்கு மற்றொருவர் செய்கின்ற உதவியாக இருந்தாலும், 'நன்றி' என்ற வார்த்தையின் அடிப்படையிலேயே செய்யப்படுகிறது.

"நன்றியையும் பாராட்டையும்" மனதில் நினைத்தால் மட்டும் போதாது.உடனே அதை வெளிப்படுத்த வேண்டும்.நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவருக்கு அதை உடனே தெரிவித்து விட வேண்டும். நன்றி, பாராட்டு உரியவருக்குக் கொடுக்கும் போது தான் அவர்கள் மீண்டும் அதைக் கூடுதல் மதிப்புடன் நமக்குத் திருப்பிக் கொடுப்பார்கள்.

நாம் மற்றவர்களுக்கு நன்றியுள்ளவராக இருந்து, அதை உடனே தெரிவிப்பதன் மூலம், அவர்கள் நமக்கு மீண்டும் கூடுதல் உதவியைச் செய்வார்கள். உங்களது நன்றியைத் தெரிவிக்காவிட்டால், அத்துடன் அவர்களின் தொடர்பு முடிந்து போகவோ அல்லது அவர்களின் உதவி குறைந்து போகவோ கூடும். "தேள் ஒன்று கங்கையில் மிதந்து சென்றது. அதன் மீது பரிதாபப்பட்ட ஒருவர், அதை எடுத்து வெளியில் விட முயன்றார்.

அது அவரைக் கொட்டி விட்டு மறுபடியும் நீரில் விழுந்தது. மீண்டும் எடுத்து விட்டார். மீண்டும் அது கொட்டிற்று. 'ஏன் இப்படிச் செய்தீர்கள்?' என்று வேறு ஒருவர் கேட்டார். அதற்கு அவர் சொன்னார்: கடைசி வரை அது தன் சுபாவத்தை விடவில்லை'. அது போல நன்றி செய்கின்ற எனது கடமையில் இருந்து தவறவில்லை' என்றார்.

நன்றி சொல்லும் போது அதை உண்மையாகச் சொல்லுங்கள். நன்றியைத் தெளிவாகவும் திருத்தமாகவும் சொல்லுங்கள்.

நன்றி சொல்லும் போது வார்த்தைகளை விழுங்காதீர்கள்.முணு முணுக்காதீர்கள்.

மகிழ்ச்சியுடன் நன்றி சொல்வது, உங்களின் சொல்லில் வெளிப்பட வேண்டும். நன்றி சொல்பவரை, நேருக்கு நேர் அவர் கண்களைப் பார்த்துச் சொல்லுங்கள். நேருக்கு நேர் பார்ப்பது, கூடுதல் அழுத்தத்தைக் கொடுக்கும். சரியான இடத்தில் முறையாக நன்றி சொல்லும் பழக்கம் உங்களுக்கு ஒரு வாழ்நாள் முழுமைக்குமான சொத்தாக இருக்கும்.



எஸ்.சூர்யா

# மம்முட்டி வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருப்பது எப்படி!



நடிகர் மம்முட்டி தன் வாழ்வில் சந்தித்த முக்கியமான மனிதர்களையும், மறக்க முடியாத நினைவுகளையும், இறக்கி வைக்கமுடியாத காட்சிகளையும் "காழ்ச்சப்பாடு" என்ற கட்டுரைத் தொகுப்பாக மலையாளத்தில் எழுதியிருக்கிறார்.

அதனை "மூன்றாம் பிறை வாழ்வனுபவங்கள்" என்ற பெயரில் கே.வி.ஷைலஜா தமிழில் மொழிபெயர்ப்பு செய்திருக்கிறார்.இந்தப் புத்தகத்தில் 23 கட்டுரைகள் இருக்கின்றன. அனைத்து கட்டுரைகளும் நம் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் வகையிலே அமைந்துள்ளது. இதனுள் ஒட்டுமொத்த சமூகச் சிந்தனைகள் அடங்கிய தத்துவார்த்தமான படிநிலைகளாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அதில் உள்ள ஓர் பதிவு "வேகத்தின் விலை".கார் ஓட்டுவது மம்முட்டிக்குப் பிடித்தமான விஷயம். அதுவும் வேகமாக கட்டுப்பாடுடன் ஓட்டுவது அவருக்கு ரொம்பப் பிடிக்கும். சென்னையிலிருந்து கேரளாவுக்குச் செல்லும் போது பெரும்பாலும் அவரே தன்னுடைய காரை ஓட்டிச் செல்வார். ஒருமுறை ஷூட்டிங் முடிந்த ஒரு பின்னிரவில் கோழிக்கோட்டிலிருந்து மஞ்சேரிக்கு சென்றுகொண்டிருக்கும் போது நகர எல்லைத் தாண்டி அடர்ந்த வனப்பகுதிக்குள் அவருடைய கார் நுழைகிறது. பனிப் படர்ந்த இரவில் ஒலி நாடாவை ஒலிக்க விட்டுக் கொண்டு வாகனத்தை செலுத்திக் கொண்டிருந்தார். நகக்கீறலையொத்த நிலா அவரை துரத்திக் கொண்டே வந்தது. இருபுறமும் வாகை மரங்களுடன் இருந்த சாலையின் வழியாக சென்றுகொண்டிருந்தது. இனி மம்முட்டியின் மொழியில் வாசியுங்கள்."அந்த அடர் இருளில் ஒரு மெல்லிய எளிய உருவம். பார்க்க ஒடிசலான வயசான முதியவர் ஒருவர் கையில் கை விளக்கு, தலையில் முக்காடுடன் கை நீட்டி மின்னல் வேகத்தில் வழிமறித்தார்.

இடது பக்கம் ஒடித்து மீண்டும் வலப்பக்கம் சாய்ப்பதற்கு இடையில் வண்டி நிலை குலைந்தது. இரவின் நிசப்தத்தில் பிரேக் அடித்தவுடன் ஏற்பட்ட அலறல் ஒலி எங்கோ இருளில் மோதி மீண்டும் என்னை வந்தடைந்தது.

வண்டியைக் கட்டுக்குள் கொண்டு கோபத்துடன் ரிவர்ஸ் எடுத்தேன். அந்த முதியவர் எதுவும் அறியாதது போல என் அருகில் வந்தார். அருகில் இருந்த ஒரு கல்மேடையில் ஒரு பெண் சுருண்டு படுத்து இருப்பதை அப்போது தான் பார்த்தேன்.கைகூப்பியபடி முதியவர் பேச ஆரம்பித்தார்.

"பாப்பாவுக்கு பிரசவ நேரம். ஆஸ்பத்திரிக்கு போக நீங்க தான் உதவனும். கடவுள் உங்களை நல்ல இடத்துக்கு கொண்டு சேர்ப்பார்." திடீரென காருக்கு குறுக்கே வந்த போது ஏற்பட்ட கோபமெல்லாம் சட்டென்று குறைந்து போனது. இரவு இரண்டு மணிக்கு எந்த வாகனத்தையும் தேடிப்பிடிக்க முடியாது என்பதால் நான் அவர்களை என் வண்டியில் ஏற்றிக் கொண்டேன்.அவள் அவருடைய பேத்தி அவள் என்பது தொடர் உரையாடலில் புரிந்து கொண்டேன். நான் மீண்டும் வேகம் எடுத்தேன் அரசு மருத்துவமனை வராண்டாவில் வண்டியை நிறுத்திய சத்தம் கேட்டு அவசரப் பிரிவில் இருந்து 4 ஊழியர்கள் ஓடி வந்தார்கள். அவசரத்தில் வந்த அவர்கள் என்னை யாரென்று அடையாளம் தெரிந்து கொள்ளவில்லை. அவர்கள் . அந்தப் பெண்ணை கைத்தாங்கலாக வண்டியிலிருந்து அழைத்துச் சென்றபின் தான் சமாதானமும் நிம்மதியும் என் முகத்தில். மெல்லிய புன்னகையுடன் நான் வண்டியை திருப்பிக் கொண்டிருக்கும் போது மீண்டும் முதியவர் அருகில் ஓடி வந்தார். ரொம்ப பெரிய உதவி பண்ணி இருக்கீங்க. கடவுள் உங்களுக்கு ரொம்ப பெரிய உதவி செய்வார். கடவுள் தான் உங்களை எங்க கிட்ட கொண்டு சேர்த்து இருக்கார்.உங்க பேர் என்ன என்று கேட்டார். மம்முட்டி 'என்ற பேரை கேட்டபோது கூட என்னை அவருக்கு தெரியவில்லை. எனது நடிகன் என்ற கிரீடமும் நொறுங்கி விழுந்த கணம் அது. "என்ன வேலை செய்றீங்க ?"என்று கேட்டேன். அவர் வேட்டியின் மடிப்பிலிருந்து கசங்கிய ஒரு நோட்டு தாளை எடுத்து "இத டீ செலவுக்கு வச்சிக்க" என்று என்னிடம் தந்தார். என் மனத் திருப்திக்காக மட்டும் வைத்துக்கொள்ளுங்கள் எனக் கூறிவிட்டு என் கேள்விக்கு பதில் சொல்லாமல் விறுவென நடந்து மருத்துவமனைக்குச் சென்று மறைந்தார்.

அவர் கொடுத்துச் சென்றது மடித்து வைக்கப்பட்ட ஒரு இரண்டு ரூபாய் தாள். அதை எதற்காக தந்தார் என்று இன்றுவரை எனக்கு புரியவில்லை. ஒருவேளை இரண்டு பேருக்குமான கட்டணமாக இருக்கும். என்னுடைய டிரைவிங் வேகத்தால் ஒரு ஜீவனை காப்பாற்றவும் புதியதொரு ஜீவனை இந்தப் பூவுலகில் கொண்டு வரவும் செய்த சிறிய உதவிக்காக அதிக சந்தோஷப்பட்டேன். நான் இது வரை நான்கு தேசிய விருது வாங்கி விட்டேன். ஆனாலும் அதை விட இன்னும் பத்திரமாய் பொக்கிஷமாய் அந்த ரெண்டு ரூபாய் நோட்டை நான் பாதுகாத்து வருகிறேன்.

சிலநேரங்களில் நாம் செய்யும் சிறிய உதவிகள் கிடைப்பவர்களுக்கு பெரிய உதவியாகக் கூட இருக்கும்.

அதன் பலனாக பூக்கும் மகிழ்ச்சி பூக்கள் வாழ்க்கை பாதை முழுவதும் வெளிச்சம் கொடுத்துக் கொண்டே இருக்கும்."

# முக அழகை பெண்கள் பாதுகாப்போடு பராமரிக்க வேண்டும்!

**தா**ங்கள் அழகாக இருக்க வேண்டும் என்று பெண்கள் எப்போதும் நினைப்பார்கள். பழங்காலத்தில் மஞ்சள் பூசி முகத்தை அழகுபடுத்திக் கொள்வார்கள். காலப்போக்கில் பரிணாம வளர்ச்சியால் சமீபகாலமாக அழகு நிலையம் சென்று தங்கள் முகத்தை அழகுபடுத்திக் கொள்கிறார்கள். அப்படி அழகு படுத்திக் கொள்வதிலும் கவனிக்கத்தக்க சில அம்சங்கள் உள்ளன.

கடந்த இரண்டு மாதங்களாக ஏகப்பட்ட பணிச்சுமை,மனச்சோர்வு, என்னையே மறந்த உன்மத்த நிலை, நேற்று காலை குளித்துவிட்டு வந்து கண்ணாடியைப் பார்த்தால் ,டை அடிக்காமல் பாதி வெளுத்த தலை, திருத்தாத புருவங்களோடு என் முகத்தைப் பார்க்க எனக்கே சகிக்கவில்லை. இது நானா என எனக்கே சந்தேகமாக இருந்தது.

சரியென அருகில் beauty parlor வைத்திருக்கும் ரீட்டாவிடம் சென்று புருவங்களைத் திருத்திக் கொண்ட போது கிடைத்த நேரத்தில், அவர் சொன்ன தகவல் ரொம்ப யோசிக்க வைத்தது.

ரீட்டாவிடம் facial செய்ய வந்த திருமணமாகாத இளம்பெண் ஒருவர் , இவர் facial செய்ய பயன்படுத்தும் பொருள்களை இவருக்கே தெரியாமல் போட்டோ எடுத்து online ல் வாங்கி பயன்படுத்தி இருக்கிறார். கால் ஸ்பூனில் நான்கில் ஒரு பங்கு பயன்படுத்த வேண்டிய ஒரு கிரீமை அப்பெண் அரை ஸ்பூன் அளவு எடுத்து தாராளமாக முகத்தில் பூசி இருக்கிறார். ஐந்தே நிமிடத்தில் அகற்ற வேண்டியதை அரைமணி நேரம் முகத்தில் ஊற வைத்திருக்கிறார். நேரமாக நேரமாக முகத்தில் எரிச்சல்..தோலெல்லாம் வெந்து போய் விட்டதாம்.

இப்போது ஒரு வருட சிகிச்சைக்குப் பிறகும் முகம் கருப்பும் வெளுப்புமாக இருக்கிறதாம்.ஒரு முறை பிளாஸ்டிக் சர்ஜரி செய்தும் ,சில லட்சங்கள் செலவழித்தும் முழுமையான பலன் கிடைக்கவில்லை.

இப்போதெல்லாம் எல்லோருமே தன்னை அழகாக்கிக் கொள்ள ஆர்வமாக இருக்கிறோம்.அதுவும் ஸ்மார்ட் போன்,முகநூல்,வாட்சப் அறிமுகமானதிலிருந்து அதற்கான மெனக்கெடல் அதிகமாகிவிட்டது.அதில் தவறேதும் இல்லை. ஆனால் கவனமாக இருக்க வேண்டும்.

இதற்காகவே படித்த, அனுபவமிக்கவர்கள் செய்வதற்கும் ,நாம் செய்வதற்கும் வித்தியாசமில்லையா? பணத்தை மிச்சப்படுத்துகிறேன் என இப்படி ஒரு இக்கட்டில் மாட்டிக் கொள்ளலாமா?

பணமும் ,நேரமும் இருந்தால் தரமான beautician னிடம் சென்று அழகுபடுத்திக் அழகுபடுத்திக் கொள்ளுங்கள்.இல்லையா என்னைப் போல் பாலேடு,தயிர், அரிசி மாவு,தக்காளி,பப்பாளி என பூசுங்கள்.

– திருமதி.ருக்மணி ஜெயராமன்





# பத்திரப்பதிவும்போது காகித ஆவணங்கள் கட்டாயம் இல்லை!

## பதிவுத்துறைத் தலைவர் உத்தரவு!

சார்பதிவாளர் அலுவலகங்களில் சொத்து பத்திரங்கள் பதிவு செய்யப்படும்போது, பட்டா நகல், நில வரைபடம் ஆகியவற்றின் காகிதப் பிரதிகளை கேட்டு மக்களை அலைக்கழிக்கக் கூடாது என்று பதிவுத் துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், சார்பதிவாளர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார். அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனைப் பிரிவில் மனைகளை கிரயம் பெறும்போது, ஒவ்வொரு மனுதாரருக்கும் உட்பிரிவு செய்ய, தனித்தனியே மனு பெறும் சூழல் நிலவுகிறது. இவ்வாறு ஒரே மனைப் பிரிவில் உள்ள வீட்டு மனைகளை நிலஅளவை செய்து உட்பிரிவு செய்வதற்காக, நில அளவர் பல்வேறு நாட்களில் தனித்தனியே செல்ல வேண்டியிருக்கிறது. இதனால், உட்பிரிவு பட்டா மாறுதல் பெறுவதில் தாமதம் ஏற்படுகிறது. இதை எளிமைப்படுத்த, தமிழ்நிலம் என்ற இணையதள மென்பொருள் வசதி தொடங்கப்பட்டது.

இந்த புதிய மென்பொருள் மூலமாக, மனைப் பிரிவுகளை ஒட்டுமொத்தமாக உட்பிரிவு செய்து, அவற்றின் உரிமையாளர் பெயரில் பதிவு செய்யப்படுவதால், பின்னாளில் மனைகளை உட்பிரிவு செய்யக் கோரி தனித்தனியாக மனுக்கள் வரப்பெறுவது தவிர்க்கப்படும். அதுமட்டுமல்ல, கிரையப் பத்திரத்தில் குறிப்பிடப்படும் சொத்தின் உண்மைத் தன்மையை சரிபார்க்க, பட்டா உள்ளிட்ட ஆவணங்கள் கேட்கப்படுகின்றன. இந்த தமிழ்நிலம் மென்பொருள் வாயிலாக பட்டா பிரதிகள், ஆன்லைன் முறைக்கும் மாற்றப்பட்டிருக்கின்றன. இருப்பினும், அங்கீகரிக்கப்பட்ட அரசு அதிகாரியிடம் சான்றொப்பம் பெற்று வருமாறு, சார் - பதிவாளர்கள் வலியுறுத்துவதால், சொத்து வாங்குவோர் பட்டா பிரதி எடுக்கவும், அதற்கு கையெழுத்து வாங்குவதற்காகவும் அலைய வேண்டியுள்ளது.

பட்டா உள்ளிட்ட ஆவணங்கள், ஆன்லைனிலேயே எளிய முறையில் கிடைக்கும்போது, அதை பிரதி எடுத்து வரச் சொல்வது தேவையில்லாத ஒன்றாகவும் கருதப்படுகிறது. எனவே இந்த பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என்று, பதிவுத்துறைக்கு நில அளவைத் துறை கடிதம் மூலம் கோரிக்கை விடுத்தது. இதையடுத்து பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது: பத்திரங்கள் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும்போது, பட்டா, சிட்டா, நில அளவை வரைபடம் போன்றவற்றின் காகிதப் பிரதிகளை கேட்க கூடாது. இந்த சொத்துகளின் சர்வே எண்ணை பயன்படுத்தி, வருவாய்த் துறையின் தமிழ்நிலம் தகவல் தொகுப்பில் பட்டா விவரங்களை, சார்பதிவாளர்களே சரிபார்த்துக் கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் காகிதப் பிரதி கேட்டு, பொதுமக்களை அலைக்கழிக்கக் கூடாது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மனைவியை காதலியாக நேசியுங்கள்!

ஒரு நாள், புதிதாகத் திருமணமான ஒரு இளைஞன் தன் மனைவியைக் கோவமாக திட்டி கத்திக் கொண்டிருந்தான், அவனுடைய தந்தை அவனை அழைத்து, 'நாம் போடும் கூச்சல் மற்றவர்களை பயமுறுத்தும். ஆனால் உன் மனைவியை அல்ல." என்றார். உங்கள் அச்சுறுத்தல்கள் அவளை பலப்படுத்துகின்றன. ஒரு பெண் அச்சுறுத்தப்பட்டால், அவள் அடக்கப்படுகிறாள் என்று பெரும்பாலான ஆண்கள் நம்புகிறார்கள், ஆனால் பெண்கள் அச்சுறுத்தப்படும்போது வலிமையாக மாறுகிறார்கள்.

ஒரு ஆண் தன்னை அச்சுறுத்தி கத்தும்போது ஒரு பெண் அமைதியாக இருக்கலாம். ஆனால் அவள் உள்ளுக்குள் அமைதியாக இல்லை. அவள் ஆணின் பலவீனத்தை மதிப்பிடுகிறாள், அவனை எப்படி அடக்குவது, என்று மதிப்பிடுகிறாள்.

ஒரு பெண்ணின் இதயத்திற்குள் நுழையும் வழி, அவளை அச்சுறுத்தி அடிபணியச் செய்ய முயற்சிப்பதல்ல என்பது ஆண்களுக்குத் தெளிவாக புரிய வேண்டும். காதலும் அன்பும் மட்டுமே பெண்களை பலவீனமாக்குகிறது. நீங்கள் ஒரு பெண்ணை உண்மையாக நேசித்து அதைக் வெளிக் காட்டினால், அவள் உங்களுக்கு எந்தக் கவலையும் இல்லாமல் அன்புடன் இருப்பாள். ஆனால், ஒரு பெண் தான் உங்கள் பொம்மை போல் இருப்பதை உணர்ந்தால், நீங்கள் அவளைப் பயன்படுத்த விரும்புகிறீர்கள் அல்லது நீங்கள் ஆதிக்கம் செலுத்துகிறீர்கள் அலல்து கட்டுப்படுத்துகிறீர்கள், என்றால் தன்மானம் அவளை ஆக்கிரமிக்கிறது. அவள் உடல் ரீதியாக உங்களுக்கு எதிராக நிற்காமல் இருக்கலாம், ஆனால் அவள் மன ரீதியாக உங்களுக்கு எதிராக போய்விடுவாள். ஒரு நாள், நீங்கள், அவளும், குழந்தைகளும் உங்களை அவர்களின் சொற்களைப் பின்பற்றும்படி கட்டாயப்படுத்துவதைப் பார்ப்பீர்கள் அல்லது அதை தாங்க முடியாமல் விரைவாக இறந்துவிடுவீர்கள்.

பல வருடங்களுக்கு முன் கணவன் அடித்துக் கொண்டிருந்த அந்த பெண்கள் இன்று குழந்தைகளுடன் வாழ்க்கையை மகிழ்ச்சியாக கழிக்கிறார்கள். தாய்மார்களுக்கு குழந்தைகளின் அனுதாபம் இருக்கிறது, ஆண்கள் கடைசியில் தனிமையில் தவிக்கிறார்கள். ஆண்களுக்கு எதிராக எப்படி வாழ்வது என்பது பெண்களுக்குத் தெரியும்.



ஆண்களில் உள்ள 'சிங்கம்' பெண்களை பயமுறுத்துவதில்லை அல்லது அவர்களை உங்களுக்கு அடிபணியச் செய்யாது, அது ஒரு பெண்ணை வெல்வது காதல் மட்டுமே, கட்டாயப்படுத்துவதோ அல்லது அச்சுறுத்துவதோ அல்ல. சக ஆண்களை அடக்கலாம், ஆனால் உங்கள் மனைவியை அல்ல. பெண்களுக்கு இயற்கையாகவே வலிகளைத் தாங்குவது எப்படி என்று தெரியும். அவர்களுக்கு தைரியம் இல்லை என்று நீங்கள் நினைத்தால் நீங்கள் தான் முட்டாள். ஆண்களிடம் இல்லாத தைரியம் அவர்களிடம் உள்ளது.

அச்சுறுத்தல்களை விட அன்பைக் காட்ட வேண்டும், உங்கள் மனைவியை நேசிக்கவும்! உங்கள் மனைவியை நேசிப்பதற்கான இந்த சூத்திரம் அவளை வெல்ல உதவும். ஒரு பெண் நேசிக்கப்படும்போது, அவளுடைய அனைத்து தைரியத்தையும் உடைத்து, அவள் உங்களை கைகளில் தாங்குகிறாள். ஒரு பெண் தன்னை நேர்மையாக காதலிக்கும் ஒரு ஆணுடன் வாழ, எதையும் செய்ய முடியும்.

உங்கள் மனைவியிடம் மென்மையாகப் பேசுங்கள், அவளிடம் கத்தாதீர்கள். கூச்சலிட்டு ஆணாக உங்கள் பலவீனத்தை ஆணவத்துடன் காட்டாதீர்கள்.

கூச்சலிட்ட ஆண்கள் எல்லாம், வாழ்க்கையின் இறுதியில் பேச ஆளில்லாமல் கூடத்தில் மூலையில் கிடத்தப்பட்டு இறுதியில் இறந்து போனவர்கள். புரிந்தால் வாழ்க்கை உங்களுடையது.



# விஜய் வெற்றிடம் நிரப்ப போவது யார்?

நடிகர் விஜய் அரசியலில் நுழைந்த பிறகு அவருடைய இடத்தை பிடிப்பதில் போட்டி நிலவுகிறது. ஏற்கனவே ரஜினி, அஜித், ஆகியோர் படங்கள் வெளியாகும் போது ஏற்படும் பரபரப்பு நாம் அறிந்ததுதான்.இந்த நிலையில்தனுஷ் சிவகார்த்திகேயன் சிம்பு ஆகியோர் விஜய் வெற்றிடம் நிரப்பும் போட்டி வரிசையில் உள்ளனர்.

சிம்புவின் அடுத்தடுத்த படங்களை பிரபல இயக்குனர்கள் இயக்கவுள்ளனர். இது பற்றிய தகவல் வெளியான வண்ணம் உள்ள நிலையில் அவர் அடுத்து நடிக்கவுள்ள படங்களைப் பற்றி இதில் பார்க்கலாம்.

வெங்கட்பிரபு இயக்கத்தில் சிம்பு நடிப்பில் வெளியான மாநாடு சூப்பர் ஹிட்டானது. இப்படத்தின் மூலம் சிம்பு கம்பேக் கொடுத்துவிட்டார். தனுஷ், சிவர்கார்த்திகேயனுக்கு எல்லாம் இனிமேல் போட்டியாக இருக்கப் போகிறார் என்று அவரது ரசிகர்கள் எதிர்பார்த்தனர். அதற்கேற்ற அவரது புதிய படங்களில் பிரபல இயக்குனர்களுடன் கூட்டணியமைத்துள்ளார்.

'பத்து தல' படத்திற்குப் பின், மணிரத்னத்தின் இயக்கத்தில் உலக நாயகன் கமல்ஹாசன் நடித்து வரும் 'தக் லைஃப்' படத்தில் ஜெயம் ரவி, திரிஷா உள்ளட்டோருடன் இணைந்து சிம்பு நடித்துள்ளார். பெரிய பட்ஜெட்டில் பிரமாண்டமாக உருவாகியுள்ள இப்படமும் சிம்புவின் கேரியரில் முக்கியமான படமாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

அடுத்து, கமல்ஹாசனின் ராஜ்கமல் இன்டர் நேஷனல் தயாரிப்பில், தேசிங் பெரியசாமி இயக்கத்தில் சிம்பு நடிக்கவுள்ள 'சிம்பு48' படத்தின் அறிவிப்பு கடந்த ஆண்டே வெளியான நிலையிலும் இன்னும் இப்படத்தின் அட்டேட் கொடுக்கவில்லை. ஓராண்டை கடந்துவிட்ட நிலையில், இப்படம் எடுக்கப்படுமா என்பதே தற்போது கேள்விக்குறியாகியுள்ளது.

அதேபோல் புதிய தகவலாக, 'ஓ மை கடவுளே' படத்தின் மூலம் இளைஞர்களைக் கவர்ந்து, தற்போது ஏஜிஎஸ் தயாரிப்பில், பிரதீப் ரங்கநாதன் நடிப்பில் 'டிராகன்' என்ற படத்தை இயக்கி வரும் அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில் ஒரு புதிய படத்தில் சிம்பு நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகிறது.

விரைவில் இப்படம் தொடங்கப்படும் இதற்கான அறிவிப்பும் வெளியாகும் என கூறப்படுகிறது. சினிமாவில் அவருக்குப் போட்டியான நடிகர்களே தொடர்ந்து வெற்றிப் படங்கள் கொடுத்து, சம்பளத்தை பல கோடிகள் உயர்த்தி வரும் நிலையில், இனிமேல் பிரபல இயக்குனர்களின் படங்களில் நடித்து தன் மார்க்கெட்டை ஸ்டடியாக்க சிம்பு திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகிறது.

# விளம்பர படங்களில் சிம்ரன்!



தமிழில் 1997 ஆம் ஆண்டு விஜய்யின் 'ஒன்ஸ்மோர்' படம் மூலம் அறிமுகமாகி, அடுத்து, பிரபுதேவா, அஜித், கமல்ஹாசன், ரஜினிகாந்த், மலையாளத்தில் மம்முட்டி, கன்னடத்தில் சிவராஜ்குமார் போன்ற முன்னணி நடிகர்களுக்கு ஜோடியாக நடித்துள்ளார் நடிகை சிம்ரன். ஒவ்வொரு படத்திலும் அவர் நடிப்பு மற்றும் 'நடனம்' அவருக்கு பிளஸ் பாயிண்டாக அமைந்தது. அரசியல், தொலைக்காட்சி தொகுப்பு என்று தொடர்ந்து சுறுசுறுப்பாக இயங்கிய நடிகையாகவும் இருந்தார். 2009 ஆம் ஆண்டு சுந்தர் சியின் 'ஐந்தாம் படை' மூலம் ரீ எண்டி கொடுத்தார். அதன்பின், ரஜினியுடன் 'தர்பார் 'உள்ளிட்ட படங்களில் நடித்த அவர், சமீபத்தில் டாப் ஸ்டார் பிரசாந்துடன் இணைந்து 'அந்தகன்' படத்தில் வில்லியாக மிரட்டியிருந்தார்.

எனவே மீண்டும் சினிமாவில் ஒரு ரவுண்டு வர திட்டமிட்டுள்ள அவர் தற்போது சசிக்குமாருடன் ஒரு படத்தில் இணைந்து நடிக்கிறார். 'அயோத்தி' படத்தின் மூலம் பிரேக் கொடுத்த சசிக்குமார், இயக்குனர் சரவணனுடன் கூட்டணி அமைத்து செப்டம்பர் 20ல் வெளியான 'நந்தன்' படம் பட்டியலின மக்களை எப்படி அடக்குமுறைக்கு உள்ளாக்குகிறார்கள் என்பதை இக்கதை நடிப்பின் மூலம் ரசிகர்களுக்கு கடத்தியிருந்தனர். இப்படமும் ரசிகர்களின் மத்தியில் வரவேற்பை பெற்ற நிலையில் அறிமுகம் இயக்குனர் இயக்கவுள்ள இப்படத்தில் சசிக்குமாருடன் இணைந்து சிம்ரன் நடிக்கவுள்ளார். இப்படத்தை குட் நைட் படத்தை தயாரித்த 'மில்லியன் டாலர் ஸ்டுடியோஸ்' நிறுவனம் தயாரிக்கவுள்ளது. இப்படத்தின் பூஜை நடைபெற்ற நிலையில், விரைவில் இப்பட அறிவிப்பிற்காக ரசிகர்கள் காத்திருக்கின்றனர். சசிக்குமாரின் சமீபத்திய படங்கள் வித்தியாசமாகவும் நல்ல கதை அம்சத்துடன் கூடியதாக உள்ள நிலையில், சிம்ரனும் அவர் இணைந்து நடிக்கும் படமும் நிச்சயம் எல்லோருக்கும் பிடிக்கும் வகையில் அமையும் என ரசிகர்கள் கருத்துக் கூறி வருகின்றனர். மேலும், சிம்ரன் அடுத்து, அவரது கணவர் தயாரிப்பில் ஒரு படமும், லோகேஷ்குமார் இயக்கத்தில் உருவாகி வரும் பேண்டஷி படத்தில் நடித்து வரும் நிலையில், விஜய் 69 படத்திலும் நடிக்கவாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. இந்த சூழலில் ஒரு பிஸ்கட் விளம்பரத்தில் நடித்த சினேகா_ சிம்ரன் பங்கேற்கும் காட்சி ரசிக்கும்படியாக இருந்தது.

# அரசியலில் நுழைவதற்கு முன் தளபதியின் கடைசி படம்!

GOAT படத்திற்கு பிறகு விஜய் தன் கடைசி திரைப்படமான தளபதி 69 திரைப்படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தை எச்.வினோத் இயக்க அனிருத் இசையமைக்க இருக்கின்றார். கடந்த பிப்ரவரி மாதம் முதல் விஜய்யின் கடைசி திரைப்படமான தளபதி 69 படத்தை இயக்கப்போவது யார் என்ற கேள்வி இருந்து வந்தது. அதற்கு ஒருவழியாக தற்போது விடை கிடைத்திருக்கின்றது.பல இயக்குனர்களின் பெயர்கள் அடிபட்ட நிலையில் விஜய் தன் கடைசி பட இயக்குனராக எச்.வினோத்தை தேர்வு செய்திருக்கின்றார். தெலுங்கில் பிரபலமான தயாரிப்பு நிறுவனமான KVN இப்படத்தை மிகப்பிரம்மாண்டமாக தயாரிக்கவுள்ளது. அக்டோபர் முதல் வாரம் முதல் தளபதி 69 திரைப்படத்தின் படப்பிடிப்பு துவங்கவுள்ளதாக தகவல்கள் வருகின்றன. தளபதி 69 திரைப்படத்தின் அறிவிப்பு வந்தவுடன் இப்படத்தில் நாயகியாக நடிக்கப்போவது யாராக இருக்கும் என்ற கேள்வியும் கணிப்பும் துவங்கிவிட்டது. அதன்படி தளபதி 69 திரைப்படத்தில் சமந்தா தான் நாயகியாக நடிப்பார் என பலராலும் சொல்லப்பட்டது. அதைப்போல ஸ்ரீலீலா, நமிதா பைஜூ என பல நாயகிகளின் பெயர்களும் அடிபட்டு வருகின்றன. ஆனால் இதில் யார் தளபதி 69 படத்தில் நாயகியாக நடிக்க இருக்கின்றார் என இதுவரை அதிகாரபூர்வமான தகவல் வெளியாகவில்லை. இந்நிலையில் சமீபத்தில் வந்த ஒரு தகவலின் படி தளபதி 69 திரைப்படத்தில் மஞ்சு வாரியர் நடிக்க அதிக வாய்ப்புகள் இருப்பதாக தெரிகின்றது

மித்ரா டாக்கீஸ்

# திரை விமர்சனம்: மெய்யழகன்



சொத்து பிரச்சனை காரணமாக பூர்வீக கிராமத்தை விட்டு விட்டு சென்னைக்கு செல்லும் அருள்மொழி (அரவிந்த்சாமி) பல வருடங்கள் கழித்து தனது தங்கையின் திருமணத்துக்காக சொந்த ஊருக்கு செல்ல நேரிடுகிறது. தஞ்சாவூர் நீலமங்கலம் தான் இந்த படத்தின் கதைக்களம். தஞ்சாவூரையும் சென்னையையும் அவ்வளவு அழகாக கதையின் போக்கிலேயே எடுத்துக் காட்டியிருக்கும் விதம் அருமை. திருமணத்துக்கு வரும் அருள்மொழியை பார்த்த மாத்திரத்திலேயே அத்தான் என ஒட்டிக் கொண்டு பாசத்தைக் காட்ட ஆரம்பித்து விடுகிறார் கார்த்தி. ஆனால், அவர் யாரென்றே அடையாளம் தெரியாத அரவிந்த் சாமி அவரது அன்பின் காரணமாக தெரிந்தவர் போலவே நடந்துக் கொள்கிறார். கடைசியில், கார்த்திக்கும் அவருக்கும் என்ன உறவு, கார்த்தியின் பெயர் என்ன? என்பதை அரவிந்த் சாமி தெரிந்துக் கொண்டாரா? என்பது தான் இந்த மெய்யழகன் படத்தின் கதை.

"மெய்யழகன் படத்தின் தெலுங்கு புரமோஷன் நிகழ்வு ஹைதராபாத்தில் நடைபெற்றது. அப்போது தொகுப்பாளர் லட்டு குறித்து கார்த்தியிடம் கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கு கார்த்தி அளித்த பதில் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டது அதைத் தொடர்ந்து கார்த்திக் மன்னிப்பு கேட்டார் .இந்த லட்டு விவகாரமும் படத்துக்கு மேலும் இனிப்பை கூட்டியது குறிப்பிடத்தக்கது.

கார்த்தியின் மனைவியாக ஸ்ரீதிவ்யா, பாசக்கார மாமாவாக ராஜ்கிரண், அரவிந்த் சாமியின் மனைவியாக தேவதர்ஷினி, அப்பா ஜெயப்பிரகாஷ், சரண் சக்தி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

# கோழி பண்ணை செல்லதுரை : விமர்சனம்



சிறுவயதில் பெற்றோரால் கைவிடப்பட்ட செல்லதுரைக்கும் (ஏகன்), அவனது தங்கை ஜெயசுதாவுக்கும் (சத்யா) கோழிப்பண்ணை வைத்திருக்கும் பெரியசாமி (யோகிபாபு) ஆதரவளிக்கிறார். பின் பெரியசாமியின் கோழிக் கடையில் பணியாற்றி தங்கையைக் கல்லூரியில் படிக்க வைக்கிறான்செல்லதுரை. அவரை, அருகில் பானைக்கடை வைத்திருக்கும் தாமரைச்செல்வி (பிரிகிடா சகா), காதலிக்கிறார். சூழ்நிலை காரணமாக அதை அவன் புறக்கணிக்கிறான். இந்நிலையில் தன் கல்லூரியில் அறிமுகமாகும் ஒருவருடன் தங்கைக்கு காதல் ஏற்படுகிறது. இதனால் செல்லதுரை வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள் என்ன? அவன் பெற்றோர் என்ன ஆனார்கள்? தாமரைச்செல்வியின் காதல் என்ன ஆனது? என்கிற கேள்விகளுக்கு பதில் தெரிந்து கொள்ள தியேட்டருக்கு வர வேண்டும்.

இயக்குனர் சீனு ராமசாமியின் சிறப்பான இயக்கத்தில் வெளிவந்துள்ள படம்.

தங்கை மீதான பாசம், தன்னை அவமானப்படுத்த முயல்வோரிடம் காட்டும் கோபம், சக மனிதர்கள் மீதான அன்பு என அனைத்தையும் யதார்த்தமாக வெளிப்படுத்துகிறார். யோகிபாபு சென்டிமெண்ட் நடிப்பில் ரசிக்க வைக்கிறார். ஜெயசுதா, பிரிகிடா சகா இருவரும் கொடுத்த வேலையை செய்திருக்கிறார்கள். நாயகனுடன் பணியாற்றுபவராக வரும் குட்டிப்புலி தினேஷ் பேசும் வசனங்கள் கலகலப்பூட்டுகின்றன. ரகுநந்தனின் பின்னணி இசை கதையின் உணர்வுக்கு வலுசேர்க்கிறது. ஒளிப்பதிவாளர் அசோக் ராஜ், தேனி மலைப்பகுதிகளின் குளிரையும் வராக நதியின் சில்லிப்பையும் உணரச் செய்திருக்கிறார்.

தகவல்: கிட்டு விட்டு



# இனிமே தப்பு பண்ணுவியா?

திரும்பத் திரும்ப பிக் பாக்கெட் அடிச்சிட்டு ஜெயிலுக்கு வர்ரியே, நீ திருந்தவே மாட்டியா?" என்றார் ஜட்ஜ்.

எவ்வளவு தரம் பிக் பாக்கெட் அடிச்சாலும் அதே தண்டனையே தர்ரீங்களே, நீங்க சட்டத்தைத் திருத்த மாட்டீங்களா?" என்றான் பிக் பாக்கெட் பக்கிரி.

ஜட்ஜுக்கு சுருக்கென்றது.

பக்கிரியை ஜெயிலுக்கு அழைத்துப் போகச் சொல்லிவிட்டு ஜெயிலரைத் தனியாக அழைத்து ஏதோ பேசினார் ஜட்ஜ்.

ஜெயிலர், பிக் பாக்கெட் அடித்த பத்துப் பேரை ஒரு பிளாக்கில் வைத்தார். பக்கிரியைத் தனியாக அழைத்து சொன்னார், "இந்த பிளாக்கில் உனக்கு நேரப்படி சோறு கிடையாது. இந்த பிளாக்குக்கு ஒரு கேண்டீன் இருக்கிறது. செய்கிற வேலைக்கு தினமும் இருநூறு ரூபாய் கூலி. அதைக் கொண்டு போய் காசு கொடுத்துச் சாப்பிட வேண்டும். ஒரு டிஃபன் ஐம்பது ரூபாய். ஒரு சாப்பாடு நூறு ரூபாய். மிச்சம் பிடிக்கிற காசு உனக்கு"

பக்கிரி சந்தோஷமாக ஒப்புக் கொண்டான்.

ஜெயிலர் மற்ற ஒன்பது பேரைத் தனியாக அழைத்தார்.

"பக்கிரி கூலியை வாங்கிக்கிட்டு செல்லுக்குப் போகிற வழியில அவனை பிக் பாக்கெட் அடிக்கிறது உங்க வேலை. அவனுக்குத் தெரியவே கூடாது. தினம் ஒருத்தரா இந்த வேலையைச் செய்யணும், யார் எப்ப பண்றீங்கன்னு தெரியக் கூடாது. தெரிஞ்சா உங்க யாருக்கும் சோறு கிடையாது" என்றார்.

அவர்கள் இந்த தொழில் சவாலை ஏற்றார்கள்.

முதல் நாளே பக்கிரி பிக்பாக்கெட்டில் காசை விட்டான். எவ்வளவு கெஞ்சியும் அவனுக்கு இலவசமாய் டிஃபன் தரவில்லை. பசியில் அவனைத் துடிக்க விட்டு கெஞ்சோ கெஞ்சென்று கெஞ்ச விட்டு அப்புறம் துளியூண்டு சாப்பிடத் தந்தார்கள். அவன் சாப்பாடு கிடைக்காமல் தவிப்பதை மற்ற ஒன்பது பேரும் பார்த்துக் கொண்டிருந்தாலும் வேறு வழியில்லை. ஆட்டத்துக்கு ஒப்புக் கொள்ளா விட்டால் ஒன்பது பேர் பட்டினி! அதை விட ஒருத்தன் பட்டினி பரவாயில்லையே! எல்லோரும் விடுதலை ஆகும் அன்று ஜட்ஜ் வந்தார். "சட்டத்தையோ, தண்டனையையோ கடுமையாக மாற்றுகிற அதிகாரம் எனக்கில்லை. ஆனால் ஜெயில் வழக்கங்களை முன் அனுமதியோடு பரிட்சார்த்தமாக மாற்றும் அதிகாரம் ஜெயிலருக்கு உண்டு. உங்கள் மனப்பாங்கு இப்போது எப்படி இருக்கிறது?" என்றார்.


"ஒரு நாள் முழுக்க கஷ்டப்பட்டு சம்பாதிச்சதை ஒரு செக்கண்டில தட்டிக்கிட்டு போறது எவ்வளவு அக்கிரமம்ன்னு இப்போ புரியுது, இனி பிக்பாக்கெட் அடிக்க எனக்கு மனசு வராது" என்றான் பக்கிரி.

"பிக் பாக்கெட் கொடுத்தவன் பசியில துடிக்கிறதைப் பார்க்க சகிக்கல்லை. செத்தாலும் இனிமே பிக்பாக்கெட் அடிக்க மாட்டோம்" என்றார்கள் மற்ற ஒன்பது பேரும். ஜட்ஜ் ஒரு திருக்குறள் அபிமானி. வள்ளுவர் சொன்னதைத்தான் அவர் செய்தார்.

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து

குற்றம் செய்யப்பட்ட சூழ்நிலையை ஆராய்ந்து, குற்றவாளி மீண்டும் அத்தகைய குற்றத்தைச் செய்யாத வண்ணம் தண்டனை வழங்குகிறவன்தான் சிறந்த அரசன் ஆவான்.

# அப்பா மாறவில்லை



44 வருடங்களுக்கு முன்னால், டிகிரி முடித்து விட்டு, சேலத்தில் சிகி படிக்க ஆடிட்டரிடம் சேர்ந்தேன்.

CA முடிக்கவில்லை. பிறகு ஊட்டியில் ஒரு கம்பெனியில் இன்டர்னல் ஆடிட்டில் வேலையில் இருந்தேன். ஊட்டியில் நான் வாங்கிய முதல் மாத சம்பளம் 500 ரூபாய். அதுவும் அந்த மாதத்தின் 7 ஆம் தேதி தான் கொடுப்பார்கள். அப்படி முதல் மாதச் சம்பளம் வாங்கியதும், மனதில் சந்தோஷத்தின் அலைகள். வீட்டிற்கு கடிதம் எழுதினேன்.

பிறகு ஒரு வார இறுதியில் சேலம் வந்தேன்.

அப்போதெல்லாம் அப்பாவிடம் நான் அதிகமாக பேசுவதில்லை. மெல்லியதாக குசலம் மட்டும் விசாரித்து விட்டு,"உங்களுக்கு எதாச்சும் வேணுமா?"

அப்பா பதில் சொல்லவில்லை. அம்மாட்ட கேளு என்று சொல்லி விட்டு போய்விட்டார். நான் அம்மாவிடம், "பாத்தியாம்மா. நான் ஏதாவது வேணுமான்னு அப்பாட்ட கேட்டேன். பதிலே சொல்லல. இவரெல்லாம்" என்று துவங்கி, அப்பாவை சிறிது வசை பாடிவிட்டு, ஊட்டி கதைகளை அளக்க ஆரம்பித்தேன். அந்தக் கதைகளை அம்மாவிடம் பலமுறை சொல்லி இருந்தாலும், ஒவ்வொரு முறையும் முதல் தடவை போல கேட்பாள் அம்மா.

"ஏண்டா! ஊட்டில இந்த சம்பளம் போறுமா? என்னதான் அக்கா வீட்டில இருந்தாலும் பணம் குடுத்தா தானே நமக்கு மரியாதையா இருக்கும்னு அப்பா சொல்லிட்டு இருந்தார். "அதுக்கெல்லாம் அக்காகிட்ட கொடுத்துட்டு தான் இருக்கேன். பிரச்சனை எதுவும் இல்ல"

அவ்வப்போது ஏதாவது இன்டர்வியூக்கு சென்னை சென்று வருவேன். லீவு போட்டால் சம்பளம் கிடையாது.

ஒரு முறை மாதத்தில் மூன்று முறை சென்னை செல்லும்படி ஆகிவிட்டது.

திடீரென்று பணம் பற்றாக்குறை ஏற்பட்டு விட்டது. அக்காவிடம் கேட்க முடியாது. அவளே சிரமத்தில் இருந்தாள். அப்பாவிடம் சொல்ல கஷ்டமாக இருந்தது. சரி என்று சக நண்பன் குன்னூர் முரளியிடம் கொஞ்சம் பணம் வாங்கி மேனேஜ் பண்ணினேன்.

இதை ஏதேச்சையாக அம்மாவிடம் சேலம் வந்திருந்த போது, சொன்னேன். அடுத்த நாள் ஊட்டி கிளம்பும் போது, அம்மா, "டேய் அப்பா நேத்து கொஞ்சம் பணம் கொடுத்தார். அத உன் பேக்குல வச்சுருக்கேன். பாத்துக்கோ" சரி என்று கிளம்பியவன் அதைப்பற்றி அலட்டி கொள்ளாமல் இருந்து விட்டேன்.

ஊட்டி வந்து என் டிராவல் பேக்கை கிளியர் செய்தபோது பார்த்தேன். அதில் ஒரு 500 ரூபாய் இருந்தது. 500 ரூபாயா? என் ஒரு மாத சம்பளம். அப்பா அம்மாவிடம் கொடுத்து, அம்மா உள்ளே வைத்து இருக்கிறாள். மனதை என்னவோ செய்தது.

பின்பு ஒரு பிரிட்டிஷ் கம்பெனியில், விற்பனை பிரதிநிதி வேலை கிடைத்து, சென்னைக்கு வந்தேன்.

சம்பளம் நாலு இலக்கு. பேட்டா அது இது என்று சந்தோஷமான வாழ்க்கை. சென்னையில் சமாளித்து விடலாம் என்ற நம்பிக்கை வந்து விட்டது. வார இறுதியில் வழக்கம்போல சேலம் வந்து, என் சென்னை

பிரதாபங்களை அம்மாவிடம் ஒப்பித்தேன்.

அப்பா எப்பவும் போல நலம் விசாரித்து விட்டு, அமைதியாக அவர் வேலையை பார்த்து கொண்டு இருந்தார். "ஏண்டா அடுத்த மாசம் தீபாவளி வருது. எனக்கு ஒன்னும் வேண்டாம். அப்பாவுக்கு வேட்டி சட்டை ஏதாவது எடுத்துட்டு வாடா. வேண்டாம்னு உங்கிட்ட சொன்னாலும், மனசுக்குள்ள சந்தோஷப்படுவார்"

சரி. பார்க்கலாம் என்று சென்னை வந்து விட்டேன். தீபாவளிக்கு தி. நகரில் எனக்கு பேண்ட் சர்ட் எடுத்துக்கொண்டு, சேலத்தில் ஜாலி டெய்லரிடம் தைத்து கொள்ளலாம் என்று வந்து விட்டேன்.

வந்ததும் டெய்லரிடம் டிரஸ் தைக்க கொடுத்து விட்டு, சொன்னேன். "மச்சான்! எப்பவும் போல தலைய தலைய ஆட்டிட்டு, அம்போன்னு வுட்டுராதே. நைட்டு கொடுத்துரு. தீபாவளிக்கு வேற டிரஸ் இல்லடா"

"ஏண்டா! கடைசி நிமிஷத்துல வந்து, என்னோட உயிர வாங்கறதே உனக்கு பொழப்பா போச்சு. சரி. யார் கிட்ட கதை வுடறே? போனவாரம் தான் உங்கப்பா வந்து, உன்னோட அளவு பேண்ட், சர்ட் கொடுத்து, ரேமண்ட்ஸ் டிரஸ் மெட்டீரியலும் கொடுத்து, உன்னோட தீபாவளி டிரஸ்னு சொன்னார்.

நானும், உன்னோட அளவு எங்கிட்ட இருக்குன்னு சொல்லி, தைச்சு நாலு நாலுல கொடுத்துட்டேன். அப்பாவே வந்து வாங்கிட்டு போனாரே"

அப்படியா! எனக்கு தீபாவளி டிரஸ் தைச்சாச்சா? வீட்டுல இருக்கா? நீண்ட நாள் நண்பன் இவன். பொய் எல்லாம் சொல்ல மாட்டான். அம்மாவும் ஒன்னும் சொல்லலையே. பார்க்கலாம். சரிடா. எனக்கு தெரியல. பரவாயில்ல. இதையும் இன்னிக்கு தைச்சு நைட்டு கொடுத்துரு. இரண்டா இருக்கட்டுமே"அவன் காதில் போட்டு கொள்ளவில்லை என்பது அவன் துணியை பிடுங்கி உள்ளே வைப்பதில் இருந்தே தெரிந்தது. சாப்பிடும் போது அம்மா ஏதேச்சையா கேட்டாள். "அப்பாவிற்கு துணி எடுத்துட்டு வந்திருக்கியாடா"

அடடா! சுத்தமாக மறந்து போச்சே. எடுக்கலயே. குற்ற உணர்வு மனதில் வட்டமிட, அம்மாவை பார்த்தேன்.

என் அமைதியை அம்மா புரிந்து கொண்டு விட்டாள். "சரி. எடுக்லேன்னா பரவாயில்லை. அடுத்த முறை எடுத்துக்கலாம். அப்பா அதை எல்லாம் எதிர் பார்க்கமாட்டார்" "ஏம்மா, எனக்கு டிரஸ் எடுத்திருக்கறதா? ஜாலி சொன்னான்."

"ஆமாடா. எனக்கே தெரியாது. அப்பா உனக்கு டிரஸ் எடுத்து, உன்னோட டெய்லர்கிட்ட போய், அவரே கொடுத்து, தைச்சு வாங்கி கொண்டு வந்துட்டார். பீரோல தான் இருக்கு. உனக்கு சர்ப்ரைசா கொடுக்கலாம்னு இருந்தேன். அதுக்குள்ள, அந்த ஜாலி உங்கிட்ட சொல்லிட்டானா?"

பீரோவை திறந்து பார்த்தேன். ஜாலி சொன்னமாதிரி, ரேமண்ட்ஸ் சூட்டிங். தைத்து அழகாக மடித்து வைக்கப்பட்டு இருந்தது. தரமான மெட்டீரியல். விலை அதிகமாக இருக்குமே? நான் கூட இப்படி காஸ்ட்லியாக எடுக்கலயே?

நான் வேலைக்கு போன பிறகும், அப்பா எனக்கு தீபாவளி டிரஸ் எடுப்பதை நிறுத்தவில்லை. நான் கூட தீபாவளிக்கு அப்பா அம்மாவிற்கு எதுவும் வாங்கி வரவில்லை. ஆனால் இவர்கள் நான் வீட்டிற்கு வரும் முன்னதாக, துணி எடுத்து, தைத்து வைத்து இருக்கிறார்கள். அப்பா வந்தார். டிரஸ் வாங்கியதை பற்றி என்னிடம் எதுவும் சொல்லவில்லை. "என்னடா பட்டாசு ஏதாவது வாங்கனும்னா, ராஜகணபதி கோவில் பக்கத்துல, நம்ம மணி, பட்டாசு கடை போட்டிருக்கான்.

உன்னை வந்தவுடன் கடைக்கு வரச் சொன்னான்.

என்ன வேணுமோ வாங்கிக்கோ.

பணம் அப்புறமா நான் கொடுத்துடறேன்"

"இல்லப்பா. பட்டாசு எல்லாம் ஒன்னும் வேண்டாம். சும்மா சாங்கியத்துக்கு கொஞ்சம் நானே வாங்கிக்கிறேன்"


நான் சொல்வதை அப்பா நம்பாதது மாதிரி அவருடைய பார்வை இருந்தது. ஆச்சரியமாக பார்த்து கொண்டு நகர்ந்து போய் விட்டார். சின்ன வயதில் பட்டாசு கம்மியாக வாங்கி கொடுத்ததற்கு, அப்பாவிடம் சண்டை போட்டது, ஞாபகத்திற்கு வந்து போனது. பாவம் அப்பா.

கையில் கொஞ்சம் காசு வந்தவுடன், நான் தான் மாறியிருந்தேன். அப்பா மாறவேயில்லை.

போனவரம், நாரதகான சபாவில் ஒரு பாகவதர் உபன்யாசம் கேட்க, நண்பன் கிருஷ்ணனோடு போயிருந்தபோது, பாகவதர் சொன்னது ஞாபகத்தில் வந்தது. அவர் சொன்னது இது தான்.

"தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தை அன்பின் முன்னே". ஒரு கட்டத்தின் வெளித்தோற்றம் மாதிரி அம்மா. பார்க்க அழகாக இருப்பாள். வீடும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று நினைப்பாள். ஆனால் அந்த வீட்டின் அஸ்திவாரம் அப்பா. அதன் பலன் வெளியே தெரியாது. ஆனால் உறுதியாக இருக்கும்.

நான் போகும் பாதை எல்லாம் என் தந்தை போட்டு வைத்தது. எனைச் சேரும் செல்வம் எல்லாம், அவர் பார்த்து விதைத்தது! கையில் கொஞ்சம் காசு வந்தவுடன், நான்தான் மாறியிருந்தேன். அப்பா மாறவேயில்லை! இதுபோல் ஆயிரம் அப்பாக்கள்.




**பே**ண்ட் டி.சர்ட் உடையில் உள்ளே நுழைந்தார் கபாலி கான்.

அவரிடம் சக்கரை, கல்கண்டு அல்வா,மைசூர் பாக் ஆகியவற்றை சின்ன கின்னங்களில் வைத்து நீட்டினோம்.

ஏன் என்று அவர் கேட்பதற்கு முன்பே போன இதழில் நீங்கள் அமெரிக்கா சென்றுள்ள முதல்வர் வந்த பிறகு அரசியல் களைகட்டும் என்று சொன்னீர்கள் அதுபோல இப்போது நான்கு நிகழ்ச்சிகள் நடந்திருக்கிறது எனவே உங்களுக்கு பிடித்த ஸ்வீட் எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னோம்.

எல்லாவற்றையும் கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக் கொண்டவர் தொடர்ந்து செய்திகளை சொல்ல ஆரம்பித்தார்.

அமெரிக்காவிலிருந்து திரும்பிய முதலமைச்சர் பிரதமரை சந்திப்பேன் என்று சொன்னார். நிதி ஒதுக்கீடு தொடர்பாக சந்திக்க இருக்கிறேன் என்று சொன்ன மாதிரியே சந்தித்து விட்டு வந்தார். ஆனால் அதிலும் அரசியல் இருப்பதாக எதிர்க்கட்சிகள் பிரச்சாரம் செய்தன.

**என்ன பிரச்சாரம்?**

முதல்வர் மூன்று கோரிக்கைகளுக்காக போனதை செந்தில் பாலாஜி விடுதலை மற்றும் அமைச்சராக்குதல் உதயநிதி ஸ்டாலின் துணை முதலமைச்சர் ஆக்குதல் போன்ற கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டி தான் பிரதமரை சந்தித்தார் என்று சொன்னார்கள்.



**அது சாத்தியமா?**

அதில் உண்மை இருக்கிறதா என்பதை விட ஏற்கனவே ஓ பன்னீர்செல்வம் பிரதமர் சொல்லி தான் நான் ஒத்துக் கொண்டேன் என்று சொன்னதையும் பொருத்தி வைத்து வலைதளங்களில் விவாதித்து வருகிறார்கள்.

எப்படியானாலும் திமுகவில் உதயநிதி துணை முதலமைச்சர் ஆனதும் ஏற்கனவே அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி ஆவடி நாசர் மற்றும் கோவி. செழியன், பனைமரத்துப்பட்டி ராஜேந்திரன் என்று நால்வர் புதிய அமைச்சர்களாக பதவி ஏற்றதும், திமுகவில் தொண்டர்கள் மத்தியில் பெரிய எழுச்சி ஏற்படுத்தி விட்டது.

குறிப்பாக செந்தில் பாலாஜி வெளியே வருவதற்கு வாய்ப்பே இல்லை என்று எதிர்பார்த்த நேரத்தில் 471 நாட்கள் கழித்து அவர் வெளிவந்தது தொண்டர்களை உற்சாகப்படுத்தியுள்ளது.

ஆனாலும் தொண்டர்கள் மத்தியில் ஒரு கவலை இருக்கத்தான் செய்கிறது

**அது என்ன?**

பொதுச் செயலாளர் துரைமுருகன் உதயநிதி பெயரை மேடைகளில் உச்சரிப்பதில்லை என்பதுதான் அது.

**அதனால் என்ன ஆகும்?**

ஒன்னும் ஆகாது. தொண்டர்கள் மத்தியில் உதயநிதி ஸ்டாலினுக்கு ஆதரவு இருக்கிறது என்று திமுகவில் உள்ள மூத்த உறுப்பினர்கள் முன்னணியினர் ஒப்புக்கொள்கிறார்கள். ஏற்கனவே துரைமுருகன் வருத்தத்தில் இருப்பதால் அதைப்பற்றி பொறுட்படுத்த வேண்டியது என்று தொண்டர்கள் கருதி விட்டார்கள். இருப்பினும் எதிர்க்கட்சிகள் தங்கள் வாய்க்கு அவலாக இதை பயன்படுத்திக் கொள்வார்கள் என்ற சூழல் உருவாகி இருக்கிறது.

இதற்காகத்தான் உதயநிதி ஸ்டாலின் தன்னுடைய பேட்டியில் "தன் மீதான



விமர்சனங்களுக்கு தன்னுடைய செயல்களின் மூலம் பதில் சொல்வேன்"என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

**மற்ற கட்சிகளின் நிலைமை!**

திமுக கூட்டணியில் உள்ள கட்சிகளை காஞ்சிபுரத்துக்கு அழைத்து வந்து பவள விழா கூட்டத்தில் உரிய மரியாதை செலுத்தி அவர்கள் கூட்டணி விட்டு வெளியே போகாத அளவுக்கு பார்த்துக் கொண்டார்கள் தி.மு.க.வினர்.

அதே நேரத்தில் அ.தி.மு.கவில் இணைப்பு என்ற பேச்சு சற்று அடங்கி இருப்பது போல தோன்றுகிறது.

**எப்படி சொல்றீங்க?**

அண்ணாமலை வெளிநாடு சென்ற பிறகு பா.ஜ.க.வில் தமிழிசையின் பேட்டி அவ்வப்போது வெளியாகிறது. அதேபோல அ.தி.மு.கவில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பேட்டி அளிப்பதும், பொது நிகழ்ச்சிகளில் அ.தி.மு.க சார்பில் பங்கு கொள்வதும் நடந்து வருகிறது.

**சரி நல்ல விஷயம் தானே?**

ஆனால் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி விழாவில் நடந்த ஒரு விஷயம் மிக முக்கியமாக எல்லோராலும் பார்க்கப்பட்டது

**என்னது அது?**

அந்த விழாவில் பங்கேற்ற ஜெயக்குமார் அமைச்சர்கள் பக்கத்தில் அமர்ந்து கொண்டாரே தவிர அருகாமையில் ஒரு இருக்கை இருந்தும் அந்த இருக்கை காலியாக இருக்கும் போது ஓ.பி.எஸ் பக்கத்தில் உட்காராமல் தள்ளி உட்கார்ந்து கொண்டார் ஜெயக்குமார். அமைச்சர்கள் பக்கத்தில் கூட உட்கார்ந்தாலும் உட்காருவேனே தவிர ஓ.பி.எஸ் பக்கம் தலை வைத்து படுக்க மாட்டேன் என்பது போல ஜெயக்குமார் நடந்து கொண்டு இருக்கிறார். இதனால் மீண்டும் இணைப்பு என்ற பேச்சுக்கு என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆனால் ஓ.பி.எஸ். ஒன்றிணையாமல் வெற்றிக்கு வாய்ப்பில்லை என்றார்.

எதிர்க்கட்சி அரசியல் அண்ணாமலை திரும்பி வந்த பிறகு சூடு பிடிக்கும். அதுவரை ஆளுங்கட்சி காட்டில் அடைமழை தான் என்று சொல்லிக்கொண்டே , மழை வருவது போல இருக்கிறது கிளம்பிட்டா என்று சொல்லி வெளியேறினார் கபாலிகான்.

# சந்திரனில் பெரிய பள்ளத்தை கண்டுபிடித்த சந்திராயன்-3 பிரக்யான் ரோவர்



இந்தியாவின் சந்திராயன்3 விஷன் 2023 சந்திரனில் அதன் வெற்றிக்கரமான பணியை முடிவு செய்த பிறகும் புதிய கண்டு பிடிப்புகளை செய்து வருகிறது.

நிலவின் தென்துருவ பகுதியில் பிரக்யான் ரோவர் தனது தரையிறங்கும் இடத்திற்கு அருகில் 160 கி.மீ. அகலத்தில் பெரிய பள்ளத்தை கண்டுபிடித்துள்ளது. இதனை அகமதாபாத்தில் உள்ள இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்தின் விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். சமீபத்தில் அறிவியல் நேரடி இதழிலும் இது வெளியிடப்பட்டுள்ளது.

பிரக்யான் ரோவர் அதன் தரையிறங்கும் தளத்தில் தென்துருவஎய்ட்கன் படுகையில் இருந்து சுமார் 350 கி.மீ. தூரத்தில் நிலவின் மேற்பரப்பில் உள்ள மிகப் பெரிய மற்றும் பழமையான படுகையை கடந்து சென்ற போது இந்த பள்ளத்தை கண்டுபிடித்துள்ளது.

இந்த பள்ளம் தென் துருவஎய்ட்கன் படுகையை உருவாக்குவதற்கு முன்பே உருவாகியிருக்கலாம் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். இந்த பள்ளம் குப்பைகளால் நிரப்பப்பட்டுள்ளது. இது சிதைந்த நிலையில் உள்ளது.

பிரக்யான் ரோவரின் உயர் திறன் கொண்ட கேமராக்கள் இந்த பள்ளத்தை படம் பிடித்துள்ளது. இதன் மூலம் விஞ்ஞானிகள் சந்திரனில் புதைக்கப்பட்ட பொருட்களை ஆய்வு செய்வதற்கான அரிய வாய்ப்பை பிரக்யான் ரோவர் வழங்கியுள்ளது. பிரக்யான் ரோவரின் இந்த கண்டுபிடிப்பு உலகம் முழுவதும் உள்ள விஞ்ஞானிகளை மிகுந்த உற்சாகப்படுத்தியுள்ளது.

இந்த பள்ளத்தில் இருந்து சேகரிக்கும் பழங்கால தகவல்கள் சந்திரனின் ஆரம்ப கால வரலாறு மற்றும் அதன் தனித்துவமான உருவாக்கம் பற்றி இருந்த நமது புரிதலை மாற்றியமைக்க முடியும். இந்த படங்கள் நிலவின் புவியியல் பரிமானத்தை பற்றிய முக்கியமான நுண்ணறிவுகளை வழங்கியுள்ளது. காலப்போக்கில் தொடர்ச்சியான பேரழிவு தாக்கங்களால் மேற்பரப்பு எவ்வாறு வடிவமைக்கப்பட்டது என்பதை இந்த படம் வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

பள்ளம் கண்டுபிடிக்கப்பட்ட தென் துருவ எய்ட்கன் படுகை கிட்டத்தட்ட 1400 மீட்டர் தூரம் குப்பைகளால் மூடப்பட்டுள்ளது. இந்த பள்ளத்தை ஆய்வு செய்வதன் மூலம் சந்திரனின் ஆரம்ப கட்டம் அதன் செயல்முறைகளை பற்றி விஞ்ஞானிகள் தெரிந்து கொள்ள உதவும். இது எதிர்காலத்தில் சந்திர பயணம் மற்றும் விண்வெளி ஆய்வு முயற்சிகளுக்கு பல முக்கிய தகவல்களை தரலாம் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

# ஒரே மேடையில் அபிநயா சிரோன்மணி மற்றும் நாட்டிய தாரகை பட்டம் பெற்ற செல்வி சுதிக்ஷா



**செல்வி** பசுமரத்தி சுதிக்ஷா அவர்களின் நாட்டிய அரங்கேற்ற நிகழ்வில் வெகு சிறப்பாக பரத நாட்டிய நடனமாடியதற்கு அபிநயா சிரோன்மணி மற்றும் நாட்டிய தாரகை பட்டம் வழங்கப்பட்டதோடு கலந்து கொண்ட பெருந்திரளானோர் நடனத்தை கண்டு பாராட்டினை தெரிவித்தனர்.

செல்வி பசுமரத்தி சுதிக்ஷா அவர்கள் சென்னை அபிநயா நாட்டியாலயாவில் நாட்டியப் பயிற்சியை நிறைவு செய்து சென்னை சேத்துபட்டு சின்மயா ஹெரிடேஜ் சென்டர் தபோவன் ஹாலில் நடைபெற்ற நடன அரங்கேற்ற நிகழ்வில் பெருந்திரளானோர் பங்கேற்றனர். தமிழக கலை பண்பாட்டுத் துறை துணை இயக்குனர் பி.ஹேமநாதன் மற்றும் பரதநாட்டிய கலாக்ஷேத்ரா அறக்கட்டளையில் பேராசிரியர் கே.மோகன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டனர். இந்நிலையில் அபிநயா நாட்டியாலயா சார்பில் அபிநயா சிரோன்மணி பட்டமும் பேனா முனை பத்திரிகையாளர்கள் சமூக ஊடக சங்கம் மற்றும் ஸ்ரீவாசவி ஜோதி மாத இதழ் சார்பில் நாட்டிய தாரகை பட்டமும் வழங்கப்பட்டது.

திருமதி பானுமதி தேவராஜன் அவர்களின் பேத்தியும், திருமதி லீலாவதி திரு. காமேஷ் பாபு அவர்களின் புதல்வி ப. சுதிக்ஷா தனது 5 வயதில் குரு டாக்டர் சுமதி சுந்தரின் வழிகாட்டுதலின் கீழ் தனது பரத நாட்டியப் பயணத்தை 2013ல் தொடங்கினார். அதே ஆண்டில் அவரது சலங்கை பூஜையுடன் அவரது அர்ப்பணிப்பு முதன் முதலில் அரங்கேறியது. அன்றிலிருந்து திருவதிகை, திருவையாறு, தஞ்சாவூர் சின்னமேளம், வேலூர் பொற்கோயில் திருப்பதியில் நடன நீராஞ்சனம், பிரகதீஸ்வரர் கோயில் மற்றும் குருவாயூர் உள்ளிட்ட புகழ்பெற்ற திருத்தலங்களில் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். இவரது திறமையால் பல்வேறு மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்று விருதுகளையும் பெற்றுள்ளார்.

சுதிக்ஷா பரதநாட்டியத்தில் தரம் 7 வரை முடித்துள்ளார். மேலும் 8ம் தரத்திற்கு தயாராகி வருகிறார். அவரது நடன பயிற்சியுடன் வீணை மற்றும் குரல் இசையில் படிப்பை தொடர்ந்து, மேலும் அவரது கலைத் திறன்களை மேம்படுத்தினார். தற்போது அவர் முகப்பேர் நாராயணா ஒலிம்பியாட் பள்ளியில் பதினோராம் வகுப்பில் பயின்று வருகிறார். தனது மாறுபட்ட திறமைகள் மற்றும் அர்ப்பணிப்பு மூலம் சுதிக்ஷா இந்திய பாரம்பரிய கலைகளின் வளமான பாரம்பரியங்களை தொடர்ந்து மதிப்பதோடு அதனை பயிற்சியும் பெற்று வருகிறார்.



செல்வி பசுமரத்தி சுதிக்ஷா தொடர்ந்து பல சாதனைகள் படைக்க மனதார பாராட்டுகிறோம்.




# KIDS AND JUNK FOOD

Junk foods are yummy, looks enjoyable and quick to prepare and are often readymade food items. The word “junk” refers to waste or low quality. Hence (junk +foods) comes with a direct meaning that the foods which are of little or no nutritional value. Foods that are high in calories, fat, sugar and salt are not considered healthy and fall under junk food category. Some examples of junk foods include Sweet drinks, lollipops, chocolates, sweet snacks, chips, biscuits, cakes, jam etc., consuming junk foods harm children’s health in all the ways

**Nutritional Deficiencies**

Growing kids need nutrition rich foods including essential vitamins, minerals and micronutrients which helps in their overall body and brain development. Parents must prioritize nutrient dense alternatives to support their children’s growth and development adequately. Children tend to go for the junk foods over healthy food obviously as they look appealing for their taste buds. These foods on consumption provide zero nutrients stopping proper growth of young children. While children don’t realise the impacts of such junk foods, we parents must take a serious initiative to cut down on junk and replace with healthy and energetic food items for our children. It is really hard to make the little ones understand the pros and cons of a healthy food vs unhealthy food respectively, whereas we should slowly try to feed them nutritious food in an attractive way. How the food looks attracts the kids in first place. We could try creative ways to introduce



healthy foods and avoid unhealthy processed foods over time.

**Behavioural and cognitive implications**

Theres a link between junk food consumption and adverse behavioural and cognitive outcomes in children including Poor concentration, mood disturbances and impaired academic performances. Opt for whole, unprocessed food to fuel your child's brain for optimal function and focus. Consuming diet high in fast food and sugary drinks can lead to behavioural problem including Hyperactivity, ADHD and even depression. Children don't understand how this kind of foods negatively impact their health, it can be addictive. Both our body and brain needs adequate nutrition to function properly, we can not leave one behind. Body and brain functioning are equally important for a healthy, happy and productive living.

**Less Energy**

Physical activity is very important for kids. Fast foods can inhibit participating in extra curricular activities because it doesn't provide adequate nutrients for physical activity. Lack of physical activity not only keeps children out of peer groups but also impairs physical and mental health. Every parent's wish is to see the kids jump up and down, run around, play joyfully. We don't want our little ones to sit in a place, inactive and not moving. Let's boost that energy in them by providing nourishing diet and cut the unwanted foods from their routine.

**Weight gain**

One of the most significant side effects of junk foods is its impact on children's weight. They lead to unhealthy excessive weight gain and obesity. In addition to being overweight, children who consume fast food regularly are at increased risk for developing diabetes, high blood pressure and other chronic health conditions.

**Marketing towards children**

Additionally, fast food chains often target their marketing towards children, using bright colours, cartoon characters and catchy slogans for them to choose



their products over healthier options. The brands never stop but we can stop our kids from getting into their trap by educating regularly on its side effects.

**Conclusion:**

The initial approach of parents should be to minimise their exposure to fast foods as much as possible. This means avoiding fast food restaurants whenever possible and choosing healthier option while eating out. Providing a well-rounded diet that comprises ample vegetables fruits whole grains and lean protein is crucial for parents to ensure their children's nutritional needs are met at home. Parents can explain the long term consequences of a poor diet and help children understand how their food choices can impact their health and well-being.



**N.RANJANI**
B.Sc (Computer Science)
THE NILGIRILS- 643213
Email: ranjnagaraj@gmail.com



முனைவர் திரு எஸ் ஐயர் ஐஏஎஸ் அவர்கள் கலந்துகொண்டு திரு.அன்பழகன் எழுதிய விடுதலைப் போராளி வீர மங்கை ராணி வேலுநாச்சியார் என்ற நூலை வெளியிட்டார். நூலை சினிமா ஸ்டண்ட் மாஸ்டர் கனல் கண்ணன், சிவி மணிமாறன் (முன்னாள் இயக்குனர் கனரா வங்கி), எம் கரிகாலன் (முன்னாள் நகர மன்ற தலைவர் தாம்பரம்)மற்றும் டி கே செல்வசாமி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

# Very important News for PENSIONERS!

Pensioners are not required to provide proof of survival in future because the Central Government has come up with a different plan.

If pensioners did not provide proof of survival every year, their pension was terminated. But now pensioners will be relieved of this hassle. The Central Government will soon introduce high-tech technology called Face Recognition System for pensioners. According to the new technology, the face of the pensioner will be proof that he is alive.

The new technology was unveiled by Minister of State Jitendra Singh. What is Face Recognition Technology? According to this, the bank is not required to provide proof of survival in writing. Bank officials will verify the faces of pensioners through a mobile app.



As soon as scanning of the face is completed, the concerned pensioner will be registered in the application. This will be digital proof of his being alive. Many pensioners are unable to go to the bank due to old age. As such, this new technology will definitely be useful for pensioners.

மித்ரா கிட்சன்

# மைதா பர்பி
## Maida Burfi



**தேவையான பொருட்கள்:** மைதா மாவு – ஒரு கப், சர்க்கரை – 1 1/2 கப், நெய் – ஒரு கப், முந்திரி – 15, இனிப்பில்லாத கோவா – ஒரு கரண்டி, கலர் பவுடர் – 2 சிட்டிகை.

**செய்முறை:** அடுப்பில் ஒரு வாணலியை வைத்து ஒரு கரண்டி நெய் ஊற்றிக் கொள்ளவும். நெய் காய்ந்தவுடன் அதில் முந்திரியை போட்டு வறுத்து எடுத்து வைத்துக் கொள்ளவும். பிறகு ஆறியவுடன் அதை மிக்ஸியில் போட்டு ஒன்றிரண்டாக அரைத்து எடுத்து வைத்துக் கொள்ளவும். பிறகு அதே வாணலியில் மேலும் ஒரு கரண்டி நெய் ஊற்றி மைதாவை போட்டு மாவின் நிறம் லேசாக மாறும் வரை கிளறி இறக்கவும்.

அதன் பிறகு ஒரு மிக்ஸி ஜாரில் முந்திரியை சேர்த்து பவுடர் செய்து வைத்துக் கொள்ளவும்.

பிறகு மற்றொரு பாத்திரத்தில் சர்க்கரையை சேர்த்து சிறிது தண்ணீர் ஊற்றி பாகு பதம் வரும் வரை காய்ச்சவும். சர்க்கரை கரைந்து பாகு ஒரு கம்பி பதத்திற்கு வந்ததும் இறக்கி விடவும்.



S.கவிதா
சிட்லபாக்கம்

பாகு கம்பி பதம் வந்ததும் அடுப்பை அணைத்து கீழே இறக்கி வைத்து வறுத்து வைத்திருக்கும் மைதாவை ஊற்றி கிளறிக் கொண்டே இருக்கவும். அதனுடன் பொடி செய்து வைத்திருக்கும் முந்திரி, கோவா மற்றும் கலர் பவுடரை கரைத்து ஊற்றி கைவிடாமல் கிளறிக் கொண்டே இருக்கவும்.

கலவை பாத்திரத்தில் ஒட்டாமல் கெட்டியாகி வரும் வரை கிளறவும்.

கலவை கெட்டியானதும் நெய் தடவிய தட்டில் ஊற்றி அடி சமமான மூடி அல்லது கிண்ணத்தை வைத்து மேலே சமப்படுத்தி விடவும்.

5 நிமிடம் கழித்து கத்தியில் நெய் தடவிக் கொண்டு சதுர வடிவில் கட் செய்யவும். அதன் பிறகு 10 நிமிடம் கழித்து பர்பியை தட்டிலிருந்து வெளியே எடுக்கவும். அவ்வளவு தான்,

இப்பொழுது சூப்பரான, சுவையான , அட்டகாசமான கலரில் ,அசத்தும் சுவையில் மைதா பர்பி தயாராகி விட்டது.

# தரமில்லாத உறவில் இருப்பதைவிட தனிமையில் இருப்பது நல்லது!



யாரையும் "காயப்படுத்தாதீர்கள்."

நீங்கள் உண்மையிலேயே யார் என்று புரிந்து கொள்ளாத ஒருவரைப் பிடித்துக் கொண்டிருப்பதை விட சில நேரங்களில் அவர்களை கைவிட்டு முன்னே செல்வது நல்லது.

நீங்கள் அவர்களுடன் இல்லாததன் வலியை அவர்கள் உணரும் நேரம் கண்டிப்பாக வரும் உங்கள் முக்கியத்துவம் ஒருநாள் கண்டிப்பாக புரியும்.

உங்களுடன் தொடர்ந்து பயணம் செய்யாத முடியாத, மதிப்பில்லாத அந்த உறவை நினைத்து நீங்களே உங்கள் இதயத்தை காயப்படுத்துவதை நிறுத்துங்கள்.

உங்கள் மீது அக்கறை கொள்ளும்படி யாரையும் கட்டாயப்படுத்த முடியாது.

உங்களுக்கு உண்மையாக இருக்கும்படி யாரையும் கட்டாயப்படுத்த முடியாது.

உங்களுக்குத் பிடித்த நபராக இருக்க நீங்கள் ஒருவரைக் கட்டாயப்படுத்த முடியாது அவர்களாக இருக்க வேண்டும்.

உண்மை என்னவென்றால் சில சமயங்களில் நீங்கள் மிகவும் விரும்பும் நபர் உங்களுடன் இல்லாமல் போனாலே நீங்கள் சிறந்தவராக இருப்பீர்கள்.

உங்கள் வாழ்க்கையில் வரும் விஷயங்கள் எல்லாமே உங்களுக்கு மகிழ்ச்சியை கொடுக்கும் என்று நினைப்பதை நிறுத்துங்கள்.

சில விஷயங்கள் தோல்விகளை கொடுக்கும், சில பாடங்களை கொடுக்கும், சில வருத்தங்களை கொடுக்கும், சில போராட்டங்களை கொடுக்கும்.

அனைத்தும் கலந்ததே வாழ்க்கை.

அன்பை காட்ட நீங்கள் செய்யும் அனைத்திலும் கவனமாக இருக்க வேண்டும் உங்களிடம் இருக்கும் ஒன்றை இழந்து ஒன்றை பெற முயற்சிக்காதீர்கள்.

நீங்கள் அவர்களுக்குக் கொடுக்கும் அன்பை திருப்பி செலுத்த தயாராக இல்லாத ஒருவரிடமிருந்து உங்களுக்குத் தேவையான உறவைப் பெற முடியாது.

நீங்கள் ஒருவரைச் சந்தித்து அவர்களால் காயமுற்று அவர் உங்களுக்கானவர் இல்லை என உணரும் போது அது கடினமாக இருக்கும்.

இரவில் தூங்குவதற்கு முன் நீங்கள் எத்தனை இரவுகள் அழுதாலும் இறுதியில் ஒருநாள் உங்கள் முந்தைய உறவிலிருந்து விடுபடுவீர்கள் மேலும் அடுத்து உங்களுக்கு என்ன தேவை என்பதை தெளிவாக கண்டுபிடிப்பீர்கள் உங்கள் முந்தைய உறவில் விஷயங்கள் ஏன் கைகூடவில்லை என்பதை உங்கள் எதிர்காலம் உங்களுக்கு புரிய வைக்கும்.

"தரமில்லாத உறவில் இருப்பதை விட தனிமையில் இருப்பது நல்லது."

அவர்கள் உங்களை அவர்களுக்கான ஒரு விருப்பப் பொருளாக மட்டுமே பார்த்தால் அவர்கள் உங்கள் வாழ்க்கையில் முன்னுரிமை பெறத் தகுதியற்றவர்கள்.

புரிந்துகொள்ளுங்கள் உங்களை பின் தொடராத ஒருவரை ஒருபோதும் நீங்கள் பின்தொடர வேண்டாம்.

உண்மையாகவே உங்களை நேசித்து இருந்தால் உங்கள் கண்ணில் கண்ணீரை வர விட மாட்டார்கள்.

உங்களுக்கு ஒன்று என்றால் துடித்துப் போவார்கள், தவித்துப் போவார்கள், தேடி ஓடி வருவார்கள்.

நீங்கள் வேண்டவே வேண்டாம் என்று விட்டு விட்டுச் செல்லும் போதே தெரிந்து கொள்ளுங்கள் அங்கே வேறு ஏதோ புது உறவு வந்து விட்டது அதனால் பழைய உறவு கசந்து விட்டது.

விருப்பமில்லாமல் விலகிச் செல்பவர்களை காரணம் கேட்டு கஷ்டப்படுத்தாதீர்கள்.

இதயம் கடந்து செல்வோம் இதுவும் கடந்து போகும்.

**– ச.பழனி, பாகசாலை**

# உழைப்பு என்றும் வீணாகக் கூடாது



**தோ**ல்விகளுக்கு இடையில்தான் வாய்ப்புகள் மறைந்துள்ளது. அதனால் தோல்விகளுக்கு அஞ்சாதே - ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

தோல்விகள் என்று எதைக் கூறலாம். மகேஷ் எனும் இளைஞர் தனது இலக்கை நோக்கி பயணிக்கும்போது ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தோல்வி அடைகிறார். இதை தோல்வி என்னும் கணக்கில் சேர்க்கலாமா? இல்லை. இந்த பயணத்தின்போது அவர் பெற்ற அனுபவங்கள் அல்லது அறிஞர் ஆல்பர்ட் கூறியதுபோல் அதில் ஒளிந்திருக்கும் வாய்ப்புகள் அவருக்கு வேறொரு வழியில் வெற்றியை தேடித் தரும். இது மகேசுக்குத் தோல்வி அல்ல.

மகேஷ் நண்பர் ஒருவர். இவரும் மகேஷ் அளவுக்கு படித்து அறிவில் சிறந்தவர்தான். ஆனால் அவருக்கு ஏற்ற வேலை எது என்பதை தேர்வு செய்யாமல் தனது சித்தப்பா வைத்திருக்கும் ஒரு ஷோ ரூமில் தினசரி போய் அமர்ந்து அந்த ஷோரூமை பராமரிப்பது முதல் அனைத்து பணிகளையும் செய்கிறார். அவர் படித்ததோ தொழில்நுட்பம். இதனால் இவருக்கு என்ன லாபம்? சித்தப்பா மீது கொண்ட பாசத்தினால் அங்கு சென்று நேரங்களை விரயம் செய்வது அவரின் கவனத்திற்கு வரவில்லை. ஆனால் அவரின் தந்தை தாய் முதல் அனைவரும் இப்படி இவனுடைய உழைப்பை கொண்டுபோய் "விழலுக்கு இறைத்த நீராக போடுகிறானே" என்று புலம்பாமல் இல்லை.

உழைப்புக்கான தகுந்த சம்பளம் இன்றி செய்யப்படும் எந்த வேலைக்கும் மரியாதை என்பது இருக்காது மதிப்பும் இருக்காது இதை சுரேஷ் புரிந்து கொள்ளவில்லை. இதுதான் தோல்வி வகையில் சேரும்.

இப்படித்தான் ஒரு சிலர் தங்களது உழைப்பை எதற்காக தருகிறோம் என்றே தெரியாமல் அடுத்தவர்களுக்காக தங்கள் நேரத்தை வீணடித்துக் கொண்டிருப்பார்கள். உதாரணமாக நடிகர்கள், அரசியல்வாதிகளின் கவர்ச்சியில் மயங்கி அவர்களைப் பின் தொடர்ந்து தங்கள் உழைப்பை தந்து பின்னர் அவதிப்படுகின்றனர்.

நிலத்தில் நல்ல மகசூல் கிடைக்க வேண்டும் எனில் நமக்கு அவசியமான பயிர்கள் மட்டுமே நம் வயலில் இருக்கவேண்டும். அப்போது மட்டும்தான் பஞ்ச பூத முழு சக்தியும் நமக்கு வேண்டிய பயிருக்கு கிட்டும், (விழல் = களை) களையப்படவேண்டிய நமக்கு அவசியமற்ற பயிர்களுக்கு நீரூற்றுவதால் எந்த பயனுமில்லை. இதனால் மேய்ச்சலுக்கு உதவாத விழல் என்ற புல் மட்டும் விளையத் துவங்கும். இதே போல்தான் நாம் செய்யும் முயற்சியும் உழைப்பும் நமக்கு பலன் தருவதாக இருந்தால் மட்டுமே வெற்றி. இல்லை எனில் "விழலுக்கு இறைத்த நீர் போல் என் முயற்சி வீணாகிவிட்டது." என்ற புலம்பலே மிஞ்சும்.

மனதில் உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். எக்காலத்திலும் இலவசமாக உழைப்பைத் தரமாட்டேன் என்று. நீங்கள் உங்கள் முன்னேற்றத்திற்காக உழைத்து தோல்வி வந்தால் திரும்ப முயற்சி செய்யுங்கள். வேறோர் வாய்ப்பு அதில் ஒளிந்து இருக்கலாம். விழலுக்கு இறைத்த நீர் போல உங்கள் உழைப்பு வெற்றிக்குத் தடையாகி விடாமல் எச்சரிக்கையாக இருங்கள்.

# வனவிலங்கை பாதுகாப்போம்!

– முனைவர். பா. ராம் மனோகர்

இந்திய வன விலங்கு வாரியம், 1952 ஆம் ஆண்டு, நமது நாட்டின் வன விலங்கு பாதுகாப்பு, விழிப்புணர்வு ஏற்படுத்த "வன விலங்கு வாரம்" என்ற விழிப்புணர்வு பிரச்சாரம் அரசு மூலம் துவக்கியது!. 1955 ஆம் ஆண்டு முதன் முதலில்வன விலங்கு விழிப்புணர்வு நாள் என துவங்கி, ஒவ்வொரு ஆண்டும் 1957 ஆம் ஆண்டு முதல், வன விலங்கு வாரம் அனுசரிக்கும் நடைமுறை தொடர்ந்து, வந்தது.இந்த ஆண்டு வன விலங்கு வாரம் சிறப்பு மையக் கருத்து "மக்களையும் கோளினையும் இணைப்போம் : வனவிலங்கு பாதுகாப்பு மேலாண்மையில், மின்னணு கண்டு பிடிப்புகள் "என்பது ஆகும். வன விலங்கு பாதுகாப்பு உத்திகளில், தொழில் நுட்பத்தின் மேம்பாடு பற்றியதாகும். வன விலங்குகள், காடுகளின் அடர்ந்த பகுதியில் வசிக்கும் நிலையில், அவற்றின் இனத் தொகை, வாழ்வியல், உணவு, இனப் பெருக்கம் ஆகிய முக்கிய தகவல்களை நேரடியாக அறியவும், விலங்குகள் பாதுகாப்பு கருதி, புகைப்பட கருவி (CAMERA TRAP) அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.ட்ரோன் (DRONES), தொலையுணர்வு (REMOTE SENSING) கருவிகள், ரேடியோ டெலி மெட்ரி (RADIO TELEMETRY)புவி இருப்பு அமைப்பு (நிறிஷி ), செயற்கை கோள் (SATTELITE TRACKING), விலங்குகளின் உடலின் இணைக்கப்படும் ட்ரான்ஸ் மீட்டர்கள் (TRANSMITTERS), செல் பேசி(CELL PHONE ) இணைப்புகள் ஆகிய நவீன அறிவியல் தொழில் நுட்ப கருவிகள், விலங்கு கண்காணிப்பு செயல் பாட்டுக்கு வன விலங்கு ஆய்வாளர்கள் மற்றும் வனத்துறை சார்ந்த பணியாளர்கள் ஆகியோரால் பயன்படுத்தப்படுகிறது.



பல ஆண்டுகளுக்கு முன்பு மிகவும் கடினமாக இருந்து வந்த பல்வேறு வன விலங்குகளின் எண்ணிக்கை பணிகள், தற்பொழுது கருவிகள் மூலம் எளிமையாக ஆகிவிட்டது. மனித பாதுகாப்பு, விலங்கு பாதுகாப்பு இரண்டும் சமநிலை கொண்டு அணுக திட்டங்கள் உள்ளன.விலங்குகள், நோய் மற்றும் வேட்டை போன்றவற்றால் பாதிக்கப் பட்டாலும் உரிய நடவடிக்கைகளை, வனத்துறை மேற்கொள்ள அறிவியல் தொழில் நுட்பம் உதவுகிறது.

எனக்கு 42 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட முதுமலை காட்டு ஆய்வு அனுபவம், மிக சோகமானது! ஆம், வளர்ப்பு வேட்டைநாய்கள் மூலம் சட்ட விரோதமாய், காட்டிற்குள் விரட்டி காயப்படுத்தப்பட்ட இளம் மான்!உரிய நேரத்தில் மருத்துவ சிகிச்சை அளிக்க, வாகன வசதி, வனத்துறை சார்ந்த பணியாளர்கள் விரைவாக வர இயலாத நிலை, ஆகிய பிரச்சினைகளால் உயிரிழந்த நிலை பரிதாபமானது.

ஆனால் தற்பொழுது அனைத்து வசதிகள் கூடிய நிலையில் வனத்துறை இருப்பது சிறப்பான தகவல் ஆகும். மேலும் அத்துமீறி வன விலங்கு வேட்டை நடைபெறும் போதும் அவற்றை தடை செய்ய, வன குற்றங்கள் கண்டுபிடித்து உரிய சட்ட பூர்வ நடவடிக்கைகள் தொடர்ந்து, அரசினால் மேற்கொள்ளப்படுகிறது.

மனித, வனவிலங்கு மோதல்கள் மற்றும் ஒரு முக்கியமான பிரச்சினை ஆகும். இயற்கை சார்ந்த பகுதியில், காடுகள் மற்றும் சரணாலயங்களின் அருகில் உள்ள கிராமங்களில் வாழும் மக்கள், அவர்களின் பயிர் நிலங்கள், தோட்டங்கள், குடியிருப்புகள் வன விலங்குகளால், பாதிக்கப் படுகிறது.

யானை, கரடி, சிறுத்தை, ஓநாய்,, காட்டு எருமை போன்ற விலங்குகள், உணவு, நீர் இல்லாத போது, மனிதர்கள் வசிக்கும் இடங்களில், வருகையில் மோதல் நிகழ்கின்றன. இங்கும் வனத் துறை பணியாளர்கள் சிறப்பாக, இரவு, பகலாக கண் விழித்து,தம் உயிரினை பணயம் வைத்து

தொடர்ந்து செயல் ஆற்றி வருகின்றனர். இது உண்மையில் பாராட்டப்படவேண்டிய ஒன்று! மக்கள் மற்றும் இயற்கை இரண்டும் வனத்துறைக்கு மிகவும் முக்கியம் ஆகும். அவர்களுடன் பொது மக்கள் ஒத்துழைப்புடன் இணைந்து பணியாற்ற வேண்டிய பொறுப்பு உள்ளது. அதனை நாம் உணர்வு பூர்வமாக புரிந்துகொள்ள வேண்டும். இதில் முக்கியமாக, விழிப்புணர்வு, ஊடகங்களின் பங்கு, நீண்ட நாட்களுக்கு பலன்கள் அளிக்கும் தீர்வுகள், காட்டின் அருகில் நிலம் உள்ள விவசாயிகளுக்கு கல்வி முறை, குழு செயல்பாடுகள், ஆபத்து விலங்குகளை உரிய நேரத்தில் பிடித்தல், கண்காணிப்பு, கூட்ட மேலாண்மை, வாகன போக்குவரத்து, பாதிக்கப்பட்ட கிராம உரிய உடனடி உதவி, நிவாரணம் பெற்று தர நடவடிக்கை,, பிடிபட்ட விலங்கினை சரியாக பராமரிப்பு செய்து மீண்டும் உரிய வாழிடத்தில் மாற்றம் செய்வது என ஏராளமான, பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

வனவிலங்குகள், அவை வசிக்கும் சரணாலயம், தேசிய பூங்கா, ஆகியவற்றின், முக்கியத்துவம் பற்றிய உரிய விழிப்புணர்வு, பொது மக்கள் பெறவேண்டும். இயற்கை நம் வாழ்வில் எந்த அளவுக்கு இன்றியமையாத ஒன்று என்பதை இவ்வாண்டு வனவிலங்கு வாரம் விழிப்புணர்வு, அரசு நிகழ்ச்சிகள் மூலம் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் அனைவரும் அறிந்து செயல்படுவோம்! வனவிலங்குகளை பாதுகாப்போம்!

நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

தொடர் 29

# வேற்றுமையில் ஒற்றுமை



இந்திய சுதந்திரத்திற்கு முன்பு, இந்திய துணைக் கண்டத்தில் பல மதத்தினரும், பல மொழி, பேசுபவர்களும் பல பண்பாடுகள் உள்ள மக்களும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்! அவர்கள் எல்லோரும் ஒன்று பட்டு போராடித்தான் இந்திய சுதந்திரத்தை வாங்கினார்கள்.

பெரும்பான்மையினர் என்று சொல்லிக் கொண்டு அப்பொழுதே, சில வட இந்தியர்கள், உலகம் முழுவதும் நாம் தொடர்பு மொழியாக பயன் படுத்திய ஆங்கிலத்தை அப்புறப்படுத்தி விட்டு, அந்த இடத்தில் தங்கள் மொழி இந்தியை கொண்டு வர வேண்டும் என்று தீவிர முயற்சி செய்தார்கள்.

பெரும்பான்மை என்று அவர்கள் சொன்னதால், அன்றைய இந்திய பிரதமர் நேரு கூட முதலில் அதற்கு இடம் கொடுத்து விட்டார்.

அன்றே மொழித் திணிப்புக்கு தமிழ் நாட்டு மக்கள் கடுமையாக எதிர்த்தார்கள்! சில வட இந்தியர்கள் ஆசைக்காக அவர்கள் மொழி, மதத்தை எல்லாம் மற்ற மாநிலங்கள் மேல் திணித்தால், அது இந்திய ஒருமைப்பாட்டை சிதைத்து விடும் என்று நேரு உணர்ந்து கொண்டு அவர் பின்வாங்கினார் என்பது வரலாறு!

இந்திய துணைக் கண்டத்தில் வாழ்ந்து கொண்டிருந்த பல மதத்தினர்களுக்கு, பல மொழியினர்களுக்கு, பல பண்பாட்டுள்ள மக்களுக்கு ஏற்ற மாதிரி, பல மாநில அரசுகளை உருவாக்கியும் மொத்த நாட்டின் பாதுகாப்பை கவனித்துக் கொள்வதற்கு ஒரு யூனியன் அரசையும் உருவாக்கியும், இந்திய ஒருமைபாடு என்றும் சிதையாமல் இருக்க அன்று சுதந்திரம் வாங்கிக் கொடுத்த தலைவர்கள், சட்ட மேதை அம்பேத்கார் தலைமையில் இந்திய அரசியல் சாசனத்தை நமக்கு ஏற்படுத்தி கொடுத்து விட்டுப் போனார்கள்!

அந்த இந்திய அரசியல் சாசனத்தின் ஆணி வேரான இந்திய ஒருமைபாடு நீடிக்க, ஒவ்வொரு மாநில மக்களின் மொழி, மத, பண்பாட்டை அவர்களே பாதுகாத்துக் கொள்ள, கல்வியை மாநில பிரிவில் வைத்து, அந்த அந்த மாநிலங்கள் இந்திய ஒருமைபாடு நீடிக்க, ஒவ்வொரு மாநில மக்களின் மொழி, மத, பண்பாட்டை அவர்களே பாதுகாத்துக் கொள்ள, கல்வியை மாநில பிரிவில் வைத்து, அந்த அந்த மாநிலங்களே தேவையான சட்டங்கள் இயற்றி, அவர்கள் மொழி, பண்பாடுகளை காத்துக் கொள்ளும் அதிகாரத்தையும் அந்த அரசியல் சாசனத்தில் கொடுத்திருந்தனர்.



துடுப்பதி ரகுநாதன்

இன்று பொதுத் தேர்தல்களில் மக்கள் எப்படி எதற்காக வாக்களிக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்!

இரண்டு வருடங்களுக்கு முன்பு நமது உச்ச நீதி மன்ற தலைமை நீதிபதி ரமணா சுதந்திர தினவிழாவில் இப்படி வேதனையோடு சொல்லியிருக்கிறார்.

இந்திய பாராளும் மன்றத்தில், அன்று லோக்சபா, ராஜ்யசபா இரண்டிலும் நிறைய வழக்கறிஞர்களும், நீதித்துறையைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள்! அவர்கள் ஒரு மசாதாவை சட்டமாக்குவதற்கு முன்பு, அது சட்டம் ஆனால் அது மக்களை எவ்வாறு பாதிக்கும் என்று நீண்ட விவாதங்களை இரு சபைகளிலும் நடத்திய பிறகு அந்த மசோதாவை சட்டமாக நிறைவேற்றுவார்களாம்!

ஆனால் இன்று பாராளுமன்றத்தில் கடும் அமளியில் ஈடுபட்டு, பலர் கத்தி கூச்சல் போட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில், எவ்வித விவாதமும் இல்லாமல் சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்று வருத்தப் பட்டார்.

எப்படி எப்படியோ ஜெயித்து இன்று வந்த வட இந்திய எம்.பி. களை வைத்து, சில வட இந்திய தலைவர்கள் அரசியல் சாசனத்தில் மாநில பிரிவில் இருக்கும் கல்வியை பொது பிரிவுக்கு கொண்டு வந்து, ஒரே நாடு ஒரே மொழி என்று மற்ற மாநில மக்கள் மேல், அவர்கள் மொழி, அவர்கள் மதத்தையும் திணிக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள்! இந்திய ஜனத் தொகையில் இரண்டாவது இடத்தில் இருக்கும் இஸ்லாமியர்களை மத வெறி கொண்ட வட இந்திய தலைவர் சிலர் இதனால் தரக் குறைவாகவும் பேசவும் தொடங்கி விட்டார்கள்!தமிழ் நாட்டில் தமிழை தாய் மொழியாக கொண்ட இந்து, இஸ்லாமிய, கிருஸ்வ மதத்தைச் சேர்ந்த எல்லோரும் தாய் மொழி தமிழ் பற்றோடு, இன்றும் ஒற்றுமையாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!

யாதும் ஊரே!...யாவரும் கேளிர்! என்று பல ஆயிரம் ஆண்டுகள் முன்பே சொன்னவன் தமிழன்!

இந்திய ஒருமைப்பாடு சிதறாமல் பாது காப்பது தான் தான் தேசப் பற்று என்றும், அப்பொழுது தான் இஸ்லாமிய பெருமகன் அப்துல் கலாம் ஆசைப்பட்ட இந்தியா ஒரு பெரிய வல்லரசாக எதிர் காலத்தில் திகழ முடியும் என்று நம்பும் தமிழர்கள் "உறவுக்கு கை கொடுப்போம்!... உரிமைக்கு குரல் கொடுப்போம்!" என்றுதான் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!

# எம் பதில்கள்

**சென்னை உயர்நீதிமன்றத்திற்கு புதிய தலைமை நீதிபதி பொறுப்பேற்றுள்ளாரே!**

*- எஸ்.எம். மாரியப்பன், அரும்பாக்கம்*

ஆமாங்க. சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி வகித்த நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா பணிஓய்வு பெற்றதையடுத்து, நீதிபதி ஆர். மகாதேவன் பொறுப்பு தலைமை நீதிபதியாக பதவி வகித்துவந்தார். அவர் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டதும், சென்னை உயர் நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதியாக டி. கிருஷ்ணகுமார் நியமிக்கப்பட்டார். இந்நிலையில், மும்பை உயர் நீதிமன்றத்தில் மூத்த நீதிபதியாக பணியாற்றி வந்த கே.ஆர். ஸ்ரீராமை, சென்னை உயர் நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக நியமித்து, குடியரசு தலைவர் திரவுபதி முர்மு உத்தரவிட்டார். அதன்படி புதிய தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராமுக்கு ஆளுநர் மாளிகையில் நடந்த பதவியேற்பு விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி, பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி பி.சதாசிவம், உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதிகள் இப்ராஹிம் கலிபுல்லா, இந்திரா பானர்ஜி, சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி தஹில் ரமானி, ஓய்வு பெற்ற நீதிபதி கே.என். பாஷா மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தில் தற்போது பதவி வகிக்கும் நீதிபதிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் தமிழக சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர்கள் துரைமுருகன், பொன்முடி, கே.என்.நேரு, ரகுபதி, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன், மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன் மற்றும் மத்திய, மாநில அரசு வழக்கறிஞர்கள், மூத்த வழக்கறிஞர்கள், தலைமை நீதிபதியாக பதவியேற்றுள்ள கே.ஆர்.ஸ்ரீராமின் குடும்பத்தினர் உள்ளிடோர் பங்கேற்றனர்.



**இளைஞர்கள் சமூக பொறுப்புடன் இருக்க வேண்டுமே!**

*- எஸ்.ஹரி பாஸ்கர், அம்பத்தூர்*

ஏதோ ஒன்றிரண்டு இளைஞர்கள் வேண்டுமானால் தடுமாறி தடம் மாறிப் போய் இருக்கலாம் ஆனால் இன்னமும் இளைஞர்கள் நாட்டுப்பற்று சமூக பற்று ஆகியவற்றுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணம்தான் சமீபத்தில் கடலூர் மாவட்டத்தில் நடந்திருக்கிறது.

கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே ஆதிவராகநல்லூர் என்ற கிராமம் அமைந்துள்ளது. இந்த கிராமத்தில் சுமார் 500க்கும் மேற்பட்டவர்கள் வசித்து வருகிறார்கள். இந்த கிராமத்தில் சுமார் 24 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஏரி அமைந்திருக்கிறது. இந்த ஏரி நீரை நம்பித்தான் கிராமத்தை சுற்றியுள்ள சுமார் 1,000 ஏக்கர் விளைநிலங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த ஏரி முறையான பராமரிப்பின்றி காணப்பட்டது. கடந்த 30 ஆண்டுகளாக பராமரிப்பு இல்லாமல் 24 ஏக்கர் பரப்பளவில் உள்ள ஏரி மற்றும் அந்த ஏரிக்கு வரும் பாசன வாய்க்கால் மோசமான நிலையில் தூர்ந்து போய் கிடந்தது.

இதுகுறித்து கிராம நிர்வாக அதிகாரிகள் மற்றும் கடலூர் மாவட்ட பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் பலமுறை பொதுமக்கள் மனு அளித்துள்ளார்கள், ஆனால் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கூறப்படுகிறது. பஞ்சாயத்திலும் பாசன வாய்க்காலை தூர்வார போதிய நிதி இல்லை என கைவிரித்து விட்டதாம். இதனால் கிராம மக்கள், தூர்ந்து போன பாசன வாய்க்காலை மீட்டெடுக்க முடிவு செய்தார்கள். அதன்படி ஆதிவராகநல்லூர் கிராம மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சுமார் ரூ.8 லட்சம் நிதி திரட்டியுள்ளார்கள்.

பின்னர் பொக்லைன் எந்திரம் மூலம் ஆதிவராகநல்லூர் ஏரிக்கு செல்லும் பாசன வாய்க்காலை கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு தூர்வார தொடங்கினார்கள். சுமார் சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு பாசன வாய்க்காலை தூர்வாரி, இருகரைகளிலும் மண் கொட்டி பலப்படுத்தி இருக்கிறார்கள். மேலும் இருகரைகளிலும் உள்ள ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டுவிட்டது. தற்போது பாசன வாய்க்கால் அகலமாகவும் தண்ணீர் வந்தால் எளிதாக ஏரியை அடையும் வகையிலும் இருக்கிறது. கிராம மக்களே ஒன்று சேர்ந்து





நிதிதிரட்டி பாசன வாய்க்காலை தூர்வாரிய சம்பவம் கடலூர் மாவட்டம் முழுவதும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தி உள்ளது. அந்த கிராம மக்களை பலரும் பாராட்டி வருகிறார்கள். மூத்தவர்கள் இளையவர்களை அரவணைத்துச் சென்றால் எதையும் சாதிக்கலாம் என்பதற்கு இது உதாரணம்.

**வாழ்க்கை எப்படி வாழ்வது என்று கேட்கிற சூழல் வந்துவிட்டதே?**

*– பி. வினோத், திருவேற்காடு*

நாற்பது வயதுக்கு மேல் வாழ்க்கையில் தைரியம் என்பது,நம் கையில் இருக்கும் பணத்தை பொருத்தே அமைகிறது. வாழ்க்கையில் பணம் இல்லாமல் மனிதனாக வாழ இயலும். ஆனால் பணம் ஏதும் இன்றி மனிதர்களிடம் வாழ இயலாது. சாம்பாதித்ததை செலவு செய்த காலம் போய், முதலிலேயே செலவு செய்து விட்டு அதை அடைக்க சம்பாதித்து கொண்டிருக்கிறோம்.

நீங்கள் சம்பாதிப்பது சொத்து இல்லை. அனுபவித்ததுதான் சொத்து என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

அதிக ஆசை இல்லாதவர்கள் மட்டும் தான் அதிக சந்தோஷத்துடன் வாழ்கிறார்கள்.

கோபத்தில் மிருகத்தை மிஞ்சுகிறான் மனிதன்..

பாசத்தில் மனிதனை வாழ்க்கையில் ஒவ்வொரு படிநிலையும் ஒவ்வொரு ஆசான்...

எந்த படிநிலையும் வந்தபடியே செல்வதில்லை...

ஏதோ ஒன்றை கற்றுக்கொடுக்கும், ஏதோ ஒன்றை ஏற்கச்சொல்லும்...

கற்றுக்கொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும் தயாராக இருந்தால் வசப்படுமே வாழ்க்கை.

வாழ்க்கையில் வெற்றிபெறும் கலையை முழுக்க முழுக்க இன்னொருவர் கற்றுத் தர முடியாது. சுயமாக முன்னுக்கு வரும் கலைஞர்கள், வணிகர்கள், தொழிலதிபர்களைப் பார்த்து நீங்கள் முன்னுக்கு வந்த கலையைச் சொல்லிக் கொடுங்கள் என்றால் அவர்கள் சொல்ல மாட்டார்கள். சொல்லித்தரக் கூடாது என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை. இது சொல்லித் தர முடியாதது. இது பலருக்கும் புரிவதிவதில்லை. நடிப்புக் கல்லூரியில் நடிப்பைப் படிப்பாக முடித்த எவரும் நடிகர் திலகம் சிவாஜி கணேசனை விஞ்சியது இல்லை. என்ன புரிகிறது ஒன்றை சொல்லிக் கொடுப்பதை விட கற்றுக் கொள்வதில்தான் வெற்றி அடங்கியிருக்கிறது.

சிவாஜி கணேசன் எந்தக் கல்லூரியிலும் நடிப்பைக் கற்கவில்லை. ஆனால் உலகம் முழுவதிலிருந்து நடிப்பைக் கற்றுக்கொண்டார்.

**நேரத்தை வீணடிக்கும் சூழல் நம்மைச் சுற்றி உள்ளதே?**

*– ஆர். சரவணன், பாகசாலை*

எந்த சூழ்நிலையும் நமக்கு ஏற்றார் போல் நாம் மாற்றிக் கொள்ள வேண்டும்.

நம்மை நாம் கேள்வி கேட்காதவரை, நம் தவறுகளை நாம் உணரபோவதில்லை. மாறாத ஒரு மாற்றத்தை தேடுகின்றோம். அதற்காக நிலையான பலவற்றை மாற்றுகின்றோம்.

நீ அப்படி செய்து இருக்க கூடாது என்று சொல்பவர்கள். ஒரு போதும் எப்படி செய்து இருக்க வேண்டும் என்பதை சொல்லி தர மாட்டார்கள்.

நீ எதைச் செய்தாலும் அதில் ஏதாவது குறை கண்டுபிடிப்பவர்கள் இருந்து கொண்டு தான் இருப்பார்கள், அவர்களைப் பற்றி நீ லட்சியம் செய்ய வேண்டியது இல்லை உனது பாதையில் நீ சென்று கொண்டே இரு..

மூன்று விஷயங்கள் உங்களது நேரத்தை வீணடித்து விடும் அவை

1) தவறிப் போனதைப் பற்றி கவலைப்படுவது, அவை திரும்ப வராது.

2) பிறரோடு உன்னை ஒப்பிட்டுப் பார்ப்பது, அது பயனளிக்காது.

3) எல்லா மனிதர்களையும் திருப்திப்படுத்த நினைப்பது, அது நடக்காது.

நல்லா இரு என்ற ஒற்றை வார்த்தையை மட்டும் நம்மைப் புரியாதவர்களிடமும் ஏமாற்றியவர்களிடமும் விட்டுச் செல்வோம். பொய்க்கு ஆரம்பம் இல்லை ஆனால் நிச்சயம் முடிவு உண்டு. உண்மைக்கு ஆரம்பம் உண்டு ஆனால் முடிவு இல்லை. உழைத்த காசிற்கு மட்டும் கையேந்து. மற்ற எதற்கும் எவரிடமும் கையேந்தாதே. நம் வார்த்தைகளை உயர்த்துவோம், குரலை அல்ல. ஏனெனில் மழைதான் பூக்களை வளர்க்கிறது, இடி அல்ல.

# 220 ஆண்டுகள் பழமை வாய்ந்த பண்பாட்டு வீடு!



தஞ்சை மாவட்டம் திருவையாறு தாலுகா கண்டியூர் திருக்காட்டுப்பள்ளி சாலையில் 7 கிலோமீட்டர் தொலைவில் காவிரி கிளை ஆறான குடமுருட்டி ஆறு ஓடுகிறது. இந்த ஆற்றின் கரையில் அமைந்துள்ள நடுக்காவேரி கிராம மக்கள் பல நூறு ஆண்டுகளாக பாரம்பரியமாக விவசாயம் செய்து வருகின்றனர். இந்த கிராமத்தில் உள்ள வீடுகள் அனைத்தும் சுண்ணாம்பு மற்றும் செங்கலால் கட்டப்பட்டுள்ளன. தற்போது இங்குள்ள பல வீடுகள் சேதமடைந்ததால் அதனை இடித்துவிட்டு புதிதாக வீடுகள் கட்டப்பட்டுள்ள நிலையில் ஒருசில வீடுகள் மட்டுமே பழமையோடு நிமிர்ந்து நிற்கின்றன. இதில் 1898 ஆம் ஆண்டு புண்ணாக்கு என்ற பெண்மணியால் கட்டப்பட்ட வீடுதான் யோகபுலி நாட்டார் பரம்பரை வீடு. சுண்ணாம்பு காரைகொண்டு இரண்டு அடி அகலத்தில் சுட்ட கல்லால் கட்டப்பட்ட இந்த வீடு முன்புறம் பின்புறம் என இரண்டு முக்கிய நிலைகளை கொண்டுள்ளது.

இந்த வீட்டில் கடந்த 220 ஆண்டுகள், எட்டு தலைமுறையாக ஒன்றாக வாழ்ந்து வரும் மக்கள், தங்கள் முன்னோர்கள் எப்படி இந்த வீட்டை வைத்திருந்தார்களோ அப்படியே இன்னும் பராமரித்து வருகின்றனர். காவிரிக் கரையில் அமைந்துள்ள இந்த வீட்டினுள் எப்போது வேண்டுமானாலும் வெள்ளம் வரலாம் என்ற எச்சரிக்கையோடு எட்டடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளது.

இந்த வீட்டின் முக்கிய சிறப்பம்சம் என்னவென்றால் வீட்டில் உள்ள யாரும் வீட்டை காலி செய்துவிட்டு ஒட்டுமொத்தமாக வெளியே சென்றுவிடக் கூடாது என்ற நோக்கத்திலும், யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் வீட்டிற்கு வரலாம் என்ற எதிர்பார்ப்போடு முன்புறம் மற்றும் பின்புறமுள்ள கதவுக்கு தாழ்ப்பாள் போடுவதே இல்லை.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர், தங்கள் முன்னோர்கள் வசித்த வீட்டில் எதற்காக கதவுகளுக்கு தாழ்ப்பாள் இல்லாமல் கட்டினார்களோ அதேபோல இதுவரை தாழ்ப்பாள் இல்லாமல் அந்த வீட்டில் வாழ்ந்து வருகின்றனர். அந்த வீட்டில் வசித்த பல தலைமுறையினர் சென்னை, பெங்களூர் வெளிநாடு என வேலைக்கு சென்று விட்ட போதிலும் அந்த வாரிசுகளில் எவரேனும் ஒருவர் அங்கு வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். இந்த பழமையான வீட்டினுள் நெல் கொட்டும் குதிர், உரல் உலக்கை, பெரிய அளவிலான கருங்கல்லால் ஆன ஆட்டுக்கல் அம்மிக்கல் போன்ற பழமையாக பொருட்கள் இன்றும் உள்ளன. மேலும் இந்த வீட்டை யாரும் பாகப்பிரிவினை செய்துவிடக் கூடாது என்பதற்காக வீட்டின் ஒருபுறத்தில் படுக்கைஅறையும் மறுபுறத்தில் சமையலறையும் அமைத்துள்ளதாக கூறுகின்றனர். பெண்மணிகள் ஒரே குடும்பமாக ஒற்றுமையோடு வாழும் இந்தவீடு பழமையை பறைசாற்றும் வரலாற்று நிஜமாகவே பார்க்கப்படுகிறது.

# வாழ்க்கையில் நம்மை உயர்த்தும் நற்குணங்கள்!



உங்களுக்கு சரியான ஆலோசனை வழங்ககூடிய பெரியமனிதர் உங்களைத் தவிர வேறுயாராகவும் இருக்கமுடியாது.

தனக்குத் தெரிந்தவற்றை தெரியும் எனவும், தெரியாதவற்றை தெரியாது எனவும் சொல்வதுதான் அறிவு.

மனிதப் பிறவிக்கு மிகப்பெரிய நோய் மனக்கவலை..

அதைத் தினமும் உண்டாக்குவதே பணத்தின் வேலை. நற்குணங்கள் என்பது ஒருவரின் நல்ல பண்புகளை, குணநலன்களை குறிக்கின்றது. இவை சமூகத்தில் ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் நல்ல வாழ்வினை உருவாக்க உதவுகின்றன. சில முக்கிய நற்குணங்கள்:

அன்பு என்பது மனிதர்கள் ஒன்றுக்கொன்று கருணை, பரிவு காட்டும் பண்பு. இது குடும்ப உறவுகள் மற்றும் நண்பர்கள் இடையே முக்கியமானதாகும்.

மற்றவர்களை மரியாதை செய்வது என்பது அவர்களின் மதிப்பீட்டை உணர்ந்து நடத்துவது. இது ஒவ்வொருவருக்கும் அன்றாட வாழ்வில் தேவைப்படும் முக்கியமான குணமாகும்.

அறிவு என்பது அறிவாற்றல் மற்றும் கல்வியைக் குறிக்கின்றது. இது நமது செயல்களில் தெளிவு மற்றும் நல்ல முடிவுகளை எடுக்க உதவுகின்றது.

மற்றவர்களின் பிழைகளை மன்னிக்க முடியும் தன்மை. இது மனநிம்மதி மற்றும் நல்லுறவுகளை பராமரிக்க உதவுகின்றது.

மற்றவர்களின் சிறப்புகளைப் பாராட்டும் பண்பு. இது உற்சாகம் மற்றும் நம்பிக்கையை அளிக்கின்றது.

நம்பிக்கை என்பது தன்னம்பிக்கை மற்றும் எதிர்மறையான சூழ்நிலைகளில் கூட நம்பிக்கையை இழக்காமல் இருக்க வேண்டும். மற்றவர்களோடு நட்புறவு மற்றும் ஒற்றுமையை வளர்த்தல். நேர்மையாக இருப்பது மற்றும் உண்மையைப் பேசுதல். இது நமது ஒவ்வொரு உறவிலும் நம்பிக்கையை உருவாக்குகின்றது. தன்னம்பிக்கை என்பது தன்னுடைய திறமைகள் மற்றும் முடிவுகளை நம்புவது. இது வாழ்க்கையில் முன்னேற உதவுகின்றது.

தன்னலமில்லாமல் பிறருக்கு உதவுதல் மற்றும் சமூக சேவையில் ஈடுபடுதல்.



எஸ்.ஜானகி

இந்த நல்குணங்கள் ஒருவரின் ஒவ்வொரு உறவிலும், சமூகத்திலும், மற்றும் தொழில் வாழ்க்கையிலும் சிறந்த முறையில் முன்னேற உதவும்.

அழகானது எல்லாம் போலியாக இருக்காது. ஆனால். போலியான எல்லாம் அழகாகத்தான் இருக்கும். மகிழ் நினைவுகளை மட்டும் சேமிக்க பழகுங்கள். நினைவு கூட்டை சுமந்து திரிவது கூட சுகம் தான்.



# பணிவும் துணிவும் எப்போதும் தோற்காது!

மன்னர் அசோகர் சாலையில் வந்து கொண்டிருந்தார். அப்போது அவருக்கு எதிரில் வந்து கொண்டிருந்த ஒரு வயோதிக புத்த பிக்ஷு மன்னரும் அவரது ஆட்களும் செல்ல வழிவிட்டு, ஓர் ஓரமாக ஒதுங்கி நின்றார்.அசோகச் சக்கரவர்த்தி அவரைப் பார்த்து விட்டார். உடனே தமது ரதத்தை நிறுத்திவிட்டு, இறங்கிச் சென்று புத்த பிக்ஷுயின் காலில் நெடுஞ்சாணகிடையாக விழுந்தார். அவரது சிரம் துறவியின் காலில் பட்டது. துறவி தமது கைகளை உயர்த்தி மன்னனை ஆசிர்வதித்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அமைச்சர்சங்கடப்பட்டார்.

"ஒரு மண்டலாதிபதி ஒரு பரதேசியின் காலில் விழுவதா? அரச பாரம்பாரியக் கவுரவம் என்னாவது?' என்ற எண்ணம் அவரை அலைக்கழித்தது. அரண்மனைக்கு சென்றதும், அரசரிடம் தமது வருத்தத்தை வெளிப்படுத்தினார். அமைச்சரின் பேச்சைக் கேட்ட அசோக மன்னர் சிரித்தார்.

அமைச்சரின் கேள்விக்குப் பதிலளிக்காமல், ஒரு விசித்திர கட்டளையைப் பிறப்பித்தார்.""ஒரு ஆட்டுத் தலை, ஒரு புலித்தலை, ஒரு மனிதத் தலை, மூன்றும் எனக்கு உடனே வேண்டும். ஏற்பாடு செய்யுங்கள் அமைச்சரே," என்றார்.

மன்னரின் கட்டளை அமைச்சரைத் திகைக்க வைத்தது. எனினும், அரச கட்டளையாயிற்றே! அதை நிறைவேற்ற ஏவலர்கள் நாலாபக்கமும் பறந்தனர்.

ஆட்டுத்தலை கிடைப்பதற்கு அதிகச் சிரமம் இருக்கவில்லை. ஓர் இறைச்சிக் கடையில் அது கிடைத்து விட்டது.

புலித் தலைக்கு அலைந்தனர். அது ஒரு வேட்டைக்காரனிடம் கிடைத்தது.

அன்றுதான் அவன் ஒரு புலியை வேட்டையாடியிருந்தான். மனிதத் தலைக்கு எங்கே போவது? கடைசியில் சுடுகாட்டிற்குச் சென்று ஒரு பிணத்தின் தலையை எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தனர். மூன்றையும் பார்த்த அசோக மன்னர் தன் அமைச்சரிடம், 'இம்மூன்றையும் சந்தையில் விற்றுப்பொருள் கொண்டு வாருங்கள்' என்றார். மன்னரின் கட்டளைப்படி சந்தைக்குச் சென்றவன் திணறினான்.

ஆட்டுத் தலை, அதிகச் சிரமமின்றி விலை போனது. புலியின் தலையை வாங்க ஆளில்லை. பலர் அதை வேடிக்கைத் தான் பார்த்தனர்.

கடைசியில், ஒரு வேட்டைப் பிரியரான பிரபு அதனை வாங்கித் தன் வீட்டில் அலங்காரமாக மாட்டி வைக்க எடுத்துப் போனான்.

மீதமிருந்த மனிதத் தலையைப் பார்த்த கூட்டம் அருவருப்புடன் அரண்டு மிரண்டு பின் வாங்கியது. ஒரு காசுக்கு கூட அதை வாங்க யாரும் முன்வரவில்லை.

அரண்மனை திரும்பிய அமைச்சர், ஆட்டுத் தலை உடனே விலை போனதையும், புலித்தலை சற்றுச் சிரமத்துடன் விலை போனதையும், மனிதத் தலையை வாங்க ஆளில்லை என்பதையும் தெரிவித்தார்.

"அப்படியானால் அதை யாருக்காவது இலவசமாகக் கொடுத்து விடுங்கள்!". என்றார் அசோகர். இலவசமாகக் கூட அதனை வாங்கிக் கொள்ள யாருமே முன்வரவில்லை.

இப்போது அசோக மன்னர் கூறினார்...

""பார்த்தீரா அமைச்சரே! மனிதனின் உயிர் போய்விட்டால், இந்த உடம்பு கால் காசு கூடப் பெறாது.

இலவசமாகக் கூட இதனை யாரும் தொடமாட்டார்கள்.

இருந்தும் இந்த உடம்பு உயிர் உள்ள போது என்ன ஆட்டம் ஆடுகிறது!

செத்த பின்பு, நமக்கு மதிப்பில்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால், உடலில் உயிர் இருக்கும்போது, தம்மிடம் எதுவும் இல்லை என்று உணர்ந்தவர்கள் தான் ஞானிகள். அத்தகைய ஞானிகளை விழுந்து வணங்குவதில் என்ன தவறு? சொல்லப்போனால் அதுதான் ஞான வாயிலின் முதல் படி!'. ' என்றார். தன் தவறை உணர்ந்தார் அமைச்சர்..

நீதி: பணிந்தவர்களும், துணிந்தவர்களும் வாழ்வில் தோற்றதாக சரித்திரம் இல்லை..*

# தகுதி பார்த்து உதவி செய்க!

மற்றவர்க்குக் கொடுப்பது குறித்து வள்ளுவப் பாட்டன் பேசுகிறாரா?

ஓர் அவசரத் தேவைக்கு ஒருவர் வந்து பணம் கேட்கிறார். அவருக்குக் கொடுப்பதா வேண்டாவா என்பது குறித்தும் வள்ளுவர் சொல்கிறார்.

கேட்கின்றவரின் தகுதி பார்த்துக் கொடுக்கலாமா?

அவர் வாங்கின தொகையைத் திருப்பித் தருவாரா? எனப் பல கோணங்களில் எண்ணிக் கொடுப்போம்.

இல்லையென மறுப்போம்.

"ஆற்றின் அளவறிந்து ஈக; அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி"

என்பது குறள்.

அளவறிந்து என்ற தொடர் முதன்மையானது.இது கொடுப்பவனுக்கா வாங்குபவனுக்கா? ஐயமாக உளதா?

கொடுப்பவனுக்குத்தான் இதனைச் சொல்கிறார்.

தன் பிள்ளைகளின் கல்விச்செலவு, திருமணச்செலவு, எதிர்பாராச் செலவு போன்ற கூறுகளை எண்ணிப்பார்த்துக் கொடுக்கச் சொல்கிறார். வாங்குபவன் எதற்குக் கேட்கிறான்? என எண்ணிப்பார்த்துத் தரவேண்டும்.

ஒருவன் பணமோ பொருளோ கேட்டால் ஆழ்ந்து எண்ணிப் பார்த்துக் கொடுங்கள்.



வள்ளுவக் கட்டளை இது; அதனால்தான் ஈக என்ற சொல்லைப் பெய்கிறார். பிறருக்கு உதவ எண்ணினால் ஆய்ந்து பார்த்து உதவ வேண்டுமாம்!

அதுவே பொருளைத் தக்கவாறு வகுத்துச் செலவு செய்யும் திறம் ஆகும். நன்கொடைகளுக்கும் இது பொருந்தும். கொடுக்கும் மனமில்லாக் கஞ்சனுக்குக் குறள் வேண்டாம்.

கொடுக்கும் நெஞ்சு படைத்த ஈர நெஞ்சினர் அளவறிந்து ஈய வேண்டும்! வாழ்க வள்ளுவம்!

– புலவர் த.கு.கருணாநிதி


## மித்ரா டைம்ஸ் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமா?

பத்தாம் ஆண்டின் துவக்கத்தில் அடியெடுத்து வைக்கும் மித்ரா டைம்ஸ் இலட்சக்கணக்கான வாசகர்களோடு பயணிக்கிறது. இதழ்களில் இடம் பெறும் செய்திகள், கட்டுரைகள் பயனுள்ளதாகவும் தங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாய் இருப்பதாகவும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

தாங்கள் அறியாத செய்திகள், புதிய தகவல்களையும் மித்ரா டைம்ஸ் எங்களுக்கு வழங்குகிறது என்பது வாசகர்களின் கருத்து.

மித்ரா டைம்ஸ் சந்தாதாரராக தாங்கள் இதுவரை ஆகவில்லையென்றால் உடனே செலுத்துங்கள்.

**ஆயுள்சந்தா : ரூ.2400.00**

**ஆறாண்டு சந்தா : ரூ.1440.00**

**ஆண்டு சந்தா : ரூ.240.00**

மேலும் விபரங்களுக்கு: **044-23743007/8**

தொகை செலுத்த வேண்டிய விபரம்:

| | | |
|---|---|---|
| Name | : | MITRA TIMES |
| A/C no | : | 50200012576292 |
| Bank | : | HDFC Bank |
| Branch | : | T.Nagar |
| IFSC | : | HDFC0000206 |



# வேலை கொடு

ஒருவன் தவம் செய்து இறைவனிடம் தன் ஆசைகளையெல்லாம் நிறைவேற்ற ஓர் ஆள் வேண்டும் என்று கேட்டான். அதற்கு இறைவன், நீ கேட்ட வரத்தைத் தருகிறேன். ஆனால், நீ அவனுக்குத் தொடர்ந்து ஏதாவது வேலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். இல்லையென்றால் அவன் உன்னை விழுங்கி விடுவான்.. என்றார். அவனும் சரியென்று சம்மதித்தான். உடனே இறைவன் அவனுடன் ஒரு பூதத்தை அனுப்பி வைத்தார்.

பேராசை கொண்ட அவன், அந்தப் பூதத்திடம், எனக்கு இந்த நாட்டு அரசன் வசிப்பதை விடப் பெரிய அரண்மனை ஒன்று வேண்டும் என்றான். கண் மூடிக் கண் திறப்பதற்குள் அழகிய அரண்மனை ஒன்றைக் கட்டிக் கொடுத்தது பூதம். அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். மேலும் மேலும் அவன் ஆசைப்பட்டவற்றையெல்லாம் உடனுக்குடன் நிறைவேற்றிவிட்டு, வேலை கொடு... வேலை கொடு... இல்லையென்றால் உன்னை விழுங்கி விடுவேன் என்று பூதம் அவனை மிரட்ட ஆரம்பித்தது. பூதத்துக்கு வேலை கொடுப்பதே அவனுக்கு வேலையாகிப் போய் விட்டது. அவனால் முடியாமல் போய் மிகவும் சோர்வடைந்து போனான்.

பூதம் அவனை விரட்ட ஆரம்பித்தது. மீண்டும் அவன் இறைவனிடம் ஓடினான். என்னைக் காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங்கள்... என்று கதறினான். மனமிறங்கிய இறைவன், அவனை விரட்டி வந்த பூதத்திடம், நான் சொல்லும் வரை இந்தப் படிகளில் ஏறி ஏறி இறங்கிக் கொண்டு இரு என்று கட்டளையிட்டார். பூதமும் இறைவன் சொன்னபடி, படிகளில் விடாமல் ஏறி, இறங்கிக் கொண்டேயிருந்தது. பேராசைக்காரன் நிம்மதிப் பெருமூச்சு விட்டு தப்பித்தோம் பிழைத்தோம் என்று எண்ணியபடி, இறைவனை வணங்கிவிட்டுச் சென்றான். அந்தப் பூதம் போலத்தான் நமது மனமும்.. நமது மனம் நமக்குத் தேவையானவற்றை அடைய வழியைக் காட்டும். பேராசைப்பட்டால் நம்மையே அழித்து விடும். நீதி :பேராசை அழிவை தரும்.

**எம்.எஸ்.அண்ணாதுரை,**
**திருவள்ளுவர் மன்றம்**

# ஆசிரியர் பங்கேற்ற நிகழ்ச்சிகள்



20.09.2024 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்ற மாண்புமிகு நீதிபதி திரு.எம்.வி.முரளிதரன் - திருமதி விஜயகுமாரி இணையரின் இல்லத்து செல்லராணி மகிழினியின் முதலாம் பிறந்தநாள் நிகழ்ச்சியில் பங்கு கொண்டு மித்ரா டைம்ஸ் ஆசிரியர் திரு.எம்.எஸ். மூர்த்தி அவர்கள் வாழ்த்தினார்.



சென்னை ராணி மெய்யம்மை திருமண மண்டபத்தில் நடைபெற்ற திரு. முருகேசன்.ஐ.ஏ.எஸ்., அவர்கள் இல்ல திருமணத்தில் திரு. மணிவாசகம் ஐ.ஏ.எஸ்., திண்டுக்கல் மாவட்ட நீதிபதி திரு. கருணாநிதி, தொழிலதிபர் ராதா எக்ஸ்போர்ட்ஸ் திரு. கிருஷ்ணன் ஆகியோர் பங்குபெற்றனர். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மித்ரா டைம்ஸ் மாத இதழ் ஆசிரியரும் மித்ரா குழும நிறுவனங்களின் தலைவருமான திரு.எம்.எஸ்.மூர்த்தி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.





திண்டுக்கல்லில் நடைபெற்ற ஆட்டோ மைண்ட் இன்போடெக் பிரைவேட் லிமிடெட் திறப்பு விழாவில் நீதிபதி.திரு.கே.கருணாநிதி அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கு பெற்றார்.

MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/ 2022-2024
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2022-2024
POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 October 2024

# ஆசிரியர் அவர்களின் பிறந்தநாள் நெகிழ்ச்சி!





ஆசிரியர் திரு எம். எஸ். மூர்த்தி அவர்கள்15.09.2024 அன்று தன்னுடைய பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கொளத்தூர் விநாயகபுரத்தில் அமைந்திருக்கும் சமர்ப்பணா என்ற மனநலம் குறைந்த மற்றும் ஆதரவற்றோர் இல்லத்திற்கு சென்றார். அங்குள்ளவர்களோடு பேசி மகிழ்ந்து விருந்தளித்தார். இந்த நிகழ்ச்சி தமக்கு மன மகிழ்ச்சியை தந்தது என்று நெகிழ்ச்சியோடு குறிப்பிட்டார்.

Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY